janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்


மலர் 85 | 2022 மே 15 - 21 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 06





**பல்லக்கு அரசியலும்...**
“சொறி பிடித்தவன் கையும், இரும்பு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது” என்று ஒரு பழமொழி உண்டு. அப்பழமொழி மிக எதார்த்தமானது; உண்மையானது. >>> ப 02

**சாங்கியம்**
இந்தியத் தத்துவங்களை உலகாயதத்திற்கு அடுத்தபடியாக பொருள்முதல்வாத கூறுகளைக் கொண்ட தத்துவம் சாங்கியமாகும். இதனை உருவாக்கியவர் கபிலர் எனப்படுகிறது. ஆனால், இவர் எழுதிய நூல்கள் >>> ப 05

**போராட்டங்கள் எழும்**
உணவுக்கு மட்டும் வாழ்பவன் அல்ல மனிதன் என்றார் ஏசு கிறிஸ்து. ஆம்! மனிதனின் நாகரிக, கண்ணிய வாழ்விற்கு வேலை வாய்ப்பும் வருமானமும் அவசியம் தானே! இந்திய சுதந்திரத்திற்கு முன்பே நமது வறுமைக்கு காரணமான காலனியாதிக்க >>> ப 06







# பழைய ஓய்வூதிய திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு தீர்மானம்




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு கூட்டம் 09.05.2022ல், பாலன் இல்லத்தில், தர்மபுரி எஸ்.தேவராஜன் தலைமையில் நடைபெற்றது.**

கூட்டத்தில் மாநிலச் செயலாளர் இரா. முத்த ரசன், துணைச் செயலாளர்கள் கே.சுப்ப ராயன் எம்.பி., மு.வீரபாண்டியன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் உள்ளிட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1. முதலமைச்சரின் அறிவிப்பிற்கு வரவேற்பு**

நீர்நிலை புறம்போக்கு, மற்றும் அரசின் ஆட்சேபகரமான இடங்கள் என்ற வகைப் படுத்தப்பட்ட இடங்களில் குடிசை அமைத்தும் வீடு கட்டியும் வசித்து வருபவர்களுக்கு மாற்று இடம் வழங்காமல் அவர்கள் அப்புறப்படுத்தபட மாட்டார்கள் என முதலமைச்சர் பேரவையில் அறிவித்திருப்பதை கூட்டம் வரவேற்கின்றது.

நீர்நிலை புறம்போக்கு, மற்றும் ஆட்சேபனைக் குரிய இடங்கள் குறித்து உயர்நிலை ஆய்வுக்குழு அமைத்து கள நிலைமையினை புலதணிக்கை செய்து நிலங்களை மறுவகைப்படுத்தப்பட வேண்டும். உயர்மட்ட குழுவின் ஆய்வில் பொது தேவைக்கோ அல்லது இன்றியமையா தேவைக்கானது என்று வரையறுக்கப்படும் இடங்களில் வசித்து வருபவர்களுக்கு மாற்று இடமும், மறு வாழ்வு நிதியும், வீடுகட்ட பணமும் வழங்கிய பிறகே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இன்றியாமையா உயர்மட்ட குழு வசிப்பவருக்கே அந்த இடத்தை வழங்கலாம் என்று முடிவு செய்யும் இடங்களை அப்பகுதியில் வசித்து வரும் குடும்பங்களுக்கு மனைப்பட்ட வழங்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசை கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**2. ஓய்வூதியம்**

அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பாக திமுக தலைமையில் ஆட்சி அமைந்தால் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படும் என்று தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. புதிய ஆட்சியில் பழைய ஓய்வூதிய திட்டம் நடைமுறைக்கு வரும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த அனைவருக்கும் நிதியமைச்சரின் விளக் கம் ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. நிதியமைச்சரின் விளக்கம் எந்த வகையிலும் ஏற்றத்தக்கதல்ல, சரியுமல்ல. இதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு தேர்தல் அறிக்கையில் அளித்த உறுதிமொழிப்படி அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அங்கன்வாடி, சத்துணவு பணியாளர்கள் அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துமாறு மாநில நிர்வாகக்குழு கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

**3. பட்டினப் பிரவேசம்**

நாகரீக உலகில் மனிதனை மனிதன் சுமக்கும் பல்லக்குப் பயண பட்டினப் பிரவேச நிகழ்வை தர்மபுரம் ஆதினம் பிடிவாதமாக நடத்துகிறது. பகுத்தறிவு சிந்தனையோடு மதச்சார்பற்ற பண்புகளை அடிப்படையாகக் கொண்ட சட்டத்தின் ஆட்சியை சமூக நீதி பாதையில் நடத்தப்படும் அரசு பட்டினப் பிரவேசம் நிகழ்வுக்கு தடை விதித்து உத்தரவிட்டது. இதை நாகரீக சமுகத்தின் அனைத்துப் பகுதியினரும் வரவேற்றனர். இந்நிலையில், மடாதிபதிகளும், ஆதீனங்களும் முதலமைச்சரை நேரில் சந்தித்து பேசிய பிறகு, அரசு, பட்டினப் பிரவேச நிகழ்வுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை விலக்கிக் கொண்டது. இது அரசு கடைப்பிடித்து வரும் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் ஒரு பின்னடைவாகும்.

ஆதினங்களும், மடங்களும் தங்கள் வழக்காறுகளை சீர்திருத்தி வந்திருக்கும் வரலாற்றை மறந்து, மனிதர்களை கொண்டு பல்லக்கு தூக்கும் பட்டின பிரவேசத்தை நடத்துவதில் காட்டும் பிடிவாதம் வகுப்புவாத, மதவெறி சக்திகளின் அழுத்தங்களை வெளிப்படுத்துகிறது. இது போன்ற நேர்வுகளில் அரசு கொள்கையில் தடுமாறாமல், உறுதி காட்ட வேண்டும் என்று மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**4. டி.பி.ஜெயின் கல்லூரிக்கு சிறப்பு அலுவலரை உடனே நியமித்திடுக !**

சென்னை துறைப்பாக்கத்தில் உள்ள டி.பி.ஜெயின் கல்லூரி அரசு உதவி பெரும் கல்லூரியை சுயநிதி கல்லூரியாக மாற்றப்படுவது அதிர்ச்சி அளிக்கிறது.

ஏழை மாணவர்களும் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக தான் கல்லூரிக்கு நிலமும், நிதியும் அரசே வழங்கியது. அரசு உதவியை பயன்படுத்தி கல்லூரியை மேம்படுத்தி, பின்னர் மாணவர் சேர்க்கை அதிகமானதால், கல்லூரியை சுயநிதி கல்லூரியாக மாற்றும் முயற்சியில் நிர்வாகம் ஈடுபட்டு வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளாக அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணம் ரூ.825. ஆனால், ரூ.42,000 வரை வசூலிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கையும் நடைபெறவில்லை. புதிய பேராசிரியர்கள், பணியாளர்கள் கடந்த பல ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. மேலும், இப்படிப்பட்ட முறைகேடுகளை தட்டிக்கேட்டதற்காக 11 பேராசிரியர்கள் நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அரசு உதவி பெறும் கல்லூரியாக துவங்கி, அரசு நிதியில் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பின்னர் அக்கல்லூரியை கொஞ்சம் கொஞ்சமாக சுயநிதி கல்லூரியாக மாற்றும் போக்கு தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது.

டி.பி.ஜெயின் கல்லூரி சுயநிதி கல்லூரியாக மாற்றப்பட்டால் தமிழ்நாட்டிலுள்ள சுமார் 160 அரசு உதவிபெறும் கல்லூரிகளின் நிலையும் கேள்விக்குள்ளாகும். இது ஒடுக்கப்பட்ட மாணவர்களின் உயர்கல்வி பெறுவதை தடுத்து சமூக நீதியை கேள்விக்குள்ளாக்கும்.

எனவே, டி.பி.ஜெயின் கல்லூரியை அரசு உதவி பெறும் கல்லூரியாகவே நீடிக்கவும், நடப்பு கல்வியாண்டில் உடனடியாக மாணவர் சேர்க்கையை தொடங்கிடவும், ஒரு சிறப்பு அலுவலரை தமிழ்நாடு அரசும், உயர்கல்வி துறையும் நியமிக்க வேண்டுமென்று இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## எதிரும் புதிரும்

**ஆங்கிலம் பேசும் அளவிற்கு இந்தி பேச முடியவில்லை என்பது வருத்தமாக உள்ளது**
– நிர்மலா சீதாராமன்



**சிலிண்டர் விலை 1050 ரூபா தாண்டி வித்துகிட்டு இருக்கு... அதபத்தி கொஞ்சம் வருத்தப்படுங்க மேடம்!**
– சாமானிய மக்கள்

## நவீன நாசிச சக்திகளை முறியடித்திட ஒன்றுபடுவீர்!

● டி.ராஜா அறைகூவல்

நாட்டையும், அரசியலமைப்புச் சாசனத்தையும், பொருளாதாரத்தையும் அழித்திட துடிக்கும் நவீன நாசிச சக்திகளை முறியடித்திட அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

1945 ஆம் ஆண்டு பாசிசம் முறியடிக்கப்பட்டது. வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்வின் 77வது ஆண்டைக் குறிக்கும் வண்ணம் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் குழுமியிருந்த தோழர்கள் மத்தியில் டி.ராஜா உரையாற்றினார். பாசிசத்துக்கு எதிரான போரில் அப்போதைய சோவியத் ஒன்றியத்தின் மகத்தான தலைமை குறித்து அவர் விளக்கமாக எடுத்துரைத்தார்.

முன்னதாக, இந்த நாளின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து கட்சியின் தேசியக் குழு செயலாளரான டாக்டர் பி.கே.காங்கோ உரையாற்றினார். இக்கூட்டத்தில் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர்கள், இளைஞர் மற்றும் மாணவர் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் கட்சி அலுவலக ஊழியர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக சர்வதேச கீதம் பாடப்பட்டது.

கட்சிக் கடிதம்



# பல்லக்கு அரசியலும் பஜனைக் கூட்டமும்



**பேரன்புமிக்க தோழர்களே!**

**“சொறி பிடித்தவன் கையும், இரும்பு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது” என்று ஒரு பழமொழி உண்டு. அப்பழமொழி மிக எதார்த்தமானது; உண்மையானது.**

கைகளில் சொறி சிரங்குகளை உடையவன் எப்பொழுதும், எதனைப் பற்றியும் கவலை கொள்ளாது, எதிரே இருப்பவர்கள் அல்லது சுற்றி இருப்பவர்கள் தனது செயலைக் கண்டு அருவருப்படைவார்கள் என்பது குறித்து எல்லாம் கவலைப் படமாட்டான். எப்போதும், எந்நேரமும் சொறிந்து கொண்டே இருப்பான். தனது கைகளில் உள்ள சிறு, சிறு கொப்பளங்களை பிதுக்கியபடியே இருப்பான். பிறர் முகம் சுளிப்பது குறித்தோ, தனது அருவருக்கத்தக்க செயலை நிறுத்த மாட்டான்.

அத்தகைய அருவருக்கத்தக்க சொறி பிடித்தவனைப் போன்றுதான், வகுப்புவாத சக்திகள் தங்களின் அருவருக்கத்தக்க செயலை நிறுத்த மாட்டார்கள்.

விலைவாசி உயர்வு உச்சத்திற்கு சென்றுள்ளது. நாட்டில் உள்ள ஒட்டு மொத்த மக்களும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

அவர்களது துன்ப துயரம் குறித்து ஒன்றிய அரசு கவலைப் படவில்லை. மாறாக மேலும், மேலும் விலைகளை ஒன்றன்பின் ஒன்றாக உயர்த்தியவாறு உள்ளது.

சமையல் எரிவாயு விலை அண்மையில் இரண்டு முறை உயர்த்தப்பட்டு ரூ.1015ஐ எட்டியுள்ளது.

அதேபோன்று ஹோட்டல் மற்றும் தேநீர் கடைகளுக்கு பயன்படுத்தும் வணிக வகை சிலிண்டர்களின் விலையும் இரண்டு முறை உயர்த்தப்பட்டுள்ளது.

இவைகள் போன்றே பெட்ரோல் டீசல் விலைகளும் உயர்ந்தபடியே உள்ளன. இவைகள் குறித்து எல்லாம் கவலைப் படவில்லை. மாறாக இவைகளில் இருந்து மக்களை திசை திருப்பும் காரியங்களையே தொடர்ந்து செய்து வருகின்றனர்.

அவர்களின் முயற்சிகள் ஒவ்வொன்றாக தோற்றுப் போகின்றது. அவர்களின் அறிவிப்புகளை மக்கள் நிராகரிக்கின்றார்கள்.

ஒவ்வொன்றும் நிராகரிக்கப்பட்ட நிலையில் மீண்டும் மீண்டும் புதுப் பிரச்சனையை தேடி கண்டுபிடித்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் பெறும் முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்.

மதம், சாதி, மொழி என்று ஏதேனும் ஒன்றை ஊதிப் பெரிதாக்கி அரசியல் செய்வது மட்டுமல்ல – மக்கள் ஒற்றுமையை சீர்குலைத்து, பதற்றத்தை உருவாக்கியபடியே உள்ளனர்.

அமைதி கூடாது, மக்கள் ஒற்றுமை கூடாது இதுவே சங் பரிவாரங்களின் அன்றாட அரசியல் பணியாகும்.

தங்களின் செயல்பாடுகள் அருவருக்கத்தக்கது என கருதாமல், மீண்டும் மீண்டும் சொறி சிரங்கு பிடித்தவன் போன்று ஏதாவது ஒன்றைச் சொல்லி சொறிந்து கொண்டே இருப்பார்கள்.

தற்போது அவர்கள் பல்லக்கு அரசியலை மேற்கொண்டுள்ளனர்.

மயிலாடுதுறை அருகிலுள்ள தருமபுரம் ஆதீனத்தை பல்லக்கில் தூக்கி சுமப்பது– இது காலங்காலமாக நடந்து வருகின்றது என்று கூறி மனிதனை மனிதன் சுமக்கும் அந்த பல்லக்கு தூக்கும் காரியத்தை செய்தே தீருவோம் என்றார்கள்.

இத்தகைய நிலை காலப் பொருத்தமற்றது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு பட்டினப் பிரதேசத்திற்கு தடை விதித்துள்ளது. அரசின் நடவடிக்கையை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். உறுதியாக இருக்க வேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறோம்.

அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக சங் பரிவாரங்கள் ஆஹா, ஓஹோ என வானத்திற்கும் பூமிக்கும் குதியாய் குதிக்கின்றது.

மன்னார்குடியில் உள்ள ஜீயர் தடை செய்தால் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பொது வெளியில் நடமாட முடியாது என்று அகங்காரத்துடன் மிகத் திமிராக மிரட்டல் விடுக்கிறார்.

அரசையே மிரட்டுகின்ற அளவிற்கு உச்சத்திற்கு சென்று இருக்கின்றார். இவரது அறிவிப்பு மோதலை உருவாக்கும் வெறிபிடித்த பேச்சாகும்.

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலையார் நானே சென்ற பல்லக்கு தூக்குவேன் என்கிறார்.

எளிய மக்கள் பிறரை தூக்கி தங்களைத் தாழ்த்திக் கொள்வதை கைவிட கூடாது என்கிற கொள்கையில் அகப்பட்டுக் கொண்டதால் சகோதரர் அண்ணாமலையிடம் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

மற்றொரு பாஜக தலைவரான எச்.ராஜா பல்லக்கு தூக்குகிற இடத்திற்கு செல்வேன் என கூறுகின்றார்; தூக்குவேன் என்று கூறவில்லை; கூறமாட்டார்; தூக்கவும் மாட்டார்.

மதுரை ஆதீனம் நான் தருமபுரத்தில்தான் படித்தேன் – அங்கு சிஷ்யன் – ஆகவே நான் பல்லக்கு தூக்குவேன் என உரத்த குரல் கொடுக்கின்றார்.

பட்டினப்பிரவேசம் – பல்லக்குத் தூக்குதல் இதில் எல்லாம் யார்? யார்? பங்கேற்கிறார்கள் .

பல்லக்கை தூக்குவேன் என்று குரல் எழுப்புபவர்கள் யார்? யார்? என்பதனை எல்லாம் கவனித்துப் பாருங்கள்.

பல்லக்கு பெயரால் கலகமூட்ட நினைப்பவர்கள் நின்று நிதானிக்க வேண்டும்.

**பட்டினப் பிரவேசம் என்கிற பெயரால் கலகம் செய்வது என்று நீங்கள் முடிவு எடுத்தால் அதனை தமிழக மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதனை நன்கு அறிவார்கள்.**

கடந்தகால பல்லக்கு கதை உங்களுக்கு (சங்பரிவாரங்களுக்கு) நினைவில்லாமல் இருக்கலாம் அல்லது அதனை தங்களின் வசதிக்கேற்ப மறந்துவிடலாம்.

அதனால்தான் நினைவூட்ட வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது என்ற முறையில் நினைவூட்ட விரும்புகின்றோம்; நிதானமாக கேளுங்கள்.

இந்து மதத்தின் தலைமைப் பீடமாக கருதப்படுகின்ற மடங்களில் ஒன்று காஞ்சி சங்கரமடம்.

இம் மடத்தில் பல சங்கராச்சாரியார்கள் இருந்துள்ளனர். தற்போதும் இருந்து வருகின்றனர். இவர்களில் ஒருவர்தான் ஸ்ரீல ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரியார். இவர் நூறு ஆண்டு காலம் வாழ்ந்தவர். இவருக்கு மக்களிடத்தில் நற்பெயர் உண்டு. இவரை ஒரு சிறந்த மனிதராகவே மக்கள் கருதினர்.

இவர் சுற்றுப்பயணம் எங்கு சென்றாலும் ரயில், அல்லது காரில் செல்ல மாட்டார் –

பல்லக்கில் தான் பயணம் செய்வார்–

அவர் பயன்படுத்திய பல்லக்கு என்பது மிக வித்தியாசமானதாக அமைக்கப் பெற்றிருக்கும்.

நீளமான ஒரே கம்பத்தில் பல்லக்கு வடிவமைக்கப் பட்டிருக்கும். கம்பம் மையமாக வைத்து – பல்லக்கை வடிவமைத்து – பல்லக்கின் உள்ளே சாமிகள் படுத்திருப்பார். பத்து, இருபது பேர் ஒருவர் பின் ஒருவராக பல்லக்கை சுமந்து செல்வார்கள்.

பல்லக்கு வருவதற்கு முன்பாக யானை, ஒட்டகம், பசுக்கள் முன்னே செல்லும்.

இவைகளுக்கு பின்னர்தான் பல்லக்கு வரும்.

வரும் வழிகளில் பக்தர்கள் பெரும் திரளாகக் கூடி கற்கண்டு, பழம் இவைகளோடு வரவேற்று அனைவரும் சாஸ்டாங்கமாக காலில் விழுவார்கள்.

யார் காலில் விழுவார்கள், பல்லக்கை சுமந்து வருபவர்கள் காலில் விழுவார்கள்.

பல்லக்கை தூக்கி வருபவர்கள் அனைவரும் மனு தர்மத்தின் படி சூத்திரர்கள் தான். காலில் விழுபவர்களும் சூத்திரர்கள் தான்.

மிக ருசியான கற்கண்டும், பழங்களும் பல்லக்கின் பின்னே வரும் குதிரை வண்டிக்கு சென்றுவிடும்.

பல்லக்கில் பவனி வந்த சங்கராச்சாரியார் அதனை கைவிட்டு – காரில் பயணம் செய்யத் தொடங்கினார்.

ஏன் கைவிட்டார்? அவரே கைவிட்ட பல்லக்கு இன்று அரசியலுக்காக மீண்டும் வருகின்றதா?

பெரியவர் உயிரோடு இருந்தபோது, தனக்கு அடுத்த வாரிசாக இருள்நீக்கி சுப்பிரமணியத்தை நியமனம் செய்தார் – இவர்தான் ஜெயேந்திர சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.

சங்கரமடத்தின் வாரிசு இடையில் எங்கோ ஓடிப் போய் விட்டார். எங்கே ஓடினார்? எதற்காக ஓடினார்? என்பது இன்றுவரை புரியாத புதிர் !

இவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இவர் ஓடிப்போன நிலையில் இவரது நம்பகத்தன்மை கேள்விக்குறியான நிலையில் தான் விஜயேந்திரர் மடத்தின் வாரிசாக நியமிக்கப்பட்டார். இவர்தான் தற்போது சங்கராச்சாரியாராக திகழ்கின்றார்.

மூத்தவர் கைவிட்ட பல்லக்கை இவர்களில் எவர் ஒருவரும் மீண்டும் பல்லக்கை தேடவில்லை. மாறாக சொகுசு கார்களில் தான் பயணித்து வருகின்றனர்.

நாகரீகம் கருதி கைவிடப்பட்ட பல்லக்கை – நாங்கள் மீண்டும் தூக்கி சுமப்போம் என மார்தட்டுவது எவ்வகை நாகரிகம்?

மனிதனை மனிதன் சுமப்பது என்பது, அவனது வாழ்க்கை முடிவுற்ற பின்னர், அவனது மூச்சு நின்ற பின்னர், பிணமான பின்னர் பாடைகட்டி தூக்குவதை மேற்கொண்டு வருகின்றார்கள்.

உயிருடன் இருக்கும் எவரையும் மற்றவர்கள் தூக்கிச் சுமப்பது அநாகரிகம் அல்லவா? அத்தகைய அநாகரிகத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டும் எனக் கோருவது பகுத்தறிவு தானா?


அநாகரிகத்தை கைவிடுங்கள், நாகரிக உலகத்துடன் இணைந்து வாழ முன்வாருங்கள்.

அருவருக்கத்தக்க அநாகரிகங்களைக்கொண்டு கலகம் செய்ய முற்படாதீர்கள்.

மக்கள் ஒற்றுமையை சீர்குலைத்து, தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிட துடியாய் துடிக்கும் பரிவாரங்களை அடையாளம் கண்டு அன்னியப்படுத்திட ஆயத்தமாவீர் !

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**



**இரா.முத்தரசன்**

## கோயில் இடங்களில் குடியிருப்பவர்கள்

# வீடுகள் கட்டிக்கொள்வதற்கும், மின்சாரம் பெறுவதற்கும் அரசு வாய்ப்பளிக்க வேண்டும்

## சட்டசபையில் க.மாரிமுத்து கோரிக்கை

**சட்டசபையில் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து பேசியதாவது:**

க.மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏற்கெனவே நடைபெற்ற கூட்டத்தில் எங்களுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் இருக்கின்ற பிரசித்திப் பெற்ற திருக்கொல்லிக்காடு கோயிலுக்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் நான் பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் பெரியநாயகி அம்மன் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. அதைச் சுற்றியிருக்கின்ற கிராமங்களில் கிட்டத்தட்ட 15க்கும் மேற்பட்ட அரசு பள்ளிகளும், தனியார் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவர்கள் அனைவரும் பள்ளிக் கல்வியை முடித்த பின், உயர் கல்விக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால், நீண்ட தூரம் உள்ள பட்டுக்கோட்டை, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டிக்கு செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய நிலையை அறிந்து, தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கல்லூரியைத் தொடங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு சேர்த்து, துறையின் சார்பில் அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருக்கோயில்களும், திருமடங்களும், அற நிறுவனங்களும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்று, அரசின் கட்டுப்பாட்டுக்குள் இதையெல்லாம் கொண்டு வந்தார்கள்.

ஆண்டவன் சன்னதியில் அனைவரும் சமம், சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்கள் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் வேண்டுமென்ற நீண்டகாலப் போராட்டத்தை தொடங்கினார். முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை நிறைவேற்றியவர். இப்போது சமூக நீதியில் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர், ஆகம விதிகளை படித்து தேர்ந்த 24 பேரை பல்வேறு ஆலயங்களில் இன்றைக்கு அர்ச்சகர்களாக நியமித்து சாதனை படைத்திருக்கிறார்கள், அதனை இந்த நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

ஒருகொள்கையைவடிவமைக்கின்றபோது,நிருவகிக்கின்றபோது அதற்கு மக்களுடைய ஆதரவு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அதனுடைய வெற்றிகளெல்லாம் அடைந்திருக்கின்றன. இன்றைக்கு திருக்கோயில்களுக்கும், திருமடங்களுக்கும், அற நிறுவனங்களுக்குமான சொத்துகள் எல்லாம், அசையாச் சொத்துகளெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் என்பதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாற்றுக் கருத்துகள் இல்லை.

அறநிலையத் துறைக்குச் சொந்தமான சொத்துகளெல்லாம் எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது என்று துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



இன்றைக்கு 127,736 பேரிடம் குத்தகைக்கு நிலங்கள் இருப்பதாகவும், 22,660 கட்டடங்கள் இருப்பதாகவும், 33,665 மனைகள் இருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், நிர்வகித்து கொண்டிருப்பவர்களை நாம் கவனிக்க வேண்டிய அவசியம் இன்றைக்கு அறநிலையத் துறைக்கு இருக்கின்றது. மேலும், கொள்கைவிளக்கக்குறிப்பில்ஒருவரியும்சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதாவது, ஆக்கிரமிப்பாளர்கள் என்று அழுத்தமாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தாய் திருநாட்டில் ஒருவன் சுய மரியாதையோடும், பகுத்தறிவோடும் வாழ வேண்டுமென்று சொன்னால், அவனுக்கு ஒரு வீடு தேவைப்படுகின்றது. அந்த வீடு தேவை என்பதனை இந்த ஆட்சி மறுக்காது என்று நான் கருதுகிறேன். இதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை நானும் நம்பிக் கொண்டுதான் இருக்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பலமாக நம்புகிறது. ஆனால், அங்கிருந்த அறங்காவலர் குழுத் தலைவர்களிடமும், செயல் அதிகாரிகளிடமும், பரம்பரையாக இருந்த அறங்காவலர்களிடமும் மண்டியிட்டு வேண்டி, நான் வாழ்வதற்கு எனக்கு ஒரு சிறிய மனை வேண்டுமென்று கேட்டு வாங்கிய அந்த இடத்திற்கு அவன் காலம் காலமாக பகுதியும் கட்டியிருக்கிறான். அந்த இடத்தில் வீடும் சொந்தமாகக் கட்டியிருக்கிறான். கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் 32/ஏ என்ற பிரிவின்கீழ் ஒரு வாடகையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த வாடகை அந்தப் பகுதியைவிட பல மடங்கு கூடுதலானது. இதே அவையில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பல்வேறு உறுப்பினர்கள் இந்தச் சட்டப் பிரிவு கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. உங்கள் ஆட்சியில் கொண்டுவரப்படவில்லை. அந்தச் சட்டத்தை அமல்படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டும். காரணம், இது நியாயமான வாடகை அல்ல. அநியாயமான வாடகை. அதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். குறிப்பாக, சிவபுண்ணியம் போன்ற உறுப்பினர்களெல்லாம் இந்த அவையிலே அதை பதிவு செய்திருக்கிறார்கள். அப்போது, முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, 32ஏ–ன்கீழ் நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகையை நிறுத்தி வைத்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு 456, 296 என்ற அரசாணைகளின்படி, அந்தப் பகுதியில் இருக்கின்றவர்களின் வாழ்வாதாரத்திற்கு தகுந்தாற்போல ஒரு நியாயமான வாடகையை நிர்ணயம் செய்துகொள்ளலாம். பின்னர், ஆட்சிக்கு வந்தவர்கள் 34–ஏ என்ற அடிப்படையில், இன்றைக்கு திட்டமிட்டு அந்த வாடகையை உயர்த்திவிட்டார்கள். இன்றைக்கு பல இடங்களில் கூடுதலாகிவிட்டது. அவள் வாழ்நாளிலே சம்பாதிக்க முடியாத அளவுக்கு ஒரு பெரிய வாடகை அவன்மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

1985ல் இனாம் ஒழிப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த சட்டத்தின் மூலமாக அங்கேயிருக்கிற கிராம நத்தம், சர்க்கார் புறம்போக்கு, கருங்காணி, பட்டினத்தார் புறம்போக்கு போன்ற இடங்களெல்லாம் கோயில்களைச் சுற்றியிருக்கின்ற இடங்கள். அது கோயில் நிலத்திற்குச் சொந்தமானதல்ல. அன்றைக்கு அறியாமையால் அவர்களால் பட்டாக்களை வாங்க முடியவில்லை. ஆனால், இன்றைக்கு அது அரசாங்கத்தினுடைய சொத்து என்று வருகிறது. எனவே, அவர்களுக்குப் பட்டா வழங்க உடனடியாக உதவி செய்ய வேண்டும்.

அதேபோல, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் நிலங்களில் சாகுபடி செய்கிறார்கள். பல்வேறு இன்னல்களை அவர்கள் சந்தித்து கொண்டுதான் இருக்கிறார்கள். இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படுகிறார்கள். கோயில் பெயரில் இருப்பதால் அவர்களால் கடன் வாங்க முடியவில்லை, காப்பீடுகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும், கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். கருணை உள்ளத்தோடு விவசாயிகளை நீங்கள் அழைத்துப் பேசி, அவர்களின் குத்தகை பாக்கிகளை நீங்கள் தள்ளுபடி செய்து உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த இடத்தில் வசிப்பவர்கள் தங்களின் இடத்திற்கு பெயர் மாற்றம் செய்துதர வேண்டும் என்று கேட்டால் வீட்டையே எழுதி கேட்கிறார்கள். 131வது அரசாணையின்படி கோயில்களில் எழுதி கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஓர் இடத்திற்கு பெயர் மாற்றம் வேண்டுமென்று சொன்னால், இப்படிப்பட்ட நிகழ்வுகள் எல்லாம் இல்லாமல், சாதாரணமான ஏழையெளியவர்கள் அங்கே குடியிருக்கிறார்கள், கோயில் இடங்களில் குடியிருப்பவர்களுக்கு அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கும், மின்சாரம் பெறுவதற்கும் கருணை உள்ளம் கொண்ட இந்த அரசு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

# மாமேதை மார்க்ஸ் பிறந்தநாள் விழா

19ஆம் நூற்றாண்டின் இணையற்ற அறிவுலக ஆசான், பொதுவுடைமை தத்துவம் தந்த போராளி காரல் மார்க்சின் 204 வது பிறந்த நாள் விழா தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

**ஆம்பலாபட்டு:** தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆம்பலாபட்டில் மே 5 அன்று காரல் மார்க்ஸ் பிறந்த தினம், தியாகிகள் ஆறுமுகம், இரணியன், சிவராமன் நினைவுதின வாகனப் பேரணி, பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சிகள் ஆம்பலாபட்டு இலுப்பைத்தோப்பில் நடைபெற்றது.

வாகனப் பேரணியை தேசியக்குழு உறுப்பினர் கோ. பழனிசாமி தலைமையேற்று தொடங்கி வைத்தார். இதில் 200 இருசக்கர வாகனங்களிலும், 5 கார்களிலும், 3 டெம்போ வாகனங்களிலும் பேரணியில் கலந்து கொண்டனர். ஆம்பலாபட்டு தெற்கு, வடக்கு பகுதி முழுவதும் கொடிகள் ஏற்றி, மேதின முழக்கங்களுடன் பேரணி முடிவுற்றது.

இறுதியாக நடந்த பொதுக்கூட்டத்தில் மா.கருணாநிதி தலைமையில், கோ.பழனிசாமி, முத்து.உத்திராபதி, தினேஷ் சீரங்கராஜ், எச்.ஹமீம் முஸ்தபா, வீ.கல்யாணசுந்தரம், வாசு.இளையராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். ரெ.கல்யாணசுந்தரம் வரவேற்புரையாற்றினார். சா.மாரிமுத்து நன்றி கூறினார்.

**மதுராந்தகம்** : மாமேதை காரல்மார்க்ஸ் பிறந்த தினம் சிபிஐ மெய்யூர் கிளையில் கொண்டாடப்பட்டது. இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கே.வி.சேகுவாராதாஸ், கிளைச் செயலாளர் செ.இன்பராஜ், துணை செயலாளர் மு. நாகராஜ் மற்றும் இளைஞர் பெருமன்றத்தின் கிளைத் தலைவர் கே.அய்யனார், கிளை செயலாளர் எ.நவீன், விஸ்வா, அரவிந்தன் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**திருவாரூர்** : திருவாரூர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மார்க்ஸ் பிறந்தநாள் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. கட்சியின் நகரச் செயலாளர் எம்.ஏ.மாரியப்பன் தலைமை வகித்தார். மாமேதையின் திருவுருவப்படத்திற்கு கல்லூரி பேராசிரியர் அறிவழகன் மலர்மாலை சூட்டினார். வீ.தர்மதாஸ் காரல்மார்க்ஸின் வாழ்க்கை வரலாற்றை நினைவு கூர்ந்தார்.





நகரக்குழு உறுப்பினர்கள் பாலதண்டாயுதம், இளம்பரிதி, கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் சந்திரசேகரன், மாவட்ட பொருளாளர் அன்பழகன் மலர்தூவி காரல் மார்க்சை சிறப்பித்தனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 06

# தவறாக பாடப்பட்ட தமிழ்த் தாய் வாழ்த்து!

## தமிழக அரசே நடவடிக்கை எடுத்திடு!

கட்சி வித்தியாசமின்றி எல்லோரையும் எள்ளல் நடையில் தோலுரித்த சோ, தவறாமல் நடத்திய துக்ளக் ஆண்டு விழாக்களில் பல்வேறு கட்சி களை சார்ந்த மற்றும் அரசியல் ஆர்வமுள்ள ஏராளமானோர் பங்கு பெறுவர்.

பின்னாட்களில் அவரே பாரதிய ஜனதா அரசியலில் கரைந்து போனார். அவருக்குப்பின் வந்துள்ள, ஆர்.எஸ்.எஸ்.ஸின் இந்துத்துவ மதவெறி தத்துவத்தில் ஊறிப் பெருத்த எஸ்.குருமூர்த்தி அண்மையில் ஆடம்பரமாக துக்ளக் ஆண்டு விழாவை நடத்தி இருக்கிறார். அது பாரதிய ஜனதாவின் பிரச்சார மேடை தான். இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அதில் உரையாற்றியிருக்கிறார்.

“தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு ஓரவஞ்சனை செய்வது போல இங்கு பேசப்படுவது உண்மையில்லை. எல்லா நிதிகளையும் வழங்கி விட்டோம், இரண்டே மாதம்தான் பாக்கி” என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் மார்ச் 15ஆம் தேதி நாடாளுமன்ற மாநிலங்களவையில், உறுப்பினர் வில்சன், ஜி.எஸ்.டி. இழப்பீடு நிலுவை உட்பட 38 வகையான தலைப்புகளில், ஒன்றிய அரசாங்கம் தமிழ்நாட்டுக்கு 20,287.38 கோடி தர வேண்டும் என்று புள்ளி விவரங்களோடு பேசியிருக்கிறார். அடுத்த நாள் பதிலளித்த நிர்மலா சீதாராமன் ஜி.எஸ்.டி. இழப்பீட்டு தொகை மட்டும் தமிழ்நாட்டுக்கு 6,733 கோடி தரவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். ஒரு நிதி அமைச்சருக்கு குறைந்தபட்சம் நிதி விஷயத்திலாவது நாக்குச் சுத்தம் வேண்டாமா?

தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றிய அரசின் திட்டங்கள் கூடுதலாக வேண்டும் என்று ஒரு மாநில அரசு கேட்பதென்ன குற்றமா? நமது மாநிலம் அதிக வரி செலுத்துகிறது என்று மாநில அரசு சொல்வது உண்மைதானே? மாநில அரசின் கூற்றை இட்டுக்கட்டித் திரித்து,

“அதிக வரி கட்டுவதால் அதிக திட்டங்கள் வேண்டும் என்று கேட்பது பிரிவினைவாதம்“ என்று தீ மூட்டுகிறார் நிர்மலா.

இவர் கர்நாடகாவிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப் பட்டவர். பெங்களூருவில் கூட்டம் போட்டு, கர்நாடகாவுக்கு அதிக நிதி வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் கேட்டால் அது பிரிவினைவாதம் என்று அம்மாநில அரசுக்கு எதிராகப் பேசும் தைரியம் இவருக்கு உண்டா?

அதே நேரத்தில் “தமிழ் நாட்டில் கொங்கு மண்டலம் தான் அதிக வரி கட்டுகிறது” என்று சொல்லி தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்களுக்கு எதிராக கொங்கு மண்டலத்தை நிறுத்த முயற்சிக்கிறார். இதென்ன சிறியர் செய்கை!

ஏற்கனவே எல்.முருகன் ஒன்றிய அமைச்சராகப் பதவி ஏற்ற போது, கொங்கு நாடு என்று போட்டதும் பிறகு அது தட்டச்சுத் தவறு என்று சமாளித்ததும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல; தன் சுய அரசி யல் லாபத்துக்காக கொங்கு மண்டலத்தை தமிழ்நாட்டில் இருந்து அந்நியப் படுத்தும் திட்டம் பா.ஜ.க.வுக்கு இருக்கிறது என்பதை நிர்மலாவின் பேச்சு வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்தி பேசுகிற தனிநபர் உரிமையை திராவிட அரசியல் தடை செய்து விட்டதாம். அதனால் அம்மையாரால் ஆங்கிலத்தைப் போல இந்தியில் பேச முடியவில்லையாம்! ஏகமாய் வருத்தப்பட்டிருக்கிறார். ஆனால் அதே கூட்டத்தில், 30 ஆண்டுகளுக்கு பின்பு முதல் முதலாக தமிழ்நாட்டுக்கு வந்து, கூட்டத்தில் முழுவதுமாக தமிழில் பேசியதாகவும் கூறி, தாய்மொழி மறக்குமா என்று ஆனந்தப்பட்டு இருக்கிறார். தமிழ் நாட்டுக்கு வெளியே சிறுவயதில் இருந்து வாழ்ந்த அவரை, இந்தி கற்க கூடாது என்று திராவிட அரசியல் எப்படி தடுத்திருக்க முடியும்?

விழா துவக்கத்தில், தமிழ்த் தாய் வாழ்த்து என்று சொல்லி பாடிவிட்டு, இது தி.மு.க.வால் எடிட் செய்யப்படாத முழுப்பாடல் என்று கூறினர். சீரிளமை திறம் வியந்து என்பதற்கு முன்பு மனோன்மணியம் சுந்தரனார் “ஆரியம்போல் வழக்கொழிந்து சிதையா” என்ற சொற்களை எழுதி இருக்கிறார். தமிழ்த்தாய் வாழ்த்தாக தமிழ்நாடு அரசு அங்கீகரித்த போது அந்த சொற்களை நீக்கி விட்டது. எனவே அது தமிழ்த் தாய் வாழ்த்து அல்ல. அதையும் சேர்த்து பாடி வட மொழிக்கு எதிராக தமி ழர்கள் நிற்கிறார்கள் என்று சித்தரிக்க யோக்கியமற்ற முயற்சியை சங்கிகள் மேற்கொள்கிறார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்தைத் தவறாகப் பாடிய துக்ளக் இதழ் பொறுப் பாளர்கள் மீது தமிழ்நாடு அரசு சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எங்களை எதிர்த்து நிற்க ஆளே இல்லை என்ற ஆணவம் பேசியவர்கள் தலைதெறிக்க ஓட, தென்னிலங்கை தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

வெறுப்பூட்டி, பிரித்து மோத வைத்து, அதனால் அதிகாரத்திற்கு வரும் நரித்தந்திரம், நீண்ட காலத்துக்கு மக்களிடம் எடுபடாது.

# உலகக் குடிமகன் நேரு




**இந்தியாவின் முதல் பிரதமரான நேரு மாநில முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதினார்.1947, அக்டோபர் 15 ஆம் தேதி முதல் கடிதத்தை எழுதத் துவங்கி 1963 டிசம்பர் 21 கடைசிக் கடிதத்தை முடித்தார்.**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியும், பதினைந்தாம் தேதியும் எழுதப் போவதாக அறிவித்து இறுதி வரை அந்தக் கடிதங்களை எழுதியுள்ளார். ஏறத்தாழ 400க்கு மேல் எழுதப்பட்ட கடிதங்களில், மாதவ் கோஸ்லா என்ற அறிஞர், இன்றைய அரசியல் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான சுமார் 134 கடிதங்களை தொகுத்து ‘Letters for a Nation’ என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.

‘ஒரு தேசத்திற்கான கடிதங்கள்’ என்னும் பெயரில் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த நா.வீரபாண்டியன் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதை வெகு ஆண்டுகளுக்கு முன்பாகவே சொன்னவர்கள் தமிழர்கள். ‘எல்லா உயிர்களையும் தம்மைப்போல எண்ண வேண்டும்‘ என்று சொன்னவர் வள்ளலார். நவீன அரசியலில் இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக இருந்த நேரு, ஒரு நாட்டுப்பற்றாளராக, சர்வதேசியவாதியாக இருந்தார். எல்லா நாட்டு மக்களாலும் நேசிக்கப்பட்ட ஒரு தலைவராக நேரு இருந்தார்.



நா.வீரபாண்டியன்

காந்திஜியை விடவும் அதிகமான ஆண்டுகள் சிறையில் இருந்தவர் நேரு. ஒன்பது ஆண்டுகளுக்கு பதினேழு நாட்கள் குறைவாக சிறையில் இருந்தார். சிறையில் இருந்த போது எழுதிய ‘உலக சரித்திரம்‘, ‘சுய சரிதை’, ‘கண்டறிந்த இந்தியா’ ஆகிய மூன்றும், நேருவின் இலக்கிய ஆளுமையை எடுத்துக் காட்டுகின்றன.

சிறையில் இல்லாத போது, விடுதலைப் போராட்டக் களத்தில் போராடியிருக்கிறார். அது இல்லாதபோது வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்.

நேரு போன்ற ஆளுமை மிக்க தலைமை, கோரிக்கை வைக்கும்போதுதான் மற்ற நாடுகள் மீது செல்வாக்கைச் செலுத்தி, புதிதாக விடுதலைப்பெற்ற இந்தியாவிற்கான உதவிகளைப் பெற இயலும். இப்போது எந்த அண்டை நாடுகளுடனும் நமக்கு நல்ல உறவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஸ்டாலின் அழைப்பின் பேரில் சோவியத் யூனியன் சென்றார். செகோஸ்லாவாகியா நாட்டிற்குச் சென்றார். ஆனால் ஹிட்லர் அழைத்தும், ஜெர்மனி நாட்டிற்குப் போகமாட்டேன் என்று உறுதியாக மறுத்துவிட்டார். பாசிச கொள்கையைப் பின்பற்றும் ஜெர்மனி நாட்டிற்குச் செல்வது, உலக மக்களுக்கு தவறான செய்தியைத் தரும் என்று கூறிவிட்டார்.

அதேபோல இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியோடு கூட்டாக இருந்த இத்தாலிக்கும் செல்லவில்லை; ஜப்பானுக்கும் செல்லவில்லை. அதன்பிறகு இரண்டாம் உலகப்போரில் காங்கிரஸ் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ யாரை ஆதரிப்பது என்ற நிலைபாடு எடுக்க நேருவின் இந்தப் பார்வை உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்கா செல்வதற்கு எனக்கு விருப்பமில்லை. அமெரிக்காவிலும் மக்கள் ஏழ்மையாக இருக்கின்றனர். வறுமை நிலவுகிறது. தொழிற்சங்க உரிமைகள் இல்லை என்று, அமெரிக்கா சென்று வந்த பிறகு நேரு கூறுகிறார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் அவை உருவாக்கப்பட்டது. அவற்றில் காலனி ஆதிக்க நாடுகள் விடுதலைபெற தீர்க்கமாக குரல் எழுப்பியிருக்கிறார். பிரெஞ்சு நாட்டின் காலனியாக இருந்த துனிஷியநாட்டு விடுதலைக்காக பேசியிருக்கிறார். நெதர்லாந்து ஆதிக்கத்தில் இருந்த இந்தோனேஷியாவிற்கு ஆதரவாக இருந்தார். அந்த நாட்டு தலைவர் சுகர்னோ நேருவை பின்தொடர்பவராக மாறிவிட்டார். அதேபோல எகிப்து அதிபர் நாசரும் இவரைப் பின்பற்றுபவர்களாக மாறிவிட்டார். நேரு, சுகர்னோ, நாசர் இவர்கள் மூவரும் சேர்ந்து, ஒரு அணி போல இருந்து உலக அரசியலில் பொதுக்கருத்தை உருவாக்கி இருக்கிறார்கள். ஆசியாவில் பல காலனி நாடுகள் விடுதலை பெறவும், இத்தாலியிடமிருந்து லிபியா விடுதலை பெறவும், பல ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெறவும் நேரு அளித்த ஆதரவை அனைவரும் அறிவர்.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு, ஆசிய உறவுகள் மாநாட்டை புதுதில்லியில் நேரு நடத்தினார். புதிதாக விடுதலை அடைந்த ஆசிய நாடுகளை ஒருங்கிணைத்து முதல் ஆசிய மாநாட்டை நேரு நடத்தினார். இதில் 19 நாடுகள் கலந்து கொண்டன. அமெரிக்காவின் ஆதரவுபெற்ற தாய்லாந்து நேட்டோ (NATO) மாநாட்டை கூட்டியது. இந்த மாநாட்டிற்கு யாரும் போகக் கூடாது என்று நேரு முயற்சி செய்ததன் விளைவாக அந்த மாநாடு படுதோல்வி அடைந்தது. பிலிப்பைன்ஸ, பாகிஸ்தானைத் தவிர வேறு நாடுகளும் கலந்து கொள்ளவில்லை.

புதிதாக விடுதலை அடைந்த ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் கலந்துகொண்ட பாண்டுங் மாநாட்டில் 29 நாடுகள் கலந்து கொண்டன. உலக மக்கள் தொகையில் 54 சதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இந்த மாநாடு மாபெரும் வெற்றி அடைந்தது. இந்தோனேஷியா நாட்டின் பாண்டுங் நடந்த இந்த மாநாட்டில் ஒத்த கருத்து வந்து விடக்கூடாது, குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காக பாகிஸ்தான், துருக்கி, ஈரான், ஈராக் போன்ற அமெரிக்க ஆதரவு நாடுகளை சார்பாளர்களாக (delegates) அமெரிக்கா அனுப்பியது. ஆனாலும் இந்த மாநாடு மாபெரும் வெற்றியடைந்தது.’தூரக்கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளை தீர்க்கவல்லவராக சீனத் தலைவர் சூ என் லாய் விளங்குகிறார்’ என நேரு புகழாரம் சூட்டினார்.

பஞ்சசீலக்கொள்கை என்று அறியப்படும் ஐந்து வழிகாட்டு அறநெறி அறிக்கை பாண்டுங் மாநாட்டில்தான் எட்டப்பட்டது.

1) எல்லா நாடுகளும் சமாதான சக வாழ்வு வாழ வேண்டும்.
2) வலிமை மிக்க நாடுகள் வலிமை குறைந்த நாடுகளைத் துன்புறுத்தக் கூடாது.
3) எந்த நாடும் மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4) தேவையுள்ள அனைத்து நாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வர வேண்டும்.
5) அனைத்து நாடுகளின் எல்லைப் பாது காப்பிற்கும் மரியாதை அளிக்க வேண்டும்.

நேரு எடுக்கும் முயற்சிகளைத் முறியடிக்க, இந்தியா விற்கு பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக இடம் அளிக்கத் தயாராக இருந்தனர். அண்டைநாடுகளிடையே பிளவை உண்டாக்குவது அழகல்ல, என்று நேரு கூறி விட்டார். சீனாவை அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பி னராக அனுமதிப்பதற்கு தொடர்ந்து முதலாளித்துவ முகாம் காட்டி வந்த எதிர்ப்பை முறியடித்து, சீனாவுக்கு ஆதரவான உலகக் கருத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்றார்.

சோவியத் யூனியனுக்குப் பிறகு, உலக நாடுகளை ஈர்த்த நாடு இந்தியா. உலக மக்களின் நேசத்திற்கு உரிய தலைவராக நேரு விளங்கினார். வலது சாரி தீவரவாதம் குறித்து நேரு எச்சரித்தார். நேருவைப் பற்றி நன்கு தெரிந்ததனால்தான் காந்தி தனது வாரிசாக நேருவைத் தேர்ந்தெடுத்தார். தன் நாட்டைத் தாண்டி, உலக சமாதானத்திற்காக, தீர்க்க தரிசனத்தோடு உழைத்தவர் நேரு. ஆனால் நேரு மீது அவதூறுகள் திட்டமிட்டு பரப்பப்பட்டு வருகின்றன.

இன்றைய சவால்களை எதிர்கொள்ள நேரு எழுதிய கடிதங்கள் நமக்கு ஆதரவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு: பீட்டர் துரைராஜ்

# சமையல் எரிவாயு விலை ஏற்றம்

## சிபிஐ தேசிய செயற்குழு கடும் கண்டனம்

சமையல் எரிவாயு விலையேற்றத்தைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மே 7 முதல் சமையல் எரிவாயுவின் விலை ரூ.50 உயர்த்தப்பட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. பணவீக்கம் அதிகரித்துள்ளது. அண்மையில், ரிசர்வ் வங்கி ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளது. பணவீக்கம் மற்றும் ரெப்போ வட்டி விகித உயர்வானது உள்ளீடுகளின் விலை உயர்வுக்கு வித்திடுவதாகக் கூறி, நிறுவனங்கள் பொருள்களின் விலையை மேலும் அதிகரிப்பதற்கு பணவீக்கமும், ரெப்போ வட்டி விகித உயர்வும் உதவிகரமாக அமைந்துவிடுகிறது. பெட்ரோலியப் பொருட்களின் விலையேற்றம் இதர அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு வித்திடும் என்பதை அரசாங்கம் புறந்தள்ளிவிட்டு, பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு உருளைகளின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து உயர்த்திட அனுமதித்து வருகிறது. மக்கள் அனுபவித்து வரும் வேதனைகளைப் பற்றி அக்கறை கொள்ளாத இந்த அரசாங்கம், கார்ப்பரேட் நிறுவனங்கள் அவற்றின் கருவூலத்தை நிரப்பிக் கொள்ளவே தொடர்ந்து உதவி வருகிறது.

கட்சி, இந்த விலையேற்ற நடவடிக்கையை மிகக் கடுமையாக கண்டிப்பதுடன், இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கையை எதிர்த்து ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் இணைந்து போராட்டங்களை நடத்திடுமாறு கட்சி அணிகளுக்கு அறைகூவல் விடுகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தத்துவார்த்தம் 28



எஸ். தோதாத்ரி



# சாங்கியம்

**இந்தியத் தத்துவங்களை உலகாயதத்திற்கு அடுத்தபடியாக பொருள்முதல்வாத கூறுகளைக் கொண்ட தத்துவம் சாங்கியமாகும். இதனை உருவாக்கியவர் கபிலர் எனப்படுகிறது. ஆனால், இவர் எழுதிய நூல்கள் எதுவும் சரிவர கிடைக்கவில்லை. பொருள்முதல்வாதக் கூறுகள் அதிகம் இருப்பதால்தானோ என்னவோ இதனை ஆன்மிகவாதிகள் பல மாறுதல்களைச் செய்து உருவாக்கியுள்ளார்கள்.**

இவ்வாறு உருவாக்கப்பட்ட நூல்களுள் ஒன்று சாங்கியக் காரிகை என்பது. இதை எழுதியவர் ஈஸ்வர கிருஷ்ணர் என்பவர். இது பிற்காலத்தைச் சேர்ந்தது. இதன்படி இது வேதங்களை ஏற்றுக் கொண்ட தத்துவங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. பழைய சாங்கியத்தில் இதற்கு இடமில்லை என்று தோன்றுகின்றது. இந்தியத் தத்துவத்தின் வரலாற்றில் உலகாயதம் தவிர பொருள்முதல்வாதத் தன்மை உள்ள தத்துவங்கள் எல்லாம் ஆன்மிகவாதிகளால் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சாங்கியம் இந்த உலகத்திற்கு அடிப்படையாக பொருளைக் கொண்டுள்ளது. அதை பிரகிருதி என்று அழைக்கிறது. இது நிலைபெற்றும் இருக்கிறது; மாறுதலும் அடைகிறது. இந்த மாறுதல் காரணமாக பொருள் தன்னிலிருந்தே உலகத்தைத் தோற்றுவிக்கிறது. இதனை சாங்கியர்கள் காரணகாரிய வாதம் அல்லது சத்காரிய வாதம் என்பதன் மூலம் விளக்குகின்றனர். அவர்கள் இதற்கு ஒரு உதாரணம் தருகின்றனர். மண்ணால் பானை செய்யப்படுகின்றது. பானைக்கு காரணம் மண். காரியம் பானை. காரியம் என்கின்ற பானை மண் என்ற காரணத்திற்கு உள்ளேயே இருக்கிறது; வெளியில் அல்ல என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்த வாதமானது முழுவதும் பொருள் தன்மை உள்ளது. ஆனால் பின்னால் வந்த சாங்கியர்கள் பொருள் தன்மையுள்ள மண்ணிலிருந்து பானை தோன்றாது. அதனை செய்ய குயவன் என்ற ஒருவன் வேண்டும். அவ்வாறு பானை செய்பவனை புருடன் என்று அவர்கள் அழைத்தார்கள்.

இந்த புருடன் ஆன்மா, இறைவன் என்று மாற்றம் பெற்றது. சாங்கியர்கள் காரண காரியத்தை அதன் சுற்றுப்புறத்தோடு இணைத்து விளக்க முடியாமல் போனதால் இந்த இடர்பாடு சாங்கியதற்கு ஏற்பட்டது.

சாங்கியர்கள் பிரகிருதி அல்லது பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பொருள் தன்னிலிருந்தே இந்த உலகத்தை உருவாக்குகிறது. இதனை உருவாக்க இறைவன் என்பவர் தேவை இல்லை. ஏன் என்றால் இறைவன் பொருளல்ல. பொருள் இல்லாத ஒன்று பொருள்களை உருவாக்க முடியாது. பொருள்கள் தன்னில் மாறுதல் ஏற்பட்டு பல பொருள்களை உருவாக்குகின்றன. சாங்கியர்கள் பொருள்களுக்கு மூன்று குணங்களை கூறுகின்றனர். சாங்கியரது கருத்துப்படி இக்குணங்களும் பொருள் தன்மை உள்ளவை. அவை ஆன்மிகவாதிகள் கூறும் குணங்கள் அல்ல. சத்துவம் என்பது அமைதியான நிலையையும், ராஜசம் என்பது விரைவாக இயங்குவதையும், தாமசம் என்பது இயக்கமற்ற மந்த நிலையையும் காட்டுகிறது என்று அவர்கள் கூறுவார்கள்.

**இவற்றின் சம நிலை மாறும்போது உலக உற்பத்தி தோன்று கிறது. இம்முக்குணங்கள் எப்பொழுதுமே இயங்கிக் கொண் டிருக்கும். இதன் விளைவாக இவை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருக்கும். இந்த மோதல் காரணமாக பிரகிருதில் இருந்து பல பொருள்கள் தோன்றுகின்றது. இவை எவ்வாறு தோன்றின என்பதை சாங்கியர்கள் விரிவாக கூறுகிறார்கள். இது ஒருவகையான இயங்கியல் ஆகும். இந்த முறை காரணமாக மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இது சாங்கியத்தில் உள்ள பொருள்முதல்வாத அம்சமாகும். இதற்கு மேலாக அவர்கள் இந்த இயங்கியலை வளர்த்து எடுக்கவில்லை. விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலத்தில் இதற்கு மேல் அவர்களால் செல்ல முடியாது.**

பண்டை காலத்திலிருந்தே இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? என்ற கேள்வியை பலர் கேட்டுள்ளனர். அதற்கு பொருள்கள் மட்டும்தான் அடிப்படை என்று கூறும் உலகாயதம் ஒரு நிலையில் உள்ளது. ஆனால் புறத் தூண்டுதல் இல்லாமல் பொருள்கள் மாறாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இதன் விளைவாக சாங்கியர்கள் புறத் தூண்டலுக்கு காரணமாக புருடன் என்ற ஒன்றை முன்வைத்தனர். சாங்கியத்தில் இந்தப் புருடன் தனியானவன். பிரகிருதி தனியானது. பிரகிருதி தானாகவே மாறுகிறது. புருடன் அந்த மாறுதலை கவனிப்பவன் மட்டுமே. அதாவது புருடன் பொருளை அனுபவிக்கப் போகிறவன். அவனுக்கு பொருளை தோற்றுவிக்கும் வேலை கிடையாது.

இதற்கு சாங்கியர்கள் ஒரு உதாரணம் தருகிறார்கள். மாம்பழம் மாங்காயிலிருந்து கனிந்து பழமாகிறது. இந்த பழமானதற்குரிய காரணமும் மாம்பழத்திற்கு உள்ளேயே இருக்கிறது. அதன் காரணமாக மாங்காய் கனிந்து மாம்பழம் என்ற காரியமாகி விடுகிறது. மாம்பழத்தின் ருசி அதற்குத் தெரியாது. அதனை ருசித்துப் பார்க்க ஒருவன் வேண்டும். அவன் தான் புருடன். புருடன் பொருள்களை அனுபவிப்பவன் மட்டுமே. அவற்றை அவன் உற்பத்தி செய்வதில்லை. அதனால் சாங்கியத்தில் புருடன் பொருள் ஆகியவை இரண்டுமே தனித்தனியாக உள்ளன. இது சாராம்சமான கருத்தாகும்.

இதை கூர்மையாக கவனித்தால் ஒன்று புலப்படும். ஆரம்ப கால சாங்கியத்தில் பொருள், அதில் ஏற்படும் மாறுதல் ஆகியன பற்றி மட்டுமே கூறப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், காலப்போக்கில் இந்திய ஆன்மிகவாதத்தின் வளர்ச்சி காரணமாக பல ஆன்மிக கருத்துக்களை சாங்கியர்கள் உள்வாங்கிக் கொண்டனர். அதே போன்று பொருள்முதல்வாத கருத்துக்களையும் ஆன்மிகவாதிகள் உள்வாங்கிக் கொண்டனர். இதன் விளைவாக பிற்கால சாங்கியத்தில் புருடன் எனும் கருத்து இடம்பெற்றது. இது ஆன்மா, இறைவன் ஆகியவற்றோடு தொடர்பு உடையது.

ஆனால் எவ்வளவுதான் முயன்றாலும் புருடனை பொருளுடன் இணைக்க சாங்கியர்களால் முடியவில்லை. எனவே புருடனுக்கு படைக்கும் தொழில் உண்டு என்பதை சாங்கியர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அப்படி ஏற்றுக்கொண்டால் இந்துத்துவம் முழுவதும் ஆன்மிகமாகிவிடும். எனவேதான் சாங்கியர்கள் புருடனை தனி யாகவும், பொருளை தனியாகவும் காட்டுகின்றனர். அவர் களது கொள்கைப்படி உயிர் பொருள், உயிருள்ள பொருளை படைக்காது என்பதால் புருடனுக்கு அவர்கள் அனுபவிக்கும் வேலை ஒன்றினையே கொடுக்கின்றனர். இதற்கு அவர்கள் தரும் சொல் போக்தா என்பதாகும். இதற்கு போகத்திற்கு உரியவை, அனுபவிப்பவை என்ற அர்த்தமும் உண்டு.

சாங்கியத்தின் இந்த நிலை ஒன்றை தெளிவாக்குகிறது. பூர்வீகமான உலகக் கண்ணோட்டம் உலகாயதம் ஆகும். அதனை ஏற்றுக்கொண்ட சில தத்துவவாதிகள் சாங்கியத்தை உருவாக்கினர். சுற்றியுள்ள பொருள்களை கூர்மையாக கவனித்து அவை எவ்வாறு தோன்றுகின்றன என்பதற்கான விளக்கத்தை அவர்கள் அளிக்க முயன்றனர். ஆனால் அவர்கள் காலத்திய வேத தத்துவமும் முன்வைத்த கேள்விக்கு அவர்களால் விடையளிக்க முடியவில்லை. அதாவது பொருட்களைப் படைக்க ஒரு கர்த்தா வேண்டும் என்ற கேள்வி அது. இதன் காரணமாக ஆன்மிகவாதக் கருத்துக்களை சாங்கியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதா யிற்று. இதுதான் மேலே குறிப்பிட்ட புருடன் என்பது. ஆனால், ஆன்மீகவாதிகளைப் போல புருடனை எல்லாவற்றிற்கும் காரணம் என்ற நிலையை சாங்கியம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே புருடன் தனியாகவும், பொருள் தனியாகவும் சாங்கியத்தில் உள்ளது. இது இந்திய தத்துவ வரலாற்றில் கருத்துமுதல்வாதத்திற்கும் – பொருள்முதல்வாதத்திற்கும் உள்ள போராட்டத்தை காட்டுகிறது. இந்தப் போராட்டமானது இந்தியத் தத்துவங்களில் வெவ்வேறு வடிவங்களாக வெளிப்படுவதைக் காண முடியும். மிகச் சிறந்த கருத்து முதல்வாதியான ஆதிசங்கரர் கூட பொருளை முற்றிலுமாக நிராகரிக்கவில்லை என்பதை அவரது தத்துவம் காட்டும்.

தொடர்புக்கு: **98947 83657**

## அமரர் ஊர்தி, தாய் சேய் நல ஊர்தி, அவசர ஊர்தி

# ஓட்டுனர்களை பணி நிரந்தரம் செய்க!

## டி.எம்.எஸ்.வளாகம் முன்பு பெருந்திரள் முறையீடு

அமரர் ஊர்தி (15537) தாய் சேய் நல ஊர்தி(102) அவசர ஊர்தி(108) ஓட்டுனர்களை பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்கிடக் கோரி சென்னை டி.எம்.எஸ்.வளாகம் முன்பு மே 5 அன்று பெருந்திரள் முறையீடு நடைபெற்றது.

2010 வரை அமரர் ஊர்தி (15537) சேவையை அரசே, அரசு ஊழியர்களை வைத்து நடத்தி வந்தது. 2010 முதல் 108 அவசர ஊர்தி நாடு முழுவதும் இலவசமாக நடைமுறைபடுத்தப்பட்டது. தொடர்ந்து 2016ல் தாய் சேய் நல ஊர்தி திட்டத்தையும் தமிழக அரசு வழங்கியது. தாய்சேய் நல ஊர்தி, அமரர் ஊர்தி ஆகியவற்றை இயக்கும் ஒப்பந்ததாரராக இந்திய செஞ்சிலுவைச் சங்கம் நியமிக்கப்பட்டது. நிக்ஷிரிணிவிஸிமி நிறுவனம் 108 ஆம்புலன்சை இயக்கியது. இந்த ஊர்திகள் மற்ற செலவுகள் உட்பட அனைத்தும் அரசால் வழங்கப்பட்டன. ஓட்டுனர்களை ஒப்பந்ததாரர்கள் நியமித்தனர்.

இந்தியச் சட்டங்களுக்கு நேர் எதிரான நடைமுறையில் நாளொன்றுக்கு 12 மணிநேரத்துக்கும் அதிகமான வேலை நேரம். அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை விடவும் குறைவான சம்பளம். வாகன பராமரிப்பையும் ஓட்டுநர்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற உத்தரவுகள். ஏதேனும் முறையிட்டால் வேலையை விட்டு நீக்குவது என தொடர்ந்தது. செஞ்சிலுவைச் சங்க நிர்வாகம் ஊழலில் மூழ்கியது. முறைகேடாக சேர்த்த ஏராளமான பணத்தை பிரித்து கொள்வதில், செஞ்சிலுவை சங்க நிர்வாகிகள் சண்டை போட்டுக் கொண்டனர். வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில் ஒப்பந்தம் முடிவதற்கு முன்பே, செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்து தாய் சேய் நல ஊர்தி, அமரர் ஊர்திகளை நிக்ஷிரிணிவிஸிமி நிறுவனத்திடம் அரசு தந்துள்ளது. ஆனால் அவற்றில் பணிபுரிந்த ஓட்டுனர்கள் அதுவரையில் செய்த பணிக்காலத்துக்கு எந்த பண நலனும் தரவில்லை. நிக்ஷிரிணிவிஸிமியிலும் புதிய ஊழியர்களாகவே திவீஜ்மீபீ ஜிமீக்ஷீனீ ணினீஜீறீஷீஹ்னீமீஸிமீ என்ற முறையில் வேலைக்குச் சேர்த்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் எந்த உத்திரவும் தரவில்லை. ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்கம் தந்த அடிப்படை சம்பளமும் குறைக்கப்பட்டுள்ளது. தொடர்சியாக பணி செய்யும் தொழிாளர்களுக்கு பணி பாதுகாப்பு, ஊதிய நிர்ணயம் எதுவும் இல்லை. எனவே,

1. 480 நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக பணிபுரிந்து உள்ள ஓட்டுநர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்து அரசு நேரடியாகப் பணி வழங்கிட வேண்டும்.

2. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி சம வேலைக்கு சம ஊதியம் என்னும் அடிப்படையில் அரசு மருத்துவமனை ஓட்டுநர் மற்றும் ஊழியர்களுக்கு இணையான காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் மற்றும் மோட்டார் வாகன சட்டத்தின் படி வேலை நேரம் மற்றும் ஊர்தி இயங்கும் தூரத்திற்கு ஏற்றவாறு ஓட்டுநர்கள் பணி அமைத்திட வேண்டும். எட்டு மணி நேரம் வேலை நேரமாகவும், கூடுதலான நேரத்திற்கு மிகை நேரப்பணிக்கான சட்டப்படியான இரட்டை ஊதியமும் வழங்கிட வேண்டும்.

4. பொய் புகார் பழிவாங்குதல் அடிப்படையில் பணிநீக்கம் செய்யப்பட்ட நிலையில் 2 ஆண்டு காலமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் பொது செயலாளர் தோழர் டி.ருத்திரகோட்டீஸ்வரன் அவர்களை மீண்டும் தொடர் பணி அமர்த்த வேண்டும்.

5. 1965ம் வருட போனஸ் சட்டப்படி அரசு மருத்துவமனை ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இணையான போனஸ் வழங்கிட வேண்டும்.

6. அரசு மருத்துவமனைகளில் பணியாற்றி வரும் அமரர் ஊர்தி, தாய் சேய் நல ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்கள் 600க்கு மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு தற்போதைய பணிவிதிகள் பொருந்தாது. மாதிரி நிலையானை சட்டத்தின்படி மனிதவள கொள்கை மற்றும் பணிவிதிகள் தனியாக சான்றளிக்கப்பட்ட நிலையானை விதிகள் உருவாக்கிட வேண்டும்.

7. ஆபத்தான நோய் தொற்றுள்ள நோயாளிகளை கையாளுவதினால் ஓட்டுநர் பணியாளர்களுக்கு 3 மாதத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

8. ஒரே பணியில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களை தன்னிச்சையாக வேறு வேறு பணிகளில் பணியமர்த்தி, மேற்கொள்ளும் தொழிலாளர் விரோத போக்கை கைவிட வேண்டும்.

9. பணி மூப்பு அடிப்படையில் ஓட்டுநர்கள் தங்களின் சொந்த மாவட்டங்களில் பணி அமர்த்தப்பட வேண்டும்.

10. ஏற்கனவே ஓட்டுநரோடு கிளீனர் அமர்த்தப்பட்டிருந்தனர். கடந்த சில ஆண்டுகளாக கிளீனர் செய்ய வேண்டிய வேலையையும் ஓட்டுநர் மீதே போடப்பட்டுள்ளது. பழைய முறைப்படி வாகனங்களுக்கு கிளீனர் அமர்த்தப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை, தேனாம்பேட்டை, டி.எம். எஸ். அலுவலகம் முன்பு பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



த.லெனின்

# போராட்டங்கள் எழும்! பொல்லாத அரசுகள் விழும்!




**உணவுக்கு மட்டும் வாழ்பவன் அல்ல மனிதன் என்றார் ஏசு கிறிஸ்து. ஆம்! மனிதனின் நாகரிக, கண்ணிய வாழ்விற்கு வேலை வாய்ப்பும் வருமானமும் அவசியம் தானே! இந்திய சுதந்திரத்திற்கு முன்பே நமது வறுமைக்கு காரணமான காலனியாதிக்க கொடுங்கோன்மைக்கு எதிராகத்தான் கொள்கை முடிவுகளை சுதந்திரத்திற்காக போராடியவர்கள் முன்வைத்தார்கள்.**

பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியாவிற்கான தொழிற் கொள்கையை வகுக்கும்போது இந்த வழியில்தான் சிந்தித்தார். தொழில்மயமாக்கலுக்கு அடிப்படையான இரும்பையும், மின் சக்தியையும் உருவாக்க வேண்டும். இவைதான் தொழிற்மயத்திற்கு அடிப்படை. இதன் மூலம்தான் நிவாகத்துக்கான உத்திகளும், திட்டங்களும் இந்தியாவில் அமைய வேண்டும் என்றார்.

இப்படி அமையும் தொழில்மயமாக்கலுக்கு அடிப்படையாக அமையும் கனரக தொழிற்கூடங்களுக்கே முதலிடம் என்று வரையறுத்தார் நேரு. அதன் மூலம் உருவாக்கப்பட்டதுதான் பிரம்மாண்டமான பெல் உள்ளிட்ட கனரக தொழில் கூடங்களாகும்.

ஏறத்தாழ சீனாவும் இதேபோன்ற நிலையைதான் பொருளாதாரத்தில் புரட்சிக்கு பிறகான தனது நிலைப்பாடாக அறிவித்தது. தற்சார்பு கொள்கைதான் வளர்ச்சியின் உந்து சக்தி என்றது. **(self reliance is the motor of growth)**

இந்தியாவில் காலனியாதிக்க சுரண்டல் பெரும்பாலும் வணிகத்தின் மூலம்தான் நடந்தது. ஆனால் அதற்கு பின்பு பிரிட்டிஷார்கள் இந்திய தொழில்களில் முதலீடு செய்ய ஆரம்பித்தார்கள். அதன் பிறகே இந்தியாவின் பொருளாதாரம் அவர்களால் ஒட்டுமொத்தமாக உறிஞ்சப்பட்டது.

குறிப்பாக அதன் மூலம் வரும் அதீத லாபம் மற்றும் டிவிடன்ட் மூலம் நமது பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளானதுடன் பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கான ஊதியத்தொகைகள், உள்நாட்டு படிகள், ஊதியம், ஓய்வூதியம், முதலீட்டு தொகைக்கான வட்டி என்ற வகைகளில் அவர்களுக்கு அதீத லாபம் கிடைக்க வழி செய்யப்பட்டது.

இந்த காலனியாதிக்கத்தின் மேம்படுத்தப்பட்ட வழிமுறைதான் உலகமய முறையில் உருவான முதலீடுகள். அந்நிய நேரடி முதலீடுகள், தனியார் பொதுமக்கள் பங்கேற்பு திட்டங்கள் (பி.பி.பி.) உள்ளிட்டவையாகும்.

இந்த பி.பி.பி. திட்டங்கள் பொதுத்துறையை தனியார் மயப்படுத்துவதும், அதை வாங்கும் தனியார் துறைக்கு பொதுத்துறை நிதிவளங்களை தாரை வார்ப்பதும் நடக்கிறது.

இந்தியாவின் உள்கட்டுமான குத்தகை மற்றும் நிதிசேவைகள் நிறுவனம் (ஐ.எல்.–எப்.எஸ்.) இதன் மூலம் பி.பி.பி. திட்டங்களுக்கு அரசின் நிறுவனங்களாக எல்.ஐ.சி., பொதுத்துறை வங்கிகள் மூலம் நிதி உதவி செய்யப்படுகின்றன.

இதன் மூலம் தனியார் துறைக்கு அள்ளி அள்ளி ஊட்டுவதும், பொதுத்துறையை வலுக்கட்டாயமான இழப்பிற்கு உள்ளாக்குவதும் தொடர்கிறது.

நிதியமைச்சர் நிர்மலா சீத்தாரமன் பொதுத்துறை மீது தொடர்ந்து தாக்குதல்களை கட்டவிழ்த்து விடுகிறார். பொதுத்துறை என்றாலே அவை ஏளனத்திற்கு உரிய ஒன்றாகவும் போட்டியிடும் தன்மை இல்லாத ஒன்றாகவும், மொத்தத்தில் திறனற்ற ஒன்றாக எடுத்துக் காட்டுவதில் பா.ஜ.க. அரசு திறமையாக அவர்கள் நடத்தும் பொருளாதார சீர்திருத்தம் என்கிற பெயரிலான சீர்குலைவு நடவடிக்கையின் மூலம் தெரிவித்து வருகின்றனர். அப்படியென்றால் ஒன்றிய அரசே பல துறைகளில் தோல்வி அடைந்ததை ஒப்புக் கொண்டு அதையும் கலைத்து விட முடியுமா?

இந்திய அரசின் தோல்வியடைந்த துறைகளாக நமது ஆரம்பக் கல்வித்துறை, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, நில சீர்திருத்தம், சமூக நீதி ஆகியவற்றில் தொடர் தோல்விகளும் சிக்கல்களும் இன்றுவரை நிலவுகிறது. இவற்றின் காரணமாகத்தான் பொருளாதார வளர்ச்சிக் குன்றி சமூக சமத்துவமின்மை அதிகரிக்கிறது. இதற்கு யார் பொறுப்பேற்பது?

சீனாவில் பொதுத்துறை நிறுவனங்கள் பெரும் லாபத்தோடு இயங்குகின்றன. உள்ளாட்சி அரசால் நடத்தப்படும் ஹெஃபாய் நிறுவனம் 787 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 17% நியோவில் வியாபார முதலீடுகள் மூலம் லாபம் பெற்றுள்ளனர். சீன அரசுக்கு சொந்தமான கம்பெனிகள் 97.5 லட்சம் கோடி ரூபாயை வெளிநாட்டு கம்பெனிகளில் முதலீடு செய்துள்ளன. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தில் இது 27% என்றால் இதன் பிரம்மாண்டத்தை பார்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலம்தான் சீனா உலகளாவிய செல்வாக்கைச் செலுத்துகிறது. இந்தியாவும் இதுபோல் செய்திருந்தால் நாமும் உலகளாவிய செல்வாக்கை செலுத்தியிருக்க முடியும். அதைவிட்டுவிட்டு எதற்கெடுத்தாலும் சீனாவை குறை கூறுவது மட்டும்தான் இன்றும் தொடர்கிறது.

சீனா சோசலிச நாடு, அங்கு அது சரி என்று பேசுவோருக்கு, நமக்கு அருகாமையில் உள்ள முதலாளித்துவ நாடான சிங்கப்பூரை எடுத்துக் கொள்ளலாம். சிங்கப்பூர் அரசின் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் உலகம் முழுவதற்கும் பலவற்றில் முதலீடு செய்ததன் மூலம் அதன் பங்கு மதிப்பு 1.09 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

உலகாளாவிய நிறுவனங்களில் சிங்கப்பூரின் முதலீடுகள் ரூ.55 லட்சம் கோடியாகும். இதன் மூலம் குட்டி நாடான சிங்கப்பூர் உலகின் 8வது மிகப்பெரிய நிதிமுதலீடு செய்யும் நாடாக மாறியுள்ளது. இந்தப் பணம் கடந்த 20 ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது.

இந்தப் பணத்திலிருந்து வரும் பங்குத் தொகைகளை வைத்துதான் அரசின் பொதுநலத்திட்டங்கள், மக்கள் நலத்திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. சிங்கப்பூர் அரசின் மற்றொரு நிறுவனமான டெமசெக் ஹோல்டிங் நிறுவனம் 22 லட்சம் கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது.

இந்தியாவின் 2022–23 பொது நிதி பட்ஜெட்டே ரூ.39.45 லட்சம் கோடி என்றால், சிங்கப்பூர் அரசின் முதலீடுகள் எவ்வளவு பலமானவை என்பதை அறிய முடியும்.

கடந்த 2013ஆம் ஆண்டில் அன்றிருந்த ஒன்றிய அரசு லாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தமாட்டோம் என்று கொள்கை முடிவை எடுத்திருந்தது. ஆனால், அந்த முடிவகளையெல்லாம் தூக்கி காற்றில் எறிந்து விட்டு லாபத்தில் இயங்கும் பெரும் இன்சூரன்ஸ் நிறுவனமான எல்.ஐ.சி.யின் பங்குகள் விற்கப்படுகின்றன. பாரத் பெட்ரோலிய பங்குகள் ஏற்கனவே விற்கப்பட்டன. ஓ.என்.ஜி.சி.யும் விற்கப் படுகின்றன.

இதுபோல, பல பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்பட்டும் விற்பனைக்கு தயாராக்கப்பட்டும் வருகிறது. சிங்கப்பூரிலும், சீனாவிலும் பொதுத்துறை முதலீடுகள் மூலம் உலகளாவிய லாபத்தைப் பெற்று அதைத் தத்தமது நாடுகளில் வளர்ச்சிக்கு பயன்படுத்தும் நிலையில் இந்தியா தனது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதன் மூலம், அதாவது அடிமாட்டு விலைக்கு விற்பதன் மூலம் ரூ.13 லட்சம் கோடி திரட்டப் போவதாக அறிவித்துள்ளது.

**இப்படித் திரட்டப்படும் பணத்தின் மூலம் உள்கட்டமைப்பை மேம்படுத்துவோம் என்றும் அதற்கு நேர் எதிராக பேசி வருகின்றனர். அந்த உள்கட்டமைப்பு வசதிகள்தான் அதானிக்கும், அம்பானிக்கும் தங்கத் தட்டில் வைத்து தாரை வார்க்கப்படுகின்றது.**

உதாரணத்திற்கு, சீனாவில் சீன தேசிய பெட்ரோலிய கார்ப்பரேஷன் என்ற ஒரு பொதுத்துறை நிறுவனம் உள்ளது. அதன் சொத்துக்கள் மட்டும் ரூ.45 லட்சம் கோடியாகும்.

ஆனால், சீன அரசு இதை தனியார் மயமாக்க முயற்சிக்கவில்லை. மாறாக அதை பாதுகாக்கும் நடவடிக்கையை எடுக்கிறது. ஆனால், இங்கோ ரூ.38 லட்சம் கோடி சொத்து மதிப்புள்ள எல்.ஐ.சி. விற்பனைக்கு தயாராகி வருகிறது.

பா.ஜ.க.வினர் "அரசு வியாபாரம் செய்யக் கூடாது" என்று சொல்வார்கள். எனவே, வியாபாரிகளிடமே விற்றுவிடாலம் என்று மொத்தத்தையும் அள்ளிக் கொடுக்கிறார்கள் போலும். பற்றாக்குறையை நிவர்த்தி செய்தத்தான் பங்கு விலக்கல் முறை என்கிறார்கள். ஆனால், இந்திய இயற்கை வளங்களை கொள்ளையடிப்பதற்கு கார்ப்பரேட் முதலீட்டாளர்கள் வாயில் எச்சில் ஒழுகக் காத்திருக்கிறார்கள் என்பது வேறுகதை!

இந்திய அரசு இப்போது பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் டிவிடென்டாக பெறும் தொகை ரூ.50 ஆயிரம் கோடி. சிங்கப்பூர் மற்றும் சீன அரசுகளிடம் பாடம் கற்றுக் கொண்டால் உலகின் பெரிய நிதிசக்தி கொண்ட நிறுவனங்களாக இந்திய நிறுவனங்கள் மாறும். அதுவும் உலக அளவில் பெரும் நிதி சக்தியைக் கொண்டிருக்கிற பொதுத்துறை நிறுவனங்களான அமெரிக்க, இஸ்ரேலிய, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் உள்ளத்தைப் போல இந்தியாவில் பிரம்மாண்டமான பொதுத்துறை நிறுவனங்களைக் கட்ட தயாராக இல்லை.

பொதுத்துறை நிறுவனங்கள் பொதுவாக அரச முதலாளித்துவம்தான். ஆனால், முதலாளித்துவத்தைவிட இது முற்போக்கானது, சமூக நோக்கு கொண்டது என்பதால்தான் இதனை நாம் ஆதரிக்கிறோம். இந்தியாவில் லாபம் குன்றிய பொதுத்துறை நிறுவங்களை அடிமாட்டு விலையில் விற்பதும் லாபம் தரும் நிறுவனங்களை சீர்திருத்தம் என்கிற பெயரில் சீர்குலைப்பதும் தொடர்கிறது. மிக உன்னதமான பொதுத்துறை நிறுவனங்களும் மிகச்சிறந்த அனுபவ அறிவைக் கொண்ட நிர்வாகத் துறையும் நம்மிடம் இருக்கிறது. ஆனால் அவற்றையெல்லாம் அயலாருக்கு மட்டுமே தாரை வார்ப்பது என்றால் என்ன செய்வது?

சிங்கப்பூரைப் போல முதலில் தேசம் மற்றும் பொதுமக்கள் நலன் என்று அரசு கருதுமேயானால் மிகச்சிறந்த கொள்கை முடிவுகளை எடுக்க முடியும்? செல்வத்தின் ஆதார வளர்ச்சி நிலத்திலிருந்து இயற்கை வளங்களாக மாற்றியது. பின்பு தொழிற்கூடங்கள் மூலம் உருவானது. அது தற்போது அறிவுசார் பொருளாதாரமாக வடிவம் பெற்று வருகிறது. எனவே, சொத்துக்கள் தற்போது பெரும்பாலும் நிதிச்சந்தையில்தான் உள்ளன.

அதிகமான செல்வத்தை உருவாக்க உலகம் அறிந்த முதலீட்டாளர்களும் சில அரசுகளும் உலகம் முழுவதும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவேளை இந்திய அரசு பங்கு விலக்கலுக்கு பதிலாக சிங்கப்பூரை போல முதலீடுகளில் இறங்குமேயானால் பெரும் முன்னேற்றத்தை ஒட்டுமொத்த இந்தியாவும் காணும். வளர்ச்சி திட்டங்களுக்கு வாய்ப்புகள் ஏற்படும். சந்தைகள் செல்வத்தை உருவாக்க முடியம் என்றால் பொதுமக்கள் நலனுக்காக அரசு ஏன் அந்தச் செல்வத்தை உருவாக்கக் கூடாது? இந்தியா ஒன்றும் இதில் முன்னுதாரணம் படைக்காத நாடு அல்ல. 1980களில் தொலைத்தொடர்புத்துறை மிகப் பெரிய லாபத்தை ஈட்டியது. தனியார் மயமாக்கலால் அது எவ்வாறு வஞ்சிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டது என்பதை நாடு அறியும். இன்று நஷ்டத்தில் இயங்குகிறது என்று 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனமான ஏர் இந்தியாவை கொடுத்தவனே எடுத்துக்கொண்டாண்டி என்பதற்கிணங்க டாடாவிடமே திரும்ப ஒப்படைத்து விட்டோம். குட்டி நாடுகள் கூட தங்களுக்கென்று தனி விமான சேவை வைத்திருக்கும் போது, நமது நாடோ இருந்ததையும் தனியாருக்கு தாரை வார்த்துவிட்டு பிரதமர் என்ற ஒற்றை நபர் பயணம் செல்வதற்கு ரூ.8000 கோடிக்கு தனி விமானத்தை வாங்கியிருக்கிறோம். இவர்தான் குடும்ப ஆட்சியை எதிர்த்து போரிடுபவராம்! பேசுவது இந்துத்துவா! பூசுவது தேசப்பற்று அரிதாரம்! ஆனால் செயல்பாடோ முழுக்க, முழுக்க அந்நிய முதலீட்டாளருக்கும், தனது நெருங்கி கார்ப்பரேட் நண்பர்களுக்கும்தான்! இலங்கையில் இன்று காணும் அவலநிலை நாளை இந்தியாவிலும் எழும்! ஆட்சியாளர்களே! மக்களை காலம் காலமாக பிரித்து ஆளலாம் என்ற கனவில் மட்டும் நீங்கள் வாழ்ந்துவிட முடியாது! போராட்டங்கள் எழும்! பொல்லாத அரசுகள் விழும்! இதுவே உலகம் எப்போதும் காணும் வரலாறு!

தொடர்புக்கு: **94444 81703**



# சங்கே முழங்கு!

### திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டத்தில் பரபரப்பு

## உறுப்பினர்கள் கூண்டோடு ராஜினாமா செய்வோம்!

## அரசுக்கு எச்சரிக்கை!

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம் அதன் தலைவர் அ.பாஸ்கர் தலைமையில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் மே 06 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய துணை தலைவர் எம்.ராமகிருஷ்ணன், ஆர்.சுப்பிரமணியன் வட்டார வளர்ச்சி அலுவலர், சிவக்குமார் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருத்துறைப்பூண்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட 16 ஒன்றிய குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட முக்கிய தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒன்றியக் குழு தலைவருக்கு புதிய வாகனம் வழங்குவதாக அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகின்ற நிதிகள் அனைத்தும் மடை மாற்றம் செய்யப்பட்டு பல்வேறு மாற்று பணிகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதால் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் அவர்கள் சார்ந்த ஊராட்சிகளுக்கு வளர்ச்சிப் பணிகள் எதுவும் செய்ய இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

ஆகையால், எந்த வித மக்கள் நலன் சார்ந்தபணிகளும் செய்ய இயலாத காரணத்தால் அனைத்து உறுப்பினர்களும் கூண்டோடு ராஜினாமா செய்வது என்கின்ற முடிவை எடுத்துள்ளனர். மேலும் ஒன்றியம் முழுவதும் நிலவுகின்ற கடுமையான குடிநீர் பற்றாக்குறையை போர்க்கால அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊராட்சிகளுக்கு வழங்குகின்ற நீர் போதுமானதாக இல்லை. அதன் அளவை உயர்த்தி வழங்க வேண்டும்.

அரசு 100 நாள் வேலைத் திட்டத்திற்கு போதுமான நிதியை வழங்காத காரணத்தால் பல்வேறு ஊராட்சிகளில் நூறுநாள் பணிகள் நடைபெறாமல் பணியாளர்கள் வேலை இழந்துள்ளனர், ஆகையால் 100 நாள் பணிக்கான தொகையினை உடனடியாக வழங்க வேண்டும்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக ஊராட்சிகளில் முழுமையாக சாலை உட்பட பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை நிலவுவதால் உடனடியாக ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு நிதி வழங்க வேண்டும். திருத்துறைப்பூண்டியிலிருந்து நெடும்பலம் வழியாக பட்டுக்கோட்டை செல்லும் பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டும். திருத்துறைப்பூண்டியிலிருந்து கீரக்களூர், மணலி வழியாக மன்னார்குடி செல்லும் பேருந்துகளை பள்ளி மாணவர்கள் நலன்கருதி மீண்டும் இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் திருமதி எஸ். தமயந்தி, கே.சுஜாதா பி.காம். ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கட்டிட தொழிலாளர் சங்க நடைபயணம்

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திருவண்ணாமலை அறிவியல் பூங்கா அருகிலிருந்து தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைபயணம் துவங்கியது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. ஊர்வலத்தை ஏஐடியுசி மாவட்டத் தலைவர் வே. முத்தையன் துவக்கி வைத்து உரையாற்றினார். இரா. தங்கராஜ். பன்னீர்செல்வம், செல்வராஜ், சங்கர், கனகராணி, மகாதேவி, ஞானவேல், ராமச்சந்திரன், மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

## நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் முன்பு ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் மாதேஸ்வரன் தலைமையில், ஒன்றிய அரசு நான்கு சட்ட தொகுப்புகளை திரும்பப் பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறை தொழிலாளர் நலனுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்த கூடாது. இஸ்ராம் திட்டத்தை செயல்படுத்த கூடாது என்ன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட செயலாளர் த.ராசேந்திரன், ஏஐடியுசி மின்சார வாரியம் மாவட்ட தலைவர் சக்திவேல், க. தொச. சி. பன்னீர்செல்வம், ஞானவேல். வி. விஸ்வநாதன், எஸ். ராஜா, கனகராணி, மகாதேவி, தண்டரை முருகன், ராமச்சந்திரன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். டி.திருப்பதி நன்றி கூறினார்.



டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத்



# சரகர் உறுதிமொழியை தேசிய மருத்துவ ஆணையம் திரும்பப் பெற வேண்டும்!

**ஒன்றிய பாஜக ஆர்.எஸ்.எஸ் அரசு மருத்துவக் கல்வியை "காவி மயமாக்கி" வருகிறது. இந்துத்துவ மயமாக்கி வருகிறது. மருத்துவக் கல்வியில் இந்துத்துவ, பார்பனிய சித்தாந்தத்தை திணிக்கிறது.**

குறிப்பாக மதச்சார்பற்ற 'நவீன அறிவியல் மருத்துவத்தை (Modern Scientific Medicine) நீர்த்துப் போகச் செய்ய முயல்கிறது. நவீன அறிவியல் மருத்துவம் ஒரு மேற்கத்திய மருத்துவம், ஆங்கில மருத்துவம், கிறிஸ்தவ மருத்துவம், அந்நிய மருத்துவம் என முத்திரை குத்தி, அம்மருத்துவத்தை ஒழித்திட நினைக்கிறது. நவீன அறிவியல் மருத்துவம் என்பது எந்த ஒரு நாட்டுக்கோ, எந்த ஒரு பண்பாட்டுகோ, எந்த ஒரு மக்கள் பிரிவினருக்கோ சொந்தமானது அல்ல .

இன்றைய நவீன அறிவியல் மருத்துவம் என்பது ஒரு உலகளாவிய மருத்துவமாகும். சர்வதேச மருத்துவமாகும். அதன் வளர்ச்சிக்கு உலகம் முழுவதும் உள்ள அறிஞர்கள்,மருத்துவர்கள், மருத்துவத் துறையினர் பங்களிப்பை செலுத்தி வருகின்றனர். நவீன அறிவியல் மருத்துவம் திடீரென்று வானத்திலிருந்து குதித்து வந்ததல்ல. உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவிய பண்டைய சமூகங்களின் , பண்டைய மருத்துவ முறைகள் அனைத்தும் நவீன அறிவியல் மருத்துவம் வளர்வதற்கு உதவியுள்ளன. அடித்தளமாக இருந்துள்ளன.

பண்டைய மருத்துவ முறைகளில் உள்ள ஏற்கத்தக்க அறிவியல் ரீதியான விஷயங்களை ஏற்று, அவற்றை வளர்த்தெடுத்து நவீன மருத்துவம் பரிணமித்துள்ளது. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும், அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியும் , நவீன அறிவியல் மருத்துவத்தின் வளர்ச்சி புதிய சிகரங்களை எட்டிட உதவியுள்ளன.

இன்று பல்வேறு அறிவியல் துறைகளில் நிகழ்ந்துள்ள புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில் நுட்ப முன்னேற்றங்களையும் உடனடியாக உள்வாங்கி, நவீன அறிவியல் மருத்துவம் செழுமை பெற்றுள்ளது. தொடர்ந்து செழுமை பெற்றுவருகிறது. நவீன அறிவியல் மருத்துவம் தற்பொழுது மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த நவீன அறிவியல் மருத்துவம் தான் கொரோனா பெருந்தொற்றிலிருந்து உலக மக்களை காத்துள்ளது. ஆனால் ஒன்றிய அரசின் வலதுசாரி , பிற்போக்கு சித்தாந்தவாதிகள் இவற்றை எல்லாம் மறைத்து , நவீன அறிவியல் மருத்துவம் ஒரு அந்நிய மருத்துவம் எனக் கருதி, அதை ஒழித்துக்கட்ட முயல்கின்றனர்.

மருத்துவத்தை இந்துத்துவா அடையாள அரசியலுக்கு , மதவெறி அரசியலுக்கு,சமஸ்கிருத திணிப்பிற்கு பயன்படுத்த முனைகின்றனர். நவீன அறிவியல் மருத்துவம் என்பது ஒரு மதச்சார்பற்ற மருத்துவமாகும்.

பண்டைய இந்திய மருத்துவரான "சரகர்" அவர்களின், திரிக்கப்பட்ட உறுதிமொழியை மதச்சார்பற்ற நவீன அறிவியல் மருத்துவம் பயிலும் மாணவர்கள் அனைவரும் உறுதிமொழியாக ஏற்க வேண்டுமென மாநில அரசுகளை, மருத்துவச் சங்கங்களை கலந்து பேசாமல் தேசிய மருத்துவ ஆணையம் ஏதேச்சதிகாரமாக முடிவு செய்தது கடும் கண்டனத்திற்குரியது. உண்மையில் பண்டைய இந்திய மருத்துவர்களின் சித்தாந்தமானது, பண்டைய இந்தியாவின் ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தத்திற்கு எதிரானதாக, இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நோய்க்கு காரணம், "ஒருவர் முற்பிறப்பில் செய்த பாவம்", என்ற பார்ப்பனியத்தின் கருத்து மருத்துவர்களால் நிராகரிக்கப்பட்டது.

"நோய்கள் உருவாக குறிப்பிட்ட காரணங்கள் உண்டு, அவற்றை மருந்துகள் கொண்டு குணப்படுத்த முடியும்.மனிதன் இயற்கையின் விளைவு, இயற்கையின் சிகரம். எனவே, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பொருட்களையும் மருந்துகளாக பயன்படுத்த முடியும்" என்றனர். இத்தகைய கருத்துக்கள், சரக சக்ஹிதையிலும், சுஷ்ருத சம்ஹிதையிலும் இடம் பெற்றுள்ளன. பசு இறைச்சியின் மருத்துவ குணங்களைப் பற்றி சரக சம்ஹிதை கூறுகிறது. எனவே, அன்றைய பார்ப்பனியம் அன்றைய மருத்துவர்களுக்கும் ,ஆயுர்வேதா மருத்துவ முறைக்கும் எதிராக அடக்குமுறைகளை ஏவியது.

மருத்துவத்தை பற்றிய குறிப்புகள் உள்ள அதர்வண வேதத்தைக் கூட, ஒரு வேதமாக ,நீண்ட காலத்திற்கு அன்றைய பார்ப்பனியம் ஏற்கவில்லை. இந்தியாவின் மருத்துவமுறை மற்றும் ஆயுர்வேதாவின் வளர்ச்சியை தடுத்த பார்ப்பனியம், சரக சம்ஹிதையிலும் " பசுவை புனிதமாக்குதல்" போன்ற கருத்துக்களை இடைச் செருகல் செய்தன. ஆயுர்வேதாவின் வளர்ச்சியை தடுத்த பார்பனியம், அதே ஆயுர்வேதாவை இந்து மருத்துவ முறையாக மாற்ற முயல்கின்றது. அத்தைகைய நோக்குடன் , பார்ப்பனியத்திற்கு எதிரான கருத்தியல் அடங்கிய "சரக சம்ஹிதையை" தொகுத்ததாக கூறப்படும் சரகரை, மஹரிஷியாக மாற்றிவிட்டன.

அவரது உறுதிமொழி என்ற பெயரில் பிராமணர்களையும், பசுவையும் உயர்வானதாக்கும், புனிதமாக்கும் கருத்தியலையும், ஆன்மீகத்தையும், வர்ணாஸ்ரம முறையையும்,சமஸ்கிருதத்தையும், மருத்துவ மாணவர்களின் சிந்தனைகளில் திணிக்க முயல்கின்றன. 'இது ஒட்டு மொத்த மருத்துவக் கல்வியையும் இந்துத்துவ மயமாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டதாகும். இந்து மகரிஷி ஒருவரின் பெயரிலான ஓர் உறுதிமொழியை, பிற மதத்தினரும் ஏற்க வேண்டும் என்பது, மதச்சார்பின்மைக்கு எதிரானதாகும்.

மருத்துவர்களை, மருத்துவ மாணவர்களை மதரீதியாக பிளவுபடுத்தும் நோக்கம் கொண்டதாகும். மருத்துவம் பயிலும் முஸ்லீம் உள்ளிட்ட பல்வேறு சிறுபான்மை பிரிவினரின் உணர்வுகளுக்கும், மதச்சார்பற்ற மருத்துவர்களின் உணர்வுகளுக்கும் எதிரானதாகும்.

மருத்துவக் கல்வி நிறுவனங்களின் மதச்சார்பற்ற செயல்பாட்டை சீர்குலைப்பதாகும். உறுதி மொழி என்ற பெயரில், "இந்துத்துவ" கருத்தியலை,சமஸ்கிருதத்தை திணிக்கும் போக்கை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும். சரகர் உறுதிமொழியை திரும்பப் பெற வேண்டும். சரகர் உறுதிமொழியை தேசிய மருத்துவ ஆணையம் திரும்பப் பெற , மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

மருத்துவத்தில் ஆன்மீகத்தை புகுத்தும் ஹிப்போகிரட்டிக் உறுதிமொழியையும் கைவிட வேண்டும்.

உலக மருத்துவர்கள் சங்கம் ( world medical association) உலகில் உள்ள மருத்துவர்கள், மருத்துவ ஆர்வலர்கள், பொதுமக்கள் போன்றோரிடம் இரண்டு ஆண்டுகள் கருத்துகணிப்பு நடத்தி, ஏற்கனவே உள்ள உறுதிமொழியில் உள்ள மதம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்கள் இன்றி, இன்றைய காலக்கட்டத்திற்கு ஏற்ப மாற்றங்களை செய்துள்ளது. அந்த வகையில் " மருத்துவர் உறுதி மொழி" என்ற பெயரில் உறுதிமொழி உருவாக்கப்பட்டுள்ளது.

உலக மருத்துவர்கள் சங்கத்தால் (WMA) 2017 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ள " மருத்துவர்கள் உறுதிமொழியை (Physicians' Pledge)" இந்தியாவிலும் ஏற்பதே இன்றைய நிலைக்கு உகந்ததாக இருக்கும்.இந்த உறுதிமொழியை ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் உடனடியாக ஏற்க வேண்டும். இந்நிலையில் மதுரை மருத்துவக் கல்லூரி போன்ற சில கல்லூரிகளில் சரகர் உறுதிமொழியை ஏற்கச் செய்தது கடும் கண்டனத்திற்குரியது. மருத்துவக் கல்வி இயக்குநரகம் சார்பில் 2022 பிப்ரவரி 11 ஆம் தேதி அன்றே அனைத்து மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கும் எந்த விழா/ கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றாலும் ஞிவிணி அனுமதிபெற வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கையின் பொழுது, ஏற்கனவே உள்ள நடைமுறைகளையே பின்பற்றப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் பொழுது ஏற்கனவே உள்ள நடைமுறைகளையே பின்பற்றி இருக்க வேண்டும். அவ்வாறு பின்பற்றாமல், சரகர் உறுதிமொழியை மதுரை மருத்துவக் கல்லூரி உட்பட சில மருத்துவக் கல்லூரிகள் பயன்படுத்தியது வருத்தத்திற்குரியது.

இந்த சரகர் உறுதிமொழி பிரச்சனை குறித்து நாடாளுமன்றத்திலும், நாடு முழுவதும் விவாதங்கள் கடுமையாக நடைபெற்றன.

இது நமது மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கும் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு இருக்கும் பொழுது சர்ச்சைக்குரிய உறுதிமொழியை சில மருத்துவக் கல்லூரிகள் ஏற்கவைத்தது கண்டத்திற்குரியது. இந்த மிக முக்கியப் பிரச்சனையில் மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் உட்பட பிற மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் மிகவும் கவனமாக செயல்பட்டிருக்க வேண்டும். இன்றைய நிலையில் இப்பிரச்சனை , இந்துத்துவ சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இரை போட்டுவிடக் கூடாது. நமது மருத்துவர்களை, மருத்துவ மாணவர்களை இந்துந்துத்துவா சக்திகளின் பக்கம் தள்ளிவிட்டுவிடக் கூடாது. எனவே, இந்த விஷயத்தை கையாள்வதில் தமிழக அரசு கவனமாக செயல்பட வேண்டும்.

மருத்துவ அறிவியலின் மதச்சார்பின்மை, அறிவியல்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்.வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.


மதுரை மருத்துவக் கல்லூரி போன்ற, சில மருத்துவ கல்லூரிகளில் ஏற்பட்ட பிரச்சனைக்கு அடிப்படை காரணமே, மருத்துவத்தை இந்துத்துவமயமாக்க வேண்டும்,கார்ப்பரேட் மயமாக்க வேண்டும் என்ற நோக்கோடு , மதச்சார்பற்ற ஜனநாயக அமைப்பான விசிமியை ஒழித்துவிட்டு, ஏதேச்சதிகாரத்துடனும், மதச்சார்ப்போடும் செயல்படும் தேசிய மருத்துவ ஆணையத்தை (ழிவிசி) மத்திய அரசு கொண்டுவந்ததுதான் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

"சரகர் உறுதி மொழியை தேசிய மருத்துவ ஆணையம் திரும்பப் பெற ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், மருத்துவக் கல்வியை ஒன்றிய அரசு இந்துத்துவமயமாக்க முயல்வதை கைவிட வேண்டும் " என வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

உலக மருத்துவர்கள் சங்கம் 2017 ஆம் ஆண்டு உருவாக்கியுள்ள "மருத்துவர்கள் உறுதிமொழியை (Physicians'Pledge)" இந்தியாவிலும் ஏற்பதே இன்றைய நிலைக்கு உகந்ததாக இருக்கும்.இந்த உறுதிமொழியை ஒன்றிய அரசும்தமிழ்நாடு அரசும் உடனடியாக ஏற்க வேண்டும். ஒன்றிய அரசும், தேசிய மருத்துவ ஆணையமும் (NMC) மருத்துவம் மற்றும் மருத்துவக் கல்வி தொடர்பான சுற்றறிக்கைகளை, உத்தரவுகளை மாநில அரசுக்குத்தான் அனுப்ப வேண்டும். மாறாக ஒன்றிய அரசு, தேசிய மருத்துவ ஆணையரும். நேரடியாக மாநில அரசில் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கோ, அரசு மருத்துவர்களுக்கோ சுற்றறிக்கை/ உத்தரவுகள் அனுப்புவது , மருத்துவர்களின் கூட்டங்களை நடத்துவது கூடாது என தமிழக அரசும் மற்ற மாநில அரசுகளும் ஒன்றிய அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.

இந்த உறுதி மொழி ஏற்பு பிரச்சனை குறித்து ஒரு நடுநிலையான உயர்மட்டக் குழுவின் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

தொடர்புக்கு: **9940664343**



# பருத்தி நூல் ஒரு வாழ்வாதா

என்.ராதாகிருஷ்ணன்

**இன்று அளவுக்கு மீறி ஏறியிருக்கிற பருத்தி நூலின் விலை பருத்தி ஆடைகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஒட்டு மொத்த ஜவுளித்தொழிலையும்ஸ்தம்பிக்க வைத்திருக்கிறது. நாடு முழுமையிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மொத்தம் பனிரெண்டு கோடி மக்களுக்கு நாட்டின் ஜவுளித் தொழிலானது வேலைவாய்ப்பை வழங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கணிசமான அளவில் இந்தியாவிலிருந்து பருத்தி ஆடைகள், துணி, நூல், பஞ்சு போன்றவை ஏற்றுமதியாகிறது. இதற்குக் காரணம் பருத்தி இந்தியாவில் அதிகமாக விளைவது தான்.**

**உலக அளவில் அதிகரிக்காத பருத்தி உற்பத்தி**

உலக நாடுகளில் சீனாவும் இந்தியாவும் பருத்தி விளைச்சலில் முதல் இரண்டு இடங்களை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. மொத்த உற்பத்தியில் 45 சதவிகித பருத்தி இந்தியாவிலும் சீனாவிலும் விளைகிறது. 2020–21 ஆண்டில் இந்தியாவில் சுமார் 5.75 மில்லியன் மெட்ரிக் டன் சீனாவில் 5.92 மில்லியன் மெட்ரிக் டன். பருத்தி உற்பத்தியும் நாட்டின் ஜவுளி உற்பத்திக்கான பருத்திக்கொள்முதலும் இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த 15 ஆண்டுகளாக சம அளவில் இருந்து கொண்டிருந்தது. அதே நேரத்தில் சிறிதளவு பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதியும் அனுமதிக் கப்பட்டது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளில் அதிக அளவு பஞ்சு, நூல் போன்றவை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்ய அனுமதிக் கப்பட்டிருக்கிறது. பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதி என்று வருகிற போது பற்றாக்குறை ஏற்பட்டு தனது சொந்தத்தேவையைப் பூர்த்தி செய்ய இந்திய ஜவுளித்தொழில் சிரமப்படுகிறது.

கடந்த நான்கைந்து ஆண்டுகளில் சீனா அதிகமான அளவில் பஞ்சு இறக்குமதி செய்ய ஆரம்பித்துவிட்டது. தனது உற்பத்தியை விட தேவை அதிகமாகியிருக்கிறது.உதாரணத்திற்கு 2020 ல் சீனாவின்பஞ்சு உற்பத்தி 5.92 மில்லியன் டன் என்றால், அந்த நாட்டின் தொழிலுக்கு தேவையான பஞ்சின் அளவு 8.25 மில்லியன் டன் என்ற அளவில் இருக்கிறது.

அமெரிக்கா பருத்தி உற்பத்தியில் மூன்றாம் இடத்தில இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் 50 %உற்பத்தியை பெருக்கிக் கொண்டிருக்கிறதென்றாலும் அங்கு ஜவுளி உற்பத்தி அதிகமாக இல்லை. அமெரிக்கா 80 சதவீதம் பருத்தி அல்லது பஞ்சை ஏற்றுமதி செய்து விடுகிறார்கள். இந்தியாவிலிருந்து பஞ்சு மற்றும் பருத்தி நூலானது சீனா, பங்களாதேஷ், மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. இந்த நாடுகள் ஆடைத்தயாரிப்பில் இந்தியாவோடுபோட்டி போடும் நாடுகள்.

சிறிய அளவில் பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் பாகிஸ் தான், பிரேசில், உஸ்பெகிஸ்தான், வியட்நாம், பங்களாதேஷ் போன்றவை அடங்கும். ஆனால் வியட்நாம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பருத்தி ஆடை உற்பத்தி, ஏற்றுமதி அதிகமாக இருப்பதால் அவை பஞ்சு மற்றும் நூலை அதிக அளவில் இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றன. மூன்றாம் இடத்தில் இருந்த அமெரிக்கா2010 லிருந்து 2017 வரை இந்தியாவில் பருத்தி பஞ்சு உற்பத்தி அதிகமாகவும் அதை உபயோகப்படுத்துகிற ஜவுளித்துறையின் தேவையை விடக்குறைவாகவும் இருந்தது.2010 ல் ஆரம்பித்து கடந்த 10 ஆண்டுகளில் உலக நாடுகளின் ஒட்டு மொத்த பஞ்சு உற்பத்தி 25 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து வெறும் 26.8 மில்லியன் டன்னாகத்தான் உயர்ந்திருக்கிறது.தேவைக்கேற்ற அளவு உற்பத்தி இல்லை என்பதும் தற்போதையபிரச்சனைக்கு ஒரு காரணம்.

**அபரிமிதமான நூல் விலை :**

பணவீக்கத்திற்குதக்கவாறு எந்தப்பொருளும் விலைஏறிக் கொண்டு தானிருக்கும். எவ்வளவு ஏறியிருக்கிறது.

மக்களுக்கு நேரடியாக பயன்படுகிற பொருட்கள் விலையேற்றம் மக்களுடைய வருமானத்தோடு தொடர்பு படுத்தப்படுகிறது. தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி கிடைக்கிறது. ஆனால் ஒரு தொழிலுக்கான மூலப்பொருள் கடுமையான விலையேற்றத்தை சந் திக்கிறபோதுதொழில் அதை உள்வாங்கி இலாபம் ஈட்டும் நிலையை தக்கவைத்துக் கொள்வதோடு பொருளை வாங்குவோரையும் தொழிலாளிகளையும் இருத்திக்கொள்ள வேண்டும். ஆனால் ஏற்றுமதித்தொழிலில்நாடுகளுக்கிடையே போட்டி நிலவுவதால் எங்கு விலை குறைவோ அங்கு இறக்குமதியாளர்கள் சென்று விடுகிறார்கள். அக்டோபர் 2021 ல் கேன்டி என்று சொல்லப்படுகிற 356 கிலோ கொண்ட ஒரு பொதியின் விலை ரூ.59000. ஏப்ரல் 2022 ல் அது ரூ 95000–100000. ஓராண்டில் 80 சத விலையேற்றம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. பருத்தி நூலைப்பொறுத்தவரை இந்த அளவு விலையேற்றத்தை தொழில் சந்தித்ததில்லை.உதாரணத்திற்கு 30’ஸ் கோம்புடு ஒசைரி நூல் விலை 2021 செப்டம்பரில் ரூ 289, டிசம்பரில் 329, 2022 மார்ச்சில் ரூ.369, 2022 மே மாதம் ரூ 420. இது பங்குச்சந்தை சூதாட்டம் அதிகமாக ஏறி கடைசியில் வீழ்ச்சியைசந்தித்து முதலீட்டாளர்களை ஓட விடுவது போலபல ஆண்டுகளாக ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை தொழிலை விட்டே அப்புறப்படுத்துவது போன்று இருக்கிறது ஐரோப்பிய அமெரிக்க மற்றும் ஆப்பிரிக்க இறக்குமதியாளர்களிடம் விலை நிர்ணயம் செய்துவிட்டு வந்த ஓரிரு நாட்களில் திடீரெனெகிலோவுக்கு 3040 ரூபாய் ஏறியவுடன் இந்திய ஏற்றுமதியாளருக்கு அந்த ஆர்டரை செய்யமுடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. திடீர் திடீரென்று ஏற்பட்ட விலையேற்றத்தால் ஏற்றுமதிவர்த்தக ஒப்பந்தம் ரத்து ஆகி விற்பனை வாய்ப்பு கையை விட்டுபோய் விடுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இது போன்ற நிகழ்வுகளை ஏற்றுமதியாளர்கள் பலமுறைசந்தித்து விட்டார்கள்.

**பருத்தி விலை – பஞ்சு விலை விவரங்கள்**

மஹாராஷ்டிரா, குஜராத், ஆந்திரா போன்ற மாநிலங்களில் தான் பருத்தி அதிகமாக விளைகிறது.அமராவதி, ராஜ்கோட், அதோனி போன்ற சந்தைகள் பிரபலமானவை. ஏப்ரல் 2022 வாக்கில் இங்கு பருத்தி குவின்டால் சுமார் ரூ 9500 லிருந்து 11000 வரை விற்கப்பட்டது.சராசரியாக பருத்தி அறவில் 35 சதம் பஞ்சு கிடைக்கிறது. ரூ.10000 க்கு ஒரு குவின்டால் என்று எடுத்துக்கொண்டால் 65 சதம் பருத்திக்கொட்டை மற்றும்கழிவுகள் அறவுகூலி இலாபத்திற்கு செல்வதாக வைத்துக்கொண்டால் குவின்டால் ரூ.16500என்பது பஞ்சு விலையாக இருக்க வேண் டும். கிலோ ரூ 165 ஆக இருக்கலாம். ஆனால் கிலோரூ 260 என்று நூற்பாலைக்காரர்களும் பஞ்சு வியாபாரிகளும் சொல் கிறார்கள்.இந்த மாற்றத்தில் தான் பிரச்சனை உருவாகிறது.

**தரக்குறைவான ஆடை உற்பத்தியை நோக்கி**

நல்ல தரமான ரிங் ஸ்பன் முறையில் நூற்பு செய்யப்பட்ட நூல்தான் ஏற்றுமதிக்கான ஆடைத்தயாரிப்பில் இதுவரை பயன்படுத்தப்பட்டது.விலை அதிகமானதால் தரம் குறைந்த பஞ்சைக்கொண்டு துண்டுகள், ஜமுக்காளம் போன்றவைகளை உற்பத்தி செய்வதற்கான ஒப்பன் எண்ட் நூற்பு முறையில் உற்பத்தி செய்யப்படுகிற நூலை விலை குறைவாக உள்ளது என்று வாங்கி பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். இப்படி உற்பத்தியாகிற ஆடைகளின் தரமும் குறைவாக இருப்பதால் முழுமையான அளவில் எல்லா வகையான இறக்குமதியாளர்களிடமும் வர்த்தகம் செய்ய முடியாது.

உள்நாட்டுச்சந்தைக்காக தயாரித்து வைக்கப்பட்ட ஆடை வகைகள் பல அதிக விலைக்கு வாங்குவதற்கு ஆளில்லாமல் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளிகள் வேலையிழப்பை சந்தித்துக் கொண்டிருக் கிறார்கள் . புதிய முதலீடுகள் செய்வதற்கு தொழில் முனைவோர் தயங்குகிறார்கள்.

இது போன்ற நிலைமை நீடிக்கக்கூடாது.பி டி பருத்தி ரகமான 29 மி மீ ஸ்டேப்பிள் நீளம் உள்ள உயர்தர சங்கர் 6 ன் பஞ்சசைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிற ஒசைரி நூலின் விலைஎப்படி உயர்ந்திருக்கிறதென்று பாருங்கள்.

| Date | Price 30’s Combed Hosiery |
|---|---|
| 01.03.2019 | Rs 232 |
| 01.06.2019 | Rs 242 |
| 01.09.2019 | Rs 220 |
| 01.12.2019 | Rs 215 |
| 01.03.2020 | Rs 205 |
| 01.09.2020 | Rs 215 |

| Date | Price 30’s Combed Hosiery |
|---|---|
| 01.12.2020 | Rs 232 |
| 01.03.2021 | Rs 267 |
| 01.06.2021 | Rs 285 |
| 01.09.2021 | Rs 289 |
| 01.12.2021 | Rs 329 |
| 01.03.2022 | Rs 369 |
| 01.05.2022 | Rs 420 |

இது போன்ற விலையேற்றம், நிச்சயமற்றதன்மை ஆடை ஏற்றுமதித் தொழிலைமிகுந்த சிரமத்திற்குள்ளாக்கும்.

ஆடை ஏற்றுமதித்தொழிலில் கிடைத்த அரசுச் சலுகைகள்

இந்திய ஆடை உற்பத்தித்தொழில் பல்வேறு பரிணாமங்களைக் கடந்து வந்திருக்கிறது.சிறு குறு தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட பின்னலாடைத் தொழிலில் தொழிலாளர்களாக இருந்தவர்கள் சிறு முதலாளிகளாக மாறினார்கள். அவர்களுக்கான உள்நாட்டுச் சந்தை பெருகிய போது வங்கிகளில் கடன் பெற்றார்கள். தங்கள் தொழிலை சிறிது விரிவு படுத்தினார்கள். பிறகு 1985 வாக்கில் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் வர ஆரம்பித்தன அரசு ஊக்கத்தொகை அளித்தது. **CCS(Cash Compensatory Support )** என்ற பெயரில் பணமாகக்கொடுக்கும் ஊக்கத்தொகை 10 சதவிகிதம், மூலப்பொருட்களை செலுத்தப்பட்ட வரியைத்திரும்பப்பெறும் வகையில் **(Duty Drawback)** 13 சதவிகிதம். இறக்குமதி உரிமம் அளிக்கப்பட்டதை விற்றதினால் வரும் 23% **(REP licence)** என்று மொத்தம் ஏற்றுமதி ஆகும் பொருட்களின் மதிப்பில் 25 சதவிகிதம் உதவித்தொகையாகவே ஏற்றுமதியாளர்களுக்கு கிடைத்தது.

இவைகள் போக பல வருடங்களுக்கு ஏற்றுமதி வியாபாரத்தின் மூலமாக வரும் இலாபத்திற்கு வருமான வரி பிடித்தம் கிடையாது. இப்படி பல்வேறு சலுகைகளை பெற்றதோடு ஏற்றுமதிக்கான கோட்டா அமலில் இருந்த போது அவர்களுக்கு **FCFS, Past Performance Entitlement (PPE)** என்று கோட்டா உரிமங்கள் வழங்கப்பட்டன. இப்படி இருந்த நிலையில்புதிய முதலீட்டுக்கான கோட்டா என்று **(New Investor Entitlement-NIE)** அறிமுகப்படுத்தினார்கள். நவீன இயந்திரங்கள் வாங்கினால் உடனடியாக முதலீட்டுக்கு தகுந்த அளவில்கோட்டா கொடுக்கப்படும். மேற்கண்ட கோட்டாவை அவர்களாகவே ஏற்றுமதி செய்வதற்கும் பயன்படுத்தலாம் அல்லதுமற்றவர்களுக்கு விற்று விடலாம்.


இந்த கோட்டாவை விற்று வருகிற வருமானம் முழுக்க முழுக்க கருப்புப்பணம் தான். 1997–2002 வரை இருந்த இந்தப் புதிய முதலீட்டுக்கான கோட்டா வழங்கும் நடைமுறை அமலில் இருந்த காலகட்டத்தில் அவரவர் சக்திக்குதகுந்த அளவில் இயந்திரங்களில் முதலீடு செய்து கோட்டா பெற்றார்கள்; விற்றார்கள். கருப்புப்பணமாக கைக்கு வந்தது. முதலீட்டுக்குச் சமமாக கோட்டாவிற்ற தொகைகைக்கு வந்து சிலர் 30 லட்சத்திற்கு இயந்திரம் வாங்கி முப்பது லட்சம் கணக்கில் வராத பணம் பெற்றார்கள்.சிலர் 1 கோடி இயந்திரம் வாங்கி 1 கோடி கருப்புப்பணத்தை பெற்றார்கள்.10 கோடிக்கு 10 கோடி கிடைத்தது. 30 கோடி முதலீட்டுக்கு 30 கோடி கறுப்புப்பணம் கிடைத்தது.

சிலர் 30 கோடிக்கு சாயமிடுதல், சுருக்கம் நீக்க இயந்தி ரங்கள், துணி அறவு, தையல் அச்சு இயந்திரங்கள் என்று வாங்கிக் குவித்தார்கள். 30 கோடி பணம் இலவசமாக கிடைத்தது.உலக அளவில் எங்கும் காணாத ஒரு திட்டமாக இது இருந்தது.

வங்கிக் கடனில் வாங்கப்பட்ட மேற்கண்ட இயந்திரங்கள் அது பாட்டுக்கு பணம் சம்பாதித்தன.கடன் தவணை கட்டியது போக மீதமான தொகையும் மாதாமாதம் சேமிக்கப்பட் டது,செலவழிக்கப்பட்டது.ஜவுளித்தொழிலில் இருந்த இது போன் றொதொரு நடைமுறை வேறு எந்தத்தொழிலிலும் இல்லை என்று சொல்லலாம்.

இப்படிச்சம்பாதித்தவர்களில் வந்த ஒரு சிலர் பின்னோக்கு தொழிற்கட்டமைப்பு இணைப்பில் நூற்பாலைகளைத் தொடங்




**நிலத்தை பொதுவுடைமையாக்கி மாற்றி கூட்டுறவு முறையில் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே அருவருக்கத்தக்க வறுமை-யிலிருந்து விவசாயத் தொழிலாளர்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியும். - ஏங்கல்ஸ்**

# விலையேற்றம்

# ...ாரப் பிரச்சனை



கினார்கள். நகரங்களை ஒட்டிய சில பின்தங்கிய மாவட்டங்களில் நூற்பாலைகளை அமைக்கப்பட்ட போதுமுதலீட்டுத் தொகையில் 15 முதல் 25 சதம் வரை அரசின் உதவித்தொகையும் கிடைத்தது.

அ ர சி ன் நடைமுறைகள் மற்றும் உதவித் தொகையின் வழியாக பெரிய தொகை இன்னும் அதிக மான புதிய முதலீட் டுக்காக வந்து சேர்ந்தது. நூற்பாலைகளுக்கு மின்சக்தி அதி கம் தேவைப்படும் என்பதால் அவர்களுக்கு அப்பே பாதைய கால கட்டத்தில் காற்றாலைகள் நல்ல முத லீடுகளாகத் தெரிந்தன. காற்றாலைகளுக்கு அரசு மானியம் வழங்கிக் கொண்டிருந்த சூழ்நிலை அது. எனவே காற்றாலை முதலீட்டுக்கான மானியமும் எளி தாக கிடைத்தது. காற்றாலை நிறு விய ஆடை உற்பத்தியாளர்கள் – நூற்பாலைக்காரர்களுக்கு மின் சாரக் கட்டணமே இல்லை, அது இல வசம் என்ற நிலை உருவானது. பருத்தி, பஞ்சை நூலாக மாற்றும் நூற்பாலைத் தொழிலில் செலவினங்களில் மின் கட்டணம் என்பது பெரிய தொகை. அது காற்றாலை நிறுவிய நூற்பாலைகளுக்கு இலவசமாக கிடைக்கும்போது புதிதாக நூற்பாலை நிறுவ வருபவர்கள் அவர்களோடு போட்டி போடா முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே இரண்டு வகைகளாக நூற்பாலைகளை இயங்கின. பல்வேறு அரசு உதவித்தொகைகள், நடைமுறைகள் மூலமாக பணம் ஈட்டியவர்கள் நடத்தும் நூற்பாலைகள், புதிதாக நூற்பாலைகளை துவங்கியவர்கள் என்று இரண்டு பேருக்கும் இலாபம் நஷ்டம் ஒரே மாதி ரியாக இல்லாமல் அதில் நிறைய வித்தியாசம் இருந்தது.

எனவே சில நூற்பாலைகள் நட்டத்திலும் சில நல்ல இலாபத்திலும் ஓடின. இலாபத்தில் ஓடியஆலைகள் தங்களுடைய சொந்த உப யோகத்துக்கும் அது போக வெளிச்சந்தைக்கும் விற்றார்கள். மேலும் நூற்பு இயந்திரங்களை வாங்கி தங்கள் உற்பத்தித்திறனை இரண்டு மூன்று மடங்காக அதிகப்படுத்தி கொண்டார்கள். இன்று நூல் விலையேற்றத்தால் கிலோ ரூ.400 க்கு வாங்கினால் கட்டுப்படியாகாது என்பதனால் தரம் குறைந்த ஓ.இ. நூலை ரூ.300 க்கு வாங்கி மட்டமான ஆடைகளை தயாரிக்கும் நிலைக்கு சாதாரண சிறு குறு ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டு விட்டார்கள். ஆனால் அரசு சலுகைகளை அன்று முழுவதுமாக அனுபவித்தவர்கள் நூற்பாலை, காற்றாலை என்று நிறுவி ஆடை ஏற்றுமதியில் மற்ற சிறு உற்பத்தியாளர்கள் தங்க ளுடன் போட்டி போட முடியாமல் செய்து விட்டார்கள்.

தொழில்நவீனமடைய வேண்டும்என்று அரசு 25 வருடங்களுக்கு முன்னர் நடவடிக்கை எடுத்தது. 25 ஆண்டுகளுக்குப்பிறகு கழிவுப்பஞ்சிலிருந்து தயாராகும் மட்டரக நூலை சிறு குறு ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்துவது நகை முரணாயிருக்கிறது. நூற்பாலை வைத்திருக்கும் ஆடை உற்பத்தியாளர்கள் திடமாக அமர்ந்திருக்கிறார்கள் .

| India Cotton Production/consumption Million Tonnes | | | | |
|---|---|---|---|---|
| Year | Yarn Export Crores | Cotton Export Crores | Cotton-Crop Prod | Con-sump-tion |
| 2021-&22 | 35406 | 18351 | 5.69 | 5.78 |
| 2020&-21 | 20036 | 10614 | 6.05 | 5.98 |
| 2019-&20 | 19148 | 6421 | 5.75 | 5.53 |
| 2018&-19 | 26560 | 12463 | 5.5 | 5.4 |
| 2017-&18 | 21712 | 9545 | 6.35 | 5.42 |
| 2016-&17 | 22057 | 8907 | 5.86 | 5.15 |
| 2016&-17 | 22057 | 8907 | 5.86 | 5.15 |
| 2015&-16 | 23279 | 11580 | 5.75 | 5.3 |
| 2014&-15 | 23884 | 13704 | 6.56 | 5.38 |
| 2013&-14 | 27441 | 19026 | 6.77 | 5.08 |
| 2012&-13 | 18998 | 17676 | 6.29 | 4.76 |
| 2011&-12 | 14049 | 20407 | 6.09 | 4.81 |
| 2010&-11 | 12615 | 12957 | 5.77 | 4.59 |
| 2009&-10 | 7314 | 7420 | 5.35 | 5.19 |
| | Rs in crores | Rs in crores | Million Tonnes | Million Tonnes |

**மூலப்பொருள் தட்டுப்பாட்டினால் வந்த சவால்கள்**

இன்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட பருத்தி நூலின் விலை இரண்டு மடங்கை விட அதிகமாகி விட்டது.சிறு குறு உற்பத்தியாளர் அனைவரும் சேர்ந்து தான் ஆடை ஏற்றுமதித் தொழிலை விரிவுபடுத்தினார்கள். நூற்பாலைகள் தங்கள் உற்பத்திப் பொருளான நூலை சிறு குறு உற்பத்தியாளர்களுக்கு விற்றுத்தான் தங்கள் தொழிலை நடத்தினார்கள். எனவே நூற்பாலைகள் இயங்க இலாபம் சம்பாதிக்க ஆயிரக்கணக்கான சிறு குறு உற்பத்தியாளர்கள் தான் காரணமாக இருந்திருக்கிறார்கள். திருப்பூர் போன்ற ஊர்களில் சிறு குறு உற்பத்தியாளர்கள் நிறுவிய ஆடை ஏற்றுமதித் தொழிலில் இருந்து கொண்டே அவர்களுக்கு எதிராக நூல் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, பஞ்சு விலையைகாரணம் காட்டி நூல் விலையை உயர்த்தி சிறு குறு ஆடை உற்பத்தியாளர்களை வாங்க இயலாமல் செய்து ஏற்றுமதி வர்த்தகத்தை தங்கள் கையில் இருக்குமாறு நூற்பாலைகள் நிறுவிய ஆடைஏற்றுமதியாளர்கள் தக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நூற்பாலை அதிபராகவும், ஆடை ஏற்றுமதியாளராகவும் இருப்பவர் அவருக்கு எதில் இலாபம் அதிகமாக வருகிறதோ அந்தத் தொழிலுக்குச் சாதகமாகத்தான் நடந்து கொள்வார். இது போன்ற சூழ்நிலையில் ஆடை ஏற்றுமதி சிண்டிகேட்டுக்கள், கார்ட்டல்கள் உருவாகி தன்னலக் குழுக்களாக செயல்படும் நிலைமை உருவாகி விடும். எம் எஸ் எம் ஈ (MSME) என்று நாம் பெருமையோடு சொல்லக் கொள்கிற சிறு குறு தொழில் முனைவோர்களே காணாமல் போய் விடுகிற நிலைமை வந்து கொண்டிருக்கிறது. எனவே ஒட்டுமொத்த தொழில் அமைப்புக்களில் நூற்பாலைகள் இல்லாத சிறு குறு ஆடை உற்பத்தியாளர்கள் இருந்தாலும் கூட தாங்கள் மட்டும் பாதிக்கப்படுவதால் தங்களுக்கென ஒரு குழு அமைத்து மூலப்பொருள் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். நூற்பாலைகள் இல்லாத சிறு குறு ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஒரு அமைப்புத் தேவைப்படுகிறது. இந்தப்பிரச்சினையில் மத்திய மாநில அரசுகள் இரண்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. திருப்பூர், ஈரோடு, சேலம் போன்ற இடங்களில் ஆடை, ஜவுளி உற்பத்தி மிகபெரிய அளவில் நடக்கிறது. ஆனால மூலப்பொருளை (பருத்தி நூல்) வெளி மாநிலங்களிலிருந்து தான் வாங்க வேண்டும். தமிழ்நாட்டில் திருப்பூர் தவிர, அன்னூர், அவிநாசி, அந்தியூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி கெங்கவல்லி , ஆத்தூர், விருதுநகர் போன்ற இடங்களிலும் பருத்தி வரத்து நிறைய இருக்கும். தற்போது மேற்கண்ட இடங்களில் மிகக்குறைந்த அளவில் தான் பருத்தி விவசாயிகளிடமிருந்துவிற்பனைக்குவருகிறது. பஞ்சு விலை உயர்வு, நூல் ஏற்றுமதியை அனுமதித்தது, நூற்பாலைகள் விலையை அதிகமாகஉயர்த்தியது என்று பல காரணங்கள் நூல் விலை உயர்வுக்கு சொல்லப்பட்டாலும், பருத்திவிவசாயிகளுக்கு இந்த விலை உயர்வினால் பெரிய பயன் கிடைக்கவில்லை.ஆனால் ஜவுளித்துறை அமைச்சர் பஞ்சு நூல் விலை உயர்வு விவசாயிகள் பயன் பெறும் வகையில்உள்ளதால் நாங்கள் தலையிடமுடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்.பருத்தி நூல் விலையினால் சிறு குறு உற்பத்தியாளர்கள் திணறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்மத்திய அரசு அவர்களுக்கு எதுவும் செய்யாமல் செயற்கை நூலிழைகளிலான ஆடை உற்பத்தியாளர்களுக்கு 10 சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கியுள்ளது. இதில் இன்னொரு முக்கியமான விசயம் என்னவென்றால் மேற்கண்ட 10 சத ஊக்கத்தொகையைப்பெற ரூ 300 கோடிக்கு மேல் முதலீடு மற்றும் வியாபாரம் செய்ய வேண்டும். ஏற்கனவே திருப்பூர் போன்ற ஊர்களில் செயற்கை நூலிழைகளைக் கொண்டு ஆடை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் சிறு குறு உற்பத்தியாளர்களுக்கு இந்த 10 சத ஊக்கதொகை கிடைக்காது. பருத்தி மற்றும் செயற்கை நூலிழைகள் இரண்டிலுமானஆடை உற்பத்தியில் பெரு நிறுவனங்களுக்குச்சாதகமாககொள்கை முடிவுகள் எடுக்கபட்டு வருவதையும் சிறு குறுநிறுவனங்கள் வெளியே தள்ளப்படுவதையும் இதிலிருந்து நாம் உணரலாம்.

ஒரு புறம் நூற்பாலைகள் மட்டும் இலாபம் சம்பாதிக்க அந்த நூற்பாலைகள் உருவாகக்காரணமாக இருந்த ஆடை உற்பத்தியாளர்கள் தொழிலை விட்டு விரட்டியடிக்கப்படுவது அவலமானது மட்டுமல்ல ,அது அரசு உடனே தலையிட வேண்டிய பிரச்சனையாகும்.

நேரடியாக பருத்தியை காட்டன் கார்ப்பரேசன் ஆப் இந்தியாவே விவசாயிகளிடமிருந்து வாங்கி அறவு ஆலைகளுக்கு, நூற்பாலைகளுக்கு பஞ்சு வழங்குவதோடு மேற்கண்ட இடங்களில் தன்னுடைய கண்காணிப்போடு பருத்திக்கொள்முதல், அறவுகூலி , நூற்புக்கூலி ஆகியனவற்றை விலை நிர்ணயம் செய்து நூல் விலையைக்கட்டுப்படுத்தலாம்.

நாட்டின்400இடங்களில்செயல்படும் பொதுத்துறைநிறுவனமான காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா ஆரம்பிக்கப்பட்டதன் பிரதான

| நூல்உற்பத்திச்செலவு | | |
|---|---|---|
| எண் | செலவு வகை | செலவு தொகை |
| 1 | பஞ்சு விலை கிலோவுக்கு | 260 |
| 2 | கழிவு சதவிகிதம் 12% Rs | 31 |
| 3 | தூய்மைப்படுத்தப்பட்ட பஞ்சு | 281 |
| 4 | கழிவுப்பஞ்சின் வருவாய் Rs | 10 |
| 5 | உற்பத்திக்கான கூலி கிலோவுக்கு | 7 |
| 6 | அலுவலர் ஊதியம் | 2 |
| 7 | மின்சாரம்கிலோவுக்கு | 25 |
| 8 | பேக்கிங் | 2 |
| 9 | இயந்திரபராமரிப்புச்செலவு | 1 |
| 10 | புளோரூம் கார்டிங் கழிவு 10% | 29 |
| 11 | திடக்கழிவு இதரகழிவுகள் 3% | 8 |
| 12 | 13% கழிவு வருவாய் Rs | 10 |
| 13 | நூல் அடக்கவிலை | 350 |
| 15 | 13%இரண்டாம் நிலைக்கழிவு விற்றவரவு | 20 |
| 16 | நிகர அடக்க விலை | 330 |
| 17 | இலாபம் 10% | 33 |
| 18 | விற்கவேண்டியவிலை | 363 |
| 19 | நிஷிஜி | 16 |
| 20 | விற்கவேண்டியவிலை+GST | 379 |
| 21 | 200 பைகள் நளொன்றுக்கு 10000 கிலோ | 3300000 |
| 22 | சந்தையில்விற்கும் விலை | 420 |
| 23 | ஒரு நாள் விற்பனை வரவு | 4200000 |
| 24 | இலாபம்(420363)ஜ்10000 ஒரு நாளைக்கு | 570000 |

நோக்கமே பருத்தியைச்சந்தைப்படுத்தல் பருத்திக்கொள்முதல் மற்றும் இறக்குமதிக்கான முகமை நிறுவனமாக இருந்து நூற்பாலைகள் தேவைகளுக்கு ஏற்ப பஞ்சு பருத்தி வழங்கலை சீர் செய்வது தான். நூற்பாலைகளுக்கு ஒரு பொதுத்துறை நிறுவனம் சேவை புரிகிற போது லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிக்கொண்டிருக்கும் ஆடைத் தயாரிப்பாளர்களுக்கு உரிய சரியான விலையில் நூற்பாலைகள் மூலப்பொருளான நூலை வழங்குவதற்கு முன்னால் நின்று உதவ வேண்டும்.

2) நூற்பாலைகளுக்கு **(Conversion Charges from cotton to yarn )** பஞ்சு – நூல் மாற்றத்திற்கான விலையை நிர்ணயிப்பது.

என்.டி.சி. நூற்பாலைகளை நவீனப்படுத்தி மீண்டும் இயங்க வைத்து விலைக்குறைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தல்.


நூல் விலை ஏற்றம் சரி செய்யப்படும் வரை செயற்கை நூலிழை ஆடை தயாரிப்பிற்கு 10 சத (றிலிமி)ஊக்கத்தொகை வழங்கபடுவதைப் போல சிறு குறு உற்பத்தியாளர்களுக்கு மட்டும் பருத்தி ஆடை தயாரிப்பிற்கு உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பஞ்சு ஏற்றுமதி தடை செய்ய வேண்டும் என்ற நூற்பாலைகள் கோரிக்கை வைக்கிறார்கள்.ஆனால் நூல் ஏற்றுமதியில் ஈடுபடுகிறார்கள். பஞ்சு நூல் இரண்டின் ஏற்றுமதியையும் குறைத்து மதிப்பு கூட்டப்பட்ட ஆடைகளாக ஏற்றுமதி செய்வது அன்னிய செலவாணியை ஈட்டும்.

விவசாயிகளுக்கு கிடைக்கும் விலையை விட பருத்தி அறவிற்குப்பிறகு பஞ்சு வியாபாரிகளுக்கு கிடைக்கும் இலாபம் மிக அதிகம் என்பது முக்கியமானது. பல பெரியநூற்பாலைகள் தாங்களே அறவு செய்து விடுகிறார்கள். எனவே சந்தை பஞ்சு விலைக்கும் அவர்களுக்கும்தொடர்பில்லை. இது சரி செய்ய வேண்டிய இடம்.

பருத்திபயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில்மாநிலஅரசுகள்செயல்பட்டுபருத்தி உற்பத்தியை பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

பஞ்சு இறக்குமதிக்கான 10 சதவரி நீக்கம் மட்டும் ஆடை உற்பத்தியாளர்கள் பிரச்சனைக்குத் தீர்வைத்தராது. பல இடங்களிலும் மத்திய மாநில அரசுகள் செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன என்பதை புரிந்து செயலாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது.



**விவசாயத் தொழிலாளி எப்பொழுதுமே குறைந்தபட்ச கூலிக்குத்தான் வேலை செய்யும் நிலை ஏற்படுகிறது. வறுமை என்ற சேற்றுக் குழியில் எப்போதும் ஒரு காலை வைத்துக்கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறான். - மார்க்ஸ்**

# திமுக ஆட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து

கடந்த 2021 மே மாதம் நடந்த சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தலைமையேற்று திமுகழகம் மகத்தான வெற்றி பெற்றது. திமுகழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் அமைந்த அரசு ஓராண்டை நிறைவு செய்து, இரண்டாவது ஆண்டில் வீறுநடை போட்டு வருகிறது. பல்லாண்டு தொடரும் ஆட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறது.

புதிய ஆட்சி, பொறுப்பு ஏற்ற நேரம் கொரோனா தொற்றின் இரண்டாம் அலைபரவல் கடுமையான சவாலாக இருந்தது. மருத்துவ ஆக்ஸிஜன், வெண்டிலேட்டர், தடுப்பு மருந்துகள், படுக்கைகள் என எல்லா முறைகளிலும் தேவைகள் அதிகரித்தது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையில் முதலமைச்சர் நேரடியாக களம் இறங்கி, அனைத்து சக்திகளையும், ஆதாரங்களையும் திரட்டி மக்கள் நலனை பாதுகாப்பதில் வெற்றி பெற்றது. கடுமையான வாழ்க்கை நெருக்கடியை சமாளிக்க அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா ரூ.4000/ விதம் நிவாரணம் வழங்கியதில் தொடங்கி, அரசுப் பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்குவது வரையிலும் தொடர்ந்து பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. மேகதாது அணைகட்டு விவகாரம், நீட் தேர்வு, விவசாயிகள் விரோத வேளாண் வணிக சட்டங்கள், குடியுரிமை பாதுகாப்பு சட்டம் போன்ற அனைத்துப் பிரச்சனைகளிலும் ஜனநாயக ரீதியான அணுகுமுறையும், சர்வதேசப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்கள் உதவியோடு தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டமிடுதல் போன்றவற்றிலும் நிர்வாகத் திறனை வெளிப்படுத்தி வருகிறது.

ஆளுநர் மாளிகை மூலம் போட்டி அரசு நடத்த துடிக்கும் வகுப்புவாத சக்திகளை முறியடிக்க சமூக நீதி, ஜனநாயகத்தை பாதுகாத்து மாநில உரிமைகளை பறித்து வரும் பாஜக ஒன்றிய அரசின் அதிகார அத்துமீறலை எதிர்த்து போராடுவதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதிகாட்டி வருவது பிற மாநில மக்களையும் எழுச்சி கொள்ள செய்துள்ளது.

வேலை வாய்ப்பு, ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட விரிவாக்கம், பழைய ஓய்வூதிய திட்டம், போக்குவரத்து தொழிலாளர் கோரிக்கைகள் உள்ளிட்ட தொழிலாளர் நலன் பேணும் நடவடிக்கைகள் போன்றவைகளிலும் இந்த அரசு சாதனைப் படைக்கும் என்ற நம்பிக்கை இழையோடி நிற்கிறது. மக்கள் ஆதரவு அடிதளத்தில் அமைந்துள்ள அரசு பல்லாண்டு தொடர்ந்திட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வாழ்த்துகிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## சமையல் எரிவாயு விலை உயர்வு

**● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் ரூ. 50 உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் பத்துக்கும் மேற்பட்ட முறை விலை உயர்த்தப்பட்டு தற்போது ஒரு சிலிண்டர் பெற ரூ.1050 வரை செலவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள் தொடர்ந்து உயர்வதைத் தொடர்ந்து உணவுப் பொருள்கள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்து வருகின்றன.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதில் பாஜக ஒன்றிய அரசு படுதோல்வி அடைந்துள்ளது. பன்னாட்டு கார்ப்ரேட் நிறுவனங்களின் லாப வேட்டைக்கு உதவும் ஒன்றிய அரசு விலை உயர்வை எதிர் கொள்ள முடியாத வாழ்க்கை நெருக்கடிக்கு ஆளாகி வரும் மக்களுக்கு துரோகம் இழைத்து வருகிறது. ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும் மறு கண்ணுக்கு சுண்ணாம்பும் வைக்கும் ஒன்றிய அரசின் வஞ்சக நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக கண்டிக்கிறது. சமையல் எரிவாயு விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஆளுநரின் பொறுப்பற்ற பேச்சு

**● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் பேச்சும், செயலும் அதிகார வரம்பு மீறியதாக தொடர்கிறது. அண்மையில் சென்னையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசிய ஆளுநர், ஒரு குறிப்பிட்ட அமைப்பின் பெயரை குறிப்பிட்டு பயங்கரவாத அமைப்பாக சித்தரித்து பேசியுள்ளார். அந்த அமைப்பு பலவகையான "முகமூடிகள்" போட்டு செயல்பட்டு வருவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். அரசியல் அமைப்பு சட்ட வரம்புக்குள் நின்று, ஜனநாயக நெறிமுறைகளை பின்பற்றி செயல்படும் ஒரு அமைப்பின் மீது ஆளுநர் அரசியல் கண்ணோட்டத்தில் புகார் கூறுவது அவர் வகிக்கும் பொறுப்புக்கு உகந்ததல்ல, ஆதாரங்கள் இருக்கும் எனில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர பொதுவெளியில் பொறுப்பற்ற முறையில் பேசுவது ஆத்திரமூட்டும் செயலாகும். உள்நோக்கம் கொண்டதாகும். ராஷ்டிரிய சுயம் சேவக் அமைப்பு ஒதுக்கீடு செய்த பணிகளை மேற்கொண்டு வரும் ஆர்.என்.ரவி "ஆளுநர் பொறுப்பை" முகமூடியாக பயன்படுத்தி வருவது அரசிலமைப்பு அதிகாரத்தை சிறுமைப்படுத்துவதாகும். ஆளுநர் தனது அதிகார எல்லையை தொடர்ந்து மீறி வருவது "கண்ணாடி வீட்டில் நின்று கல் எறிவதாக முடியும்" என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு எச்சரிக்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## மனிதனை மனிதன் சுமக்கும் பழக்கம் கைவிடப்பட வேண்டும்

**● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்**

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பழமைவாய்ந்த சைவ மடமான தர்மபுரம் ஆதினத்தின் பட்டணப் பிரவேச நிகழ்வு அப்பகுதியில் பதற்றநிலையை உருவாக்கியுள்ளது. கால மாற்றத்தில் சமூக நாகரீக வளர்ச்சியில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதை ஆதினம் கருத்தில் கொண்டு மனிதனை மனிதன் சுமக்கும் வழக்கத்தை கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு நிர்வாகம் மனிதர்கள் மனிதனை தூக்கிச் செல்வதற்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. அரசின் இந்த உத்தரவை தர்மபுர ஆதினம் மதித்து நடக்க வேண்டும்.

ஆன்மிக நம்பிக்கை கொண்டோர் நடத்தும் ஒரு நிகழ்வை தமிழ்நாடு பாஜகவும், அதன் தலைவர் அண்ணாமலையும் அரசியல் ஆதாயம் தேடி பயன்படுத்தும் மலிவான செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பண்டங்கள் விலைகளை தொடர்ந்து உயர்த்தி வரும் ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வரும் மக்களின் கவனத்தை திசைதிருப்பும் முனைப்பில் அஇஅதிமுக–பாஜக கூட்டாளிகள் செயல்படுவதை மக்கள் நன்கறிவார்கள். நாகரீக வளர்ச்சியை ஏற்கும் முறையில் மனிதர்கள் பல்லக்குத் தூக்கும் பழைமைவாத செயலை விட்டொழிக்க அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## சகுந்தலா அம்மையார் மறைவு

**● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்**

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தமிழ்நாடு மாநிலச் செயலாளரும், சமூக செயல்பாட்டாளருமான ஜி.மஞ்சுளாவின் தாயார் திருமதி.சகுந்தலா (78) மே 08 அன்று மருத்துவமனையில் காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து ஆழ்ந்த வேதனைப்பட்டோம்.

சகுந்தலா அம்மையார் தனது வாழ்விணையர் இல.கோவிந்தசாமியை இழந்த நிலையில் ஜி.மஞ்சுளா உட்பட மூன்று பெண் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கினார். உடல்நலிவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி காலமாகியுள்ளார்.

சகுந்தலா அம்மையார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் ஜி.மஞ்சுளா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### முதலமைச்சர் தலையிட்டு கோவிந்தசாமி நகர்

# மக்கள் வசிப்பிட உரிமையை பாதுகாக்க வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்**

சென்னை பெருநகர், மைலாப்பூர் பகுதி 173 வட்டத்தில் ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள கோவிந்தசாமி நகரில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஏழை மக்கள் குடியிருந்து வரும் குடிசைகளையும், வீடுகளையும் வருவாய்த்துறை அதிகாரிகள் காவல் துறையின் பாதுகாப்போடு புல்டோசர் கொண்டு இடித்து தகர்த்து வருகின்றனர். இங்கு குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்த கோவிந்தசாமி நகரில் உடல் உழைப்பு மட்டுமே வாழ்வாதாரம் என்ற நிலையில் உள்ள தினக்கூலி தொழிலாளர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. கோவிந்தசாமி நகர் கடந்த 1970 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் தான் மாநகரின் குடிசைப்பகுதி என அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சுமார் 700 குடும்பங்கள் வசித்து வரும் இந்த நிலப்பரப்பை அபகரிக்கும் நோக்கத்துடன் நில வியாபாரி ஒருவர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் அவருக்கு ஆதரவாக குடிசைகள், வீடுகளை காலி செய்வதில் வருவாய்த்துறை அதிகாரிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பக்கிங்காம் கால்வாய் நீர் வழிப்பாதைக்கோ, அதன் கரைகளுக்கோ சேதாரம் ஏற்படும் வகையில் எந்தக் கட்டுமானமும் கோவிந்தசாமி நகரில் கட்டப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். ஏற்கனவே, அங்கு இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன என்றும் தெரிவிக்கின்றனர் இப்போது "புல்டோசர்" கொண்டு வீடுகளை இடிப்பதால், வசிப்பிடத்தை இழந்த கல்லுடைக்கும் தொழிலாளி கண்ணையா மே 08 அன்று தீக்குளித்து தன்னுயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்துள்ளார். அவர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நாட்டின் குடிமகன், வசிப்பிடம் கேட்டு உயிரிழப்பது சமூகத்திற்கே அவமானமாகும். அதுவும் பிளஸ் 2, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் தேர்வு எழுதும் சூழலில் இந்த நடவடிக்கை எண்ணிப் பார்க்கவே நெஞ்சு பதறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாம் முறையாக தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, அதனை வழிநடத்தும் "தளபதி" திரு மு.க.ஸ்டாலின் ஆட்சியின் இரண்டாம் ஆண்டு துவங்க விழா கொண்டாடி மகிழ்ந்து வரும் வேளையில் கோவிந்தசாமி நகரில், அதிகார வர்க்கத்தின் வருவாய்த்துறை, புல்டோசர் கொண்டு ஏழை மக்கள் வீடுகளை தகர்த்து வரும் இரக்கமற்ற செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நேர்வில் மாண்புமிகு முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு, நீதிமன்ற உத்தரவின் மீது மேல்முறையீடு செய்வது உட்பட சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு, கோவிந்தசாமி நகர் மக்களின் வசிப்பிட உரிமையை பாதுகாக்க வேண்டும் என கட்சி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




## விவசாய பயிர்களை அழிக்கும் காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்துக!

**தஞ்சை ஆட்சியரிடம் கோரிக்கை**

தமிழ்நாடு விவசாயிகள் சங்க அம்மாப் பேட்டை ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், தமிழ்மாநில விவசாயித் தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் பாலு உள்ளிட்டோர் தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர். அதில் கூறப்பட்டிருப்பதாவது: அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் விழிதியூர் ஊராட்சியில் வெட்டுவாய்க்கால் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் காட்டுப் பன்றிகளால் பயிர்களுக்கு தொடர்ந்து சேதம் ஏற்பட்டு வருகிறது. நிலத்தில் வேலை செய்பவர்களையும் தாக்க முற்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிப்புக்கு ஆளாக நேரிடுகிறது, எனவே மாவட்ட நிர்வாகம் இதில் தலையிட்டு விவசாய பயிர்களுக்கு தொடர்ந்து சேதம் ஏற்படுத்தி வரும் காட்டுப்பன்றிகளை வனத்துறை மூலம் பிடித்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

>> 16ம் பக்கத் தொடர்ச்சி



# மே தின கொடியேற்று விழா

**ஏஐடியூசி அலுவலகம்:** தமிழ்நாடு ஏஐடியூசி மாநில தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மேதின விழாவில் இராஜேஸ்வரி கொடியேற்றி மேதின முழக்கங்களை எழுப்பி இனிப்புகளை வழங்கினார். விழாவில் ஐசிஎப் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் சார்பில் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

**மத்திய சென்னை ஐசிஎப்:** ஐசிஎப் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் ஏஐடியூசி யின் சார்பில் நடைபெற்ற மேதின விழாவில் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் மு.சம்பத் கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார். ஐசிஎப் ன் சரித்திர நாயகன் தட்சிணாமூர்த்தியின் மகன் அஜாய்குமார் மற்றும் ரகுநாதன் ஆகியோர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கி சிறப்பித்தனர்.

**சென்னை:** இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சிலைக்கு, துணைத் தலைவர் வழக்கறிஞர் கே.தேசிங், துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், தேசிய செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் தளபதி பாண்டியன், மற்றும் சென்னை மாநகர மாமன்ற உறுப்பினர்கள், திராவிட கழகத்தினர் மலரஞ் சலி செலுத்தினர்.

**மதுரை:** மதுரை திருப்பரங்குன்றம் பகுதிகளில் மே தின விழா ஏஐடியுசி மற்றும் சிஐடியு சார்பில், சிபிஐ மதுரை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.முத்துவேல் தலைமையில் கொடியேற்றத்துடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் இனிப்புகள் வழங்கி கொடி ஏற்றினார்கள்.

**ஈரோடு:** ஏஐடியூசி – சிஐடியூ சார்பில் ஈரோடு, வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தம் அருகில் மேதினப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி சுமைதூக்கும் தொழிலாளர் சங்தத் தலைவர் எஸ்.டி.பிரபாகரன் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசா யிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் பி.சண்முகம், ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி ஆகியோர் உரையாற்றினர்.

ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் பி.எல்.சிவராமன், சிஐடியு மாவட்டப் பொருளாளர் கே.மாரப்பன், ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்க (ஏஐபிஈஏ) மாவட்டச் செயலாளர் எஸ்.சூரிய நாராயணன் ஆகியோர் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி புறநகர் :** திருச்சி புறநகர் மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பாம்பாட்டி பட்டி யிலும் ஏ.ஐ.டி.யூ.சி. சார்பில் நடுப்பட்டியிலும் மே தின கொடி ஏற்றி பொதுகூட்டம் நடைபெற்றது. வையம்பட்டி ஒன்றியத்தில் சிபிஐ சார்பில் பூலாம்பட்டி கிளையில் சண்முகானந்தம், உடையாபட்டி கிளையில் மரிய டெய்சிராணி, மன்பத்தை கிளையில் இராமசாமி, வையம்பட்டி கிளையில் தங்கராஜ் ஆகியோர் கட்சி கொடியேற்றினர். பாம்பாட்டிபட்டி கிளையில் கட்சி கொடியேற்றி பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய துணை செயலாளர் தங்கராஜ் தலைமை வகித்தார். கிளை உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். இளைஞர் பெருமன்றத்தின் மாநில தலைவர் வெங்கடேஷ் வேம்புலி கொடியேற்றி மேதின சிறப்புரை நிகழ்த்தினார்.

போக்குவரத்து கழக மண்டல பொது செயலாளர் சுப்பிரமணி, சிபிஐ புறநகர் மாவட்ட துணைசெயலாளர் பழனிச்சாமி, வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம், போக்குவரத்து கழக மண்டல துணை தலைவர் சுந்தர்ராஜ், ஒன்றிய பொருளாளர் செலின் லீமா ரோசி, பெரியசாமி, ஸ்டாலின், வேளாங்கண்ணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சக்தி(எ) பழனிச்சாமி நன்றி கூறினார்.

நடுப்பட்டியில் ஏ.ஐ.டி.யூ.சி.சார்பில் மே தின பொதுகூட்டம் நடைபெற்றது. வீரச்சாமி தலைமை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் செல்வராஜ் மே தின உரை நிகழ்த்தினார். முன்னதாக கட்சி கொடி, சங்க கொடி ஏற்றப்பட்டது. திருவெறும்பூர் ஒன்றியத்தில் எழில் நகர் கிளையில் செல்வராஜ் தலைமையில் பழனிச்சாமி கொடியேற்றினார். துவாக்குடி மலை கிளையில் ராதாகிருஷ்ணன் தலைமையில் கீர்த்திவாசன் கொடியேற்றினார். அய்யம்பட்டி கிளையில் ஆரோக்கியதாஸ் தலைமையில் வின்செண்ட் பிலோமின் ராஜ் கொடியேற்றினார்.

மருங்காபுரி ஒன்றியம் நல்லமநாயக்கன்பட்டியில் சுப்பிரமணி, செல்லம்பட்டியில் பாலமுருகன், முத்தாழ்வர்பட்டியில் சின்னச்சாமி, காரப்பட்டியில் கோவிந்தராஜன், கைகாட்டியில் கந்தசாமி, ஆத்து பட்டியில் பெரியசாமி, கோவில்பட்டியில் பாலு, தேனூரில் பாலசுப்பிரமணியம், டி.பொருவாய்யில் பரமசிவம், தாத கவுண்டம்பட்டியில் ஒன்றிய செயலாளர் வெள்ளக்கண்ணு ஆகியோர் மே தின கொடி ஏற்றி உரைநிகழ்தினர்.

லால்குடி தாலுகாவில் அன்பில் கிளையில் ஒன்றிய செயலாளர் பழனிராஜ், லால்குடி ஏஐடியுசி கட்டட சங்க செயலாளர் இருதயசாமி, உள்ளாட்சி பணியாளர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் ராஜவேல், மணிகண்டன், புள்ளம்பாடி, ஏஐடியுசி ஆட்டோ சங்க செயலாளர் சதீஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சின்னவாசல் கிளையில் புண்ணியமூர்த்தி ஆகியோர் மே தின கொடி ஏற்றி உரைநிகழ்த்தினர்.






முசிறி கடைவீதியில் ஏஐடியுசி ஆட்டோ தொழிற்சங்கத்தின் சார்பாக சிபிஐ ஒன்றிய செயலாளர் சண்முகம் கொடியேற்றி மே தின உரை நிகழ்த்தினார். ஏவூர் மேலத் தெரு கிளையில் சத்யராஜ், பெரிய கொடுத்துறை சந்திரசேகர், திரனியன்பட்டி பிச்சைமுத்து, வெள்ளூர் ராஜசேகர் ஆகியோர் கிளைகளில் கட்சி கொடி ஏற்றி மே தின உரை நிகழ்த்தினர்.

தொட்டியம் ஒன்றியம் சத்திரம் கிளையில் ஒன்றிய செயலாளர் சதீஷ், அரங்கூர் கிளையில் ஒன்றிய துணைச் செயலாளர் மூர்த்தி, கொசவம்பட்டி கிளையில் நடராஜன், எம்.புதூர் கிளையில் குழந்தைவேல் ஆகியோர் கிளைகளில் கட்சிக் கொடியை ஏற்றி மே தின உரை நிகழ்த்தினர்.

உப்பிலியபுரம் ஒன்றியத்தில் உப்பிலியபுரம் கடைவிதியில் உள்ள அண்ணாசிலை அருகில் ஒன்றிய செயலாளர் மருதை, நகர செயலாளர் தங்கராசு, துணை செயலாளர் மணி, வெங்கடாசலபுரம் கிளை செயலாளர் தங்கராசு, மூக்கன், பி. மேட்டூர் கிளையில் ஒன்றிய பொருளாளர் பாலசுப்பிரமணியன், நகர செயலாளர் ஆண்டி, தெற்கு விசுவை கிளை செயலாளர் சின்னசாமி, சந்திரன் வைரி செட்டிபாளையம், ஏரிக்காடு பாஸ்கர் ரங்கன், கொப்பம்பட்டி சுப்பிரமணி நட்ராஜ், முருங்கப்பட்டி செல்வமணி, அற்புதராஜ், தழுகை கைகாட்டி சாந்தி முருகேசன், சிவா பெரியசாமி, மங்கம்பட்டி ரமேஷ் சுந்தர்ராஜ், துறையூர் பேருந்து நிலையம் அருகில் ஒன்றிய செயலாளர் சேகர் கணேசன் தா.பேட்டை ஜமுனாபுரம் மருதை செல்வராஜ், மணப்பாறை ஒன்றியம் நகரம் கிளைகள் உட்பட திருச்சி புறநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் மே தின கொடியினை ஏற்றிவைத்து உரைநிகழ்தினர்.

**திருச்சி மாநகர் :** மே தினத்தை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் கட்சி அலுவலகத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் தலைமையில் மாவட்ட செயலாளர் ஏ.கே.திராவிடமணி கொடியை ஏற்றி வைத்தார். இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில தலைவர் வெங்கடேஷ் வேம்புலி, ஏஐடியுசி பொதுச் செயலாளர் சுரேஷ், மாநகர் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா, மாவட்ட குழு உறுப்பினர் எம்.ஆர் முருகன், அன்பழகன், வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ராமராஜ், மாணவர் பெருமன்றம் மாவட்ட செயலாளர் க. இப்ராகிம், இடைக் கமிட்டி செயலாளர்கள் பிரான்சிஸ், சுரேஷ் முத்துசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேற்கு பகுதி:** மேற்கு பகுதி குழுவின் சார்பில் தில்லை நகர் 22வது வார்டில் பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமையில் இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வெங்கடேசன் கொடியை ஏற்றி வைத்தார். 11வது வார்டில் கிளைச் செயலாளர் லட்சுமணன் தலைமையில் ஏஐடியுசி பொதுச்செயலாளர் சுரேஷ் கொடி ஏற்றி வைத்தார். 10ஆவது வார்டு வார்டு கிளை செயலாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார், இதில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் ஆயிஷா கமால் கொடியேற்றி வைத்தார். 9வது வார்டில் கிளைச் செயலாளர் ஆனந்தன் தலைமை வகித்தார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா கொடி ஏற்றி வைத்தார். 8வது வார்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கிளைச் செயலாளர் சரண் சிங் தலைமை வகித்தார், கொடி யினை மாவட்ட குழு உறுப்பினர் வை.புஷ்பம் ஏற்றி வைத்தார். 24வது வார்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கிளைச் செயலாளர் துரைராஜ் தலைமை வகித்தார், கொடியினை பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி ஏற்றிவைத்தார். 23வது வார்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கிளைச் செயலாளர் முருகன் தலைமை வகித்தார். கொடியினை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் ஏற்றிவைத்தார். குறத்தெரு ஆட்டோ ஓட்டுனர் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிக்கு ஆட்டோ ஓட்டுனர் சங்க நகர செயலாளர் துரைராஜ் தலைமை வகித்தார், கொடி யினை வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ராம்ராஜ் ஏற்றி வைத்தார். மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் க.இப்ராகிம் ஒருங்கிணைத்தார். இறுதியாக உறையூர் குறத்தெரு பகுதியில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்திற்கு மாவட்ட குழு உறுப்பினர் சத்யா தலைமை வகித்தார், நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட செயலாளர் ஏ.கே திராவிட மணி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுரேஷ், மற்றும் ராமராஜ், சிவா, ஆகியோர் உரை நிகழ்த்தினர். கூட்டத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் வெங்கடேஷ் வேம்புலி சிறப்புரையாற்றினார்.

**ஆண்டிபட்டி :** ஆண்டிபட்டி ஒன்றிய குழு சார்பில் ஜீவா நினைவு கொடி மரத்தில் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே. பரமேஸ்வரன் கொடி ஏற்றினார். கே.டி.கே. தங்கமணி நினைவு கொடி மரத்தில் ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி கொடி ஏற்றினார். தொழிற்சங்க கொடியை சென்றாயப் பெருமாள் ஏற்றினார். மே தினத்தின் வரலாறுகளை நகர செயலாளர் க.முனீ ஸ்வரன் விளக்கி பேசினார்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை நகரில் மே தின பேரணி நடைபெற்றது. ஏஐடியுசி மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே.நடராஜன், சிஐடியு மாநில குழு உறுப்பினர் கே.ஆறுமுக நயினார், ஏஐடியுசி மாதேஸ்வரன், சி.பன்னீர்செல்வம், மகாதேவி கனகராணி ராஜா சர்தார், சிஐடியு பாரி ஆகியோர் பங்கேற்றனர்.

செங்கம் நகரில் ஏஐடியுசி சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மே தினம் கொண்டாடப்பட்டது. டி.சிரஞ்சீவி கொடி ஏற்றினார். எம்.எஸ்.மாதேஸ்வரன் சிறப்புரையாற்றினார். தொப்பளான் நன்றி கூறினார்.

திருவண்ணாமலை நகரில் ஏஐடியுசி, சிஐடியு சார்பில் மே தின பேரணி த.ராசேந்திரன் தலைமையிலும், பொதுக்கூட்டம் வே. முத்தையன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியுசி மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே.நடராஜன் மே தின சிறப்புரையாற்றினார். ஏஐடியுசி மாதேஸ்வரன், குப்புரங்கன், ஜோதி, தங்கராஜ், ஞானவேல், ஜெயக்குமார், கனகராணி, மகாதேவி மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

**கோவை:** கோவை மாவட்டம், எஸ்.எஸ்.குளம் ஒன்றியத்தில் மேதின விழா கைக்கோபாளையம் கிளை சார்பில் ஒன்றியச் செயலாளர் சி.விஸ்வநாதன் தலைமையில், கட்சிக் கொடியை ஆர்.ரங்கராஜ், இளைஞர் பெருமன்றக் கொடியை என்.அபிசேக் ஆகியோர் ஏற்றினர். காளிபாளையம் கிளையில் பி.மகேந்திரன் கொடியேற்றினர். தொட்டிபாளையம் கிளையில் கட்டிட தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.நாராயணன் தலைமையில் ஆர்.சுப்பிரமணியன் கட்சிக் கொடியையும், கட்டிட தொழிலாளர் சங்கக் கொடியை நாகமணியும் ஏற்றினர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 71. பெண்ணைப் பேணுமறம்

**பெண்களைப் பேணூஉம் பேரறம் பேசுமின்**
**பெண்களுக்குப் பேசார் பிறர்.**

பெண் மக்களே! உங்களுக்கு சமஉரிமை வேண்டி ஆண்கள் நீதியுடன் பேச மாட்டார்கள்! நீங்களே, உங்களுக்காகப் பேசுங்கள் (போராடுங்கள்).

**வேணதெல்லாம் கத்தூஉம்வீ ணானர் வியனுலகில்**
**பேணாது பெண்ணைப் பெரிது**

பெண்ணின் உயர்வுக்காகப் பேசாமல் (உழைக்காமல்) வீணாக பல்வேறு செய்திகளுக்காக, ஆண்கள் நீதி நெறிகளைப் பேசித்திரிவார்கள்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

எழுச்சியூட்டுகிறது இளம்பெண்கள் மாநில மாநாடு. மாநில மாநாட்டு தீர்மானங்கள் அருமை. தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்கள். பெண்கள் மீதான சாதிவெறி, மதவெறி, உழைப்புச் சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறைகள் தகர்ந்து நொறுங்கட்டும்.

– **லீலாவதி**, வியாசர்பாடி.

**ஆசிரியர் ஜனசக்தி,**

தேசிய கல்விக் கொள்கையும் தமிழக அரசும் என்ற தலைப்பில் பேரா. கதிரவன் எழுதிய கட்டுரையில், பொதுப்பட்டியலில் உள்ள கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வர சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இது இழந்த உரிமையை மீட்பது மட்டுமல்ல, கல்வியில் முன்னேறவும் பெரிதும் உதவும்.

– **முத்துக்கருப்பன்**, கீழஈரால், தூத்துக்குடி மாவட்டம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

2022 ஆம் ஆண்டு மே தினம் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களின் மீது பெரும் பொறுப்புகளைச் சுமத்தியுள்ளது.

ஓய்வெடுக்க நேரம் இல்லை என்றும், மேதினம் அநீதிக்கு எதிரான போராட்டத்தை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் என்றும் அமர்ஜித்கவுர் அறைகூவியிருப்பது காலத்திற்கு பொருத்தமான ஒன்று.

– **சக்கணன்**, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஆகஸ்ட் மாதம் மாநில மாநாடு வரவிருக் கிறது. அதற்கான தயாரிப்புகளோடு, அரசியல் விளக்கங்களோடு ஜனசக்தி வெளிவரவேண்டும். இந்த காலகட்டத்தில் கேள்வி–பதில் பகுதி அவசியம் இடம் பெறவேண்டும்.

– **சுகுமார்**, கோவை – 3



### தாழ்த்தப்பட்ட மக்கள்
# கோவிலுக்குள் நுழைய அனுமதி கோரி மறியல்

திண்டுக்கல் மாவட்டம், சித்தரேவு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் நுழைய விடாமல் தடுத்து, அவர்களின் உரிமைகளைப் பறித்த ஆதிக்க சமூகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், கோவிலுக்குள் நுழையும் உரிமையை பெற்றுத் தரக் கோரியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து எட்டயபுரத்தில் ஆர்ப்பாட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எட்டையபுரம் தாலுகா குழு சார்பில், பெட்ரோல் டீசல் கேஸ் விலை உயர்வைக் கண்டித்தும் சொத்து வரி உயர்வை கண்டித்தும் தாலுகாசெயலாளர் சோலையப்பன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் சங்கம் மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மாநிலக்குழு உறுப்பினர் பாலமுருகன் மாவட்ட குழு சேது, ரவீந்திரன், அழகர்சாமி உட்பட தோழர்கள் கலந்துகொண்டனர்.

## முத்தம்பட்டி கிளை மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேலூர் மாவட்டம், முத்தம்பட்டி கிளை மாநாடு வசந்தா தலைமையில் நடைபெற்றது. மூத்த உறுப்பினர் மணி கொடியேற்றி வைத்தார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஒன்றிய செயலாளர் அண்ணாமலை துவக்கி வைத்தார். செயலாளர் மணி வேலை அறிக்கை வாசித்தார். மல்லிகா, குமரன் ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் மாவட்ட செயலாளர் ஏ.சி.சாமிகண்ணு கலந்துகொண்டு இன்றைய அரசியல் நிலவரத்தை விளக்கிப் பேசினார். பரிமளா நன்றி கூறினார்.

## மாணவர்களின் போதை பழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும்

● கலை இலக்கிய பெருமன்றம் வலியுறுத்தல்

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் திருவாரூர் சிறப்புக் கிளைக்கூட்டம் கிளைத்தலைவர் வீ.தர்மதாஸ் தலைமையில் சிங்காரவேலர் நினைவகத்தில் நடைபெற்றது. மாநில மாநாட்டுக்கான சார்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் தமிழகத்தில் மாணவர்கள் மத்தியில் வேகமாக பரவி வரும் போதைப் பழக்கம், ஆசிரியரை மதிக்காத போக்கு இவற்றைப் போக்கி உளவியல் ரீதியான காரணங்களை அரசு கண்டறிந்து களையெடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



## விலைவாசி உயர்வைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

மத்திய அரசின் விலைவாசி உயர்வை கண்டித்து கோவில்பட்டி நகர செயலாளர் சரோஜா எம்.சி. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமராஜ், துணை செயலாளர் முனியசாமி, அலாவுதின், நகரகுழு உறுப்பினர் ராஜு, சண்முகவேல், தாலுகா செயலாளர் பாபு, மாதர்சங்கம் கோமதி, விஜயலெட்சுமி உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி -வி.கே.புதூர்-ஆலங்குளம் ஒன்றுபட்ட தாலுகா மாநாடு

தென்காசி மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென்காசி வி.கே.புதூர்ஆலங்குளம் ஒன்றுபட்ட தாலுகா மாநாடு பாவூர்சத்திரத்தில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை அணைக்கரை முத்து ஏற்றிவைத்து மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மாநாட்டிற்கு இலட்சுமனன், மாரியப்பன் தலைமை தாங்கினர். மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.பரமசிவம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். தாலுகா செயலாளராக எம்.எஸ்.கிட்டப்பா, துணைச் செயலாளர்களாக என்.ஐயப்பன், பி.துரைராஜ், பொருளாளராக இரத்தினசாமி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.




# குடிநீர் கேட்டு காலிகுடங்களுடன் பொதுமக்கள் சாலைமறியல்

### ஒன்றிய பெருந்தலைவர் சமாதான பேச்சுவார்த்தை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே நெடும்பலம் பகுதியில் கடந்த பல நாட்களாக கொள்ளிடம் கூட்டுகுடிநீர் வீடுகளுக்கு வாரம் ஒருமுறை மட்டுமே வழங்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுவந்த நிலையில் தற்போது 30,000 லிட்டர் அளவே தண்ணீர் வருவதால், வாரம் ஒருநாள் மட்டுமே வீடுகளுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. இதனை கண்டித்து குறைந்தது இரண்டு நாட்களுக்கு ஒருமுறையாவது தேவையான அளவு குடிநீர் வழங்கக்கோரி நெடும்பலம் ஈசிஆர் சாலையில் பொதுமக்கள் காலிகுடங்களுடன் சாலைமறியலில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். தடையில்லாமல் உடனடியாக போதுமான அளவு தண்ணீர் நெடும்பலம் ஊராட்சிக்கு கிடைத்திட ஒன்றிய பெருந்தலைவர் உறுதியளித்ததன் அடிப்படையிலும், உடனடியாக டேங்கர் லாரி மூலம் குடிநீர் வழங்கப்படும் என கூறியதன் அடிப்படையிலும் பொதுமக்கள் தற்காலிகமாக சாலைமறியலை கைவிடுவதாக அறிவித்து கலைந்து சென்றனர்.

போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையின்போது வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார், நெடும்பலம் ஊராட்சி தலைவர் கோ.பழனி, போலீஸ் இன்ஸ்பெக்டர் க.பழனியப்பன் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர். இந்த நிலையில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் திருத்துறைப்பூண்டியிலிருந்து ரயிலின் வழியாக நெடும்பலத்திற்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் குறித்து ரயில்வே பகுதியில் ஆய்வு மேற்கொண்டு ரயில்வேதுறை அனுமதி பெற்றுதருவதாக உறுதியளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருத்துறைப்பூண்டியில் கட்சி உறுப்பினர்களுக்கு
## உறுப்பினர் அட்டை வழங்கும் விழா



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி மே 07 அன்று திருத்துறைப்பூண்டி அங்கை மஹால் திருமண அரங்கில் நடைபெற்றது. நகர செயலாளர் எம்.முருகேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் கே.உலகநாதன் சிறப்புரையாற்றினார். மாவட்ட நிர்வாகக்குழு பி.வி.சந்திரராமன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் டி.பி.சுந்தர் நகர துணைசெயலாளர் எல்.பக்கிரிசாமி, வி.முத்துக்குமரன், ஆர்.வாசுதேவன், பி.எம்.பக்கிரிசாமி வி.ச.நகர தலைவர் மற்றும் மாதர் சங்க நிர்வாகிகள் தோழர் வீரரசியா, பாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன் ஆகியோர் கட்சி உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டையினை வழங்கினர்.

## எட்டுவழிச் சாலையைக் கைவிடக்கோரி ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க கூட்டமைப்பு சார்பில், தமிழக அரசு பசுமை சாலை என்று சொல்லி எட்டு வழி சாலை போட முயற்சிப்பதைக் கண்டித்து 5 மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எட்டு வழிச் சாலையை பசுமை வழி சாலை என்று சொல்லி நிலங்களை கையகப்படுத்துவதால், விவசாயிகளின் நிலங்கள், அரசு பள்ளிகள், பல கிராமங்கள் என காஞ்சிபுரம், உத்திரமேரூர் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகும்.

எனவே எட்டு வழிச் சாலை போடும் திட்டத்தை கைவிட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கே.நேரு, ஏ.மூர்த்தி, சாரங்கன், ஆர்.கோபி, பாஞ்சாலை கோகிலா உள்ளிட்டோர் பேசினர்.

## மதுரை ஏஐடியூசி மாவட்டக் குழு கூட்டம்

மதுரை மாவட்ட ஏஐடியூசி மாவட்ட குழு கூட்டம் மதுரை இராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர்கள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஏஐடியுசி மாநில தலைவர் கே.சுப்பராயன் அவர்கள் கலந்து கொண்டார்.

## விக்னேஷ் மரணத்திற்கு நீதி கேட்டு தஞ்சையில் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தில் சமீபகாலமாக காவல் நிலையங்களுக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்ற நபர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தும் செயல்களும், மேலும் அவர்களை படுகொலை செய்யும் அளவிற்கு போலீசார் தாக்குதல்களும் அவ்வப்போது நடந்து வருகின்றன. சமீபத்தில் மத்திய சென்னையைச் சேர்ந்த இளைஞர் விக்னேஷ் என்பவரை சந்தேகத்தின் பேரில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, காவல் நிலையத்திலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். விக்னேஷ்சின் உடல் பிரேதப் பரிசோதனையில் லத்தியால் பலமாக தாக்கிய காயங்கள் இருந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல் நிலைய சித்திரவதைகளும் படுகொலைகளும் தடுத்து நிறுத்த அரசு முன் வர வேண்டும் என தஞ்சையில் செயல்படுகின்ற அனைத்து கட்சிகள் மற்றும் இயக்கங்கள் சார்பில் தஞ்சை ரெயிலடி அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழர் தேசிய முன்னணியின் அய்யனாபுரம் முருகேசன் தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை. மதிவாணன் முன்னிலை வகித்தார்.

கோரிக்கைகளை விளக்கி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி உரையாற்றினார்.




# சீர்காழி நகரில் பாதாள சாக்கடை திட்டத்தை அமல்படுத்த வேண்டும்

## சீர்காழி ஒன்றிய மாநாடு கோரிக்கை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கொள்ளிடம் முக்கூட்டு அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சீர்காழி ஒன்றிய 29 வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு வக்கீல் சுந்தரய்யா தலைமை தாங்கினார்.

மாநாட்டை துவக்கி வைத்து மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் சீனிவாசன் பேசினார். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராசு அரசியல் விளக்க உரையாற்றினார். மாநாட்டை வாழ்த்தியும் பேசினார் தொடர்ந்து வரவு செலவு கணக்குகளை இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஒன்றிய செயலாளர் செல்லப்பன் சமர்ப்பித்தார். தொடர்ந்து

சீர்காழி பழைய பஸ் நிலைய வளாகத்தில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தப்படும் வாகன உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பழையார் மீன்பிடி துறைமுகத்திலிருந்து எடமணல், திருநகரி, மங்கைமடம் வழியாக மயிலாடுதுறைக்கு புதிய வழித்தடத்தில் அரசு பேருந்து இயக்க வேண்டும். சீர்காழி நகர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றிய செயலாளராக வே.நீதிசோழன், ஒன்றிய துணை செயலாளராக மா.பிரபாகரன், பொருளாளராக சு.சுந்தரய்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். முடிவில் நகர செயலாளர் துரைசாமி நன்றி கூறினார்.

# நல்லம்பள்ளியில் மழைமானி அமைக்க வேண்டும்

## வி.தொ.ச. கோரிக்கை

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியை தனி வருவாய் வட்டமாக 2016 ல் அறிவிப்பு செய்து தற்பொழுது ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிறது, நல்லம்பள்ளி வட்டத்தில் 28 வருவாய் கிராமங்களில் சுமார் 50,000 மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். நிலத்தில் சாகுபடி செய்ய மழை முக்கியமானது ஆனால் நல்லம்பள்ளி வட்டத்தில் எவ்வளவு மழை பொழிந்துள்ளது என்று அறிந்துக் கொள்ள மழமானி இல்லை, தருமபுரி வட்டத்தில் இருக்கும் மழைமானியை வைத்து மழை அளவு நிர்ணயம் செய்து வருகின்றனர் அதனால் சரியான மழை அளவு நல்லம்பள்ளி வட்டத்தில் தெரியவதில்லை,

எனவே, மாவட்ட நிர்வாகம் இதன் மீது நடவடிக்கை எடுத்து நல்லம்பள்ளி வட்டத்தில் மழைமானி அமைக்க வேண்டுமாய் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் கேட்டு கொள்கிறோம் என்று அச் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.

# வலம்புரிவினை குப்பை கிடங்கை அப்புறப்படுத்துக!

## நாகர்கோவில் மேயருக்கு சி.பி.ஐ. கோரிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து நாகர்கோவில் மாநகர மேயருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

தற்போது சீரமைக்கப்பட்டு வரும் மாநகர சாலைகளை விரைவாக சீரமைக்கவும், குடிநீர் இணைப்புக்காக தோண்டி எடுக்கப்பட்ட வண்ணகற்களை மீண்டும் மாநகர தெருக்களில் பத்தித்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். இருளப்புரம் வலம்புரிவிளை உரக்கிடங்கு பல ஆண்டுகளாக அந்தப்பகுதி மக்களின் சுகாதாரத்துக்கு கேடுவிளைவித்து வருகிறது. மலைபோல் குவிந்துள்ள குப்பை மாநகரின் சாபக்கேடாக மாறி உள்ளது. எனவே புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மறுசுழற்சி செய்து உரமாக மாற்ற வேண்டும் இல்லையேல் வலம்புரிவிளை உரகிடங்கை மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

நாகர்கோவில் மாநகராட்சியின் விரிவுபடுத்தப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

அண்ணா விளையாட்டரங்கம் அருகில் உள்ள பொதுவுடமை போராளி ஜீவா சிலையை பராமரித்து சிறிய பூங்கா அமைத்து பாதுகாத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.




### மதுரை சி.பி.ஐ சார்பில்

# ப.பா.மோகனுக்கு பாராட்டு விழா

மதுரை மேலூரில் வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி மேலூர் தாலுகா செயலாளர் க.மெய்யர் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலூர் தாலுகா துணை செயலாளர் சி.பெரியவர் முன்னிலை வகித்தார்.

எவிடன்ஸ் அமைப்பு எவிடன்ஸ் கதிர், தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சி.பி.ஐ மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ், விசிக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் அலங்கை செல்வரசு, த.மு.மு.க மாவட்ட செயலாளர் பக்ருதீன் அலி அஹமத், வழக்கறிஞர் கிருஷ்ணன், வி.சி.க மேலூர் தொகுதி செயலாளர் அய்யாவு, சிபிஐ(எம்) மேலூர் தாலுகா குழு செயலாளர் கண்ணன் ஆகியோர் பாராட்டி உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து காதல் திருமணம் செய்த கோகுல்ராஜ் என்பவரை ஆணவப் படுகொலை செய்த கொலையாளிகளுக்கு மதுரை நீதிமன்றத்தில் வழக்காடி இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுக் கொடுத்த வழக்கறிஞர் ப.ப.மோகன் நிகழ்வில் ஏற்புரையாற்றினார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மதுரை மாவட்ட பொறுப்பு செயலாளர் நாகஜோதி மற்றும் நிர்வாகிகள் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இறுதியில் தாலுகா குழு உறுப்பினர் ந.திலகர் நன்றியுரை கூறினார்.

# மதுரை மத்திய கிழக்கு பகுதி மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மத்திய கிழக்கு பகுதி குழு மாநாடு டி.எஸ்.ராமலிங்கம் எம்.கே.மாணிக்கம் அரங்கில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் கலந்து கொண்டார். கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.முருகன், எம்.நந்தாசிங், சி.தாமஸ், கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பகுதி குழு நிர்வாகிகள் கமலம்மாள், சித்தநாதன், பேச்சியம்மன் படித்துறை கே.முத்துராமலிங்கம், ஏஐஓய்எப் மாவட்ட நிர்வாகி எஸ்.பழனிமுருகன் உட்பட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். பகுதிகுழு செயலாளராக ஆர்.ரவிச்சந்திரன் தேர்வு செய்யப்பட்டார்.

# சமையல் எரிவாயு விலை உயர்வினை கண்டித்து சிபிஐ ஆர்ப்பாட்டம்

சமையல் எரிவாயு விலை உயர்வினை கண்டித்து நாகர்கோவிலில் சமையல் எரிவாயுசிலிண்டருடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஆரல்வாய் மொழி கிளை சார்பாக, மத்திய அரசின் கியாஸ் விலை உயர்வினை கண்டித்து ஆரல்வாய்மொழி மீன் மார்கெட் அருகில் கியாஸ் சிலிண்டருடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலார் இசக்கிமுத்து, பூதப்பாண்டி பேரூராட்சி துணை தலைவர் அனில்குமார், ஆரல்வாய்மொழி கிளை செயலாளர் அருள்குமார், மாவட்ட துணை செயலாளர் ஸ்ரீகுமார், தோவாளை தாலுகா செயலாளர் அண்ணாத்துரை, செண்பகராமன் புதூர் கிளை செயலாளர் கல்யாணசுந்தரம், அபிரகாம் என பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.




### சிவகாசியில் தொண்டர் படைப் பயிற்சிக்கு

# 30 இளைஞர்களை தயார் செய்ய முடிவு

சிவகாசியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிவகாசி வட்ட, கிளை செயலாளர்கள் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. கூடலிங்கம் தலைமை வகித்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட பொருலாளர் க.சமுத்திரம் ஆகியோர் பேசினார்கள். வட்ட செயலாளராக ஆர்.ஜீவா, துணை செயலாளராக ஆர்.கலைவாசன், பொருளாளராக எஸ்.டிமிட்ரோ ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். தொண்டர்படை பயிற்சிக்கு 30 இளைஞர்களை தயார் செய்வது என்பன உள்ளிட்ட பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.



# அடிப்படை வசதிகள் செய்துதரக் கோரி தெருமுனைக் கூட்டம்

வலம்புரிவிளை உரக்கிடங்கை இடம் மாற்றம் செய்ய கோரியும், மாநகர சாலைகளையும் தெருக்களையும் விரைந்து சீர்படுத்த கோரியும், மாநகரத்தின் விரிவுபடுத்தப்பட்ட அனைத்து பகுதிகளிலும் கோடையில் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கிட கோரியும், தனியார் பள்ளி கல்லூரி வாகனங்களுக்கு தனி நிறுத்தம் ஏற்படுத்த கோரியும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தெருமுனை பிரச்சார இயக்கம் இளங்கடை பாபா காசிம் சமூகநலத் கூடம் அருகில் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமையில் நடைபெற்றது.

தெருமுனை பிரச்சார இயக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் துவக்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.இசக்கிமுத்து, ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட பொருளாளர் அனில்குமார், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட பொருளாளர் ந.நாகராஜன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சஜீஷ், அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் சுந்தரம், எஸ்.இ.டி.சி.சுப்பையா ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவில் சிபிஐ மாநகர பொருளாளர் கே.நாகராஜன் நன்றி கூறினார்.



### இளைஞர் பெருமன்றம் சார்பில்

# மரம் நடுவிழா

அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற அமைப்பு தினத்தை முன்னிட்டுமரம்நடுவிழா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் எம்.பார்த்திபன் பங்கேற்றார்.

# ஔவையார் தனிப்பாடல்கள்

இருபத்தியோராம் நூற்றாண்டிலும் பெண் கல்வி என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆனால் நமது சங்க காலங்களில் பெண்கள் கல்வியில் சிறந்து இருந்துள்ளனர். சங்க இலக்கியங்களில் பல்வேறு பெண்பாற்புலவர்களை நாம் காணமுடிகிறது. அவர்களில் ஒருவர்தான் பழம் தமிழ் மூதாட்டி அவ்வையார். அவரின் தனிப் பாடல்களின் இனிமையை குறித்து புலியூர்க் கேசிகன் இந்நூலை எழுதியுள்ளார். முதல் இடை கடை என்ற முச்சங்கங்கள் ஆராய்ந்து தெளிந்து பேணப்பட்ட செழுந்தமிழ், அந்த சங்கங்களின் மறைவிற்குப் பின்னரும் அவ்வப்போது தோன்றிய சான்றோர் பலரால் பேணப்பட்டு வளர்ந்திருக்கிறது. தமிழ் வளர்த்த புலமையுடன் பிறந்தவர்களில் ஆண்களைப் போலவே பெண்களும் பலராவர், கடைச்சங்க நூல்களில் ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைபாடினியார்,ஆதிமந்தியார், பூதபாண்டியன் தேவியார், போன்ற பலரை காணுகின்றோம். அவ்வையார் என்ற பெயரால் பலரும் இருந்திருக்கின்றனர். அறிவுத் திருவுடைய பெண்களெல்லாம் அவ்வையார் என்னும் ஒரு பெயரால் அழைக்கப்பட்டதாகவே நாம் அறியமுடிகிறது. ‘அவ்வை’ என்ற சொல் மூதாட்டி என்ற நிலையினையும் குறிப்பதாகும். ‘‘விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும், விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும் அரையதனில், பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை. நஞ்சேனும் வேம்பேனும் நன்று’ என போலியாக வாழ்கிற மனிதர்கள் சமூகத்தில் எவ்வாறு மதிப்பு பெறுகிறார்கள் என்பதை அந்த காலத்திலேயே அவர் மேற்கண்ட பாடலில் மூலமாக இடித்துரைத்து இருக்கிறார். ‘‘வான்குருவி யின்கூடு வல்லரக்கு தொல்கறையான், தேன் சிலம்பி யாவருக்குஞ் செய்யரிதால் யாம் பெரிதும், வல்லோமே என்று வலிமைசொல் வேண்டாங்காண், எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது ‘‘ எல்லோராலும் எல்லாவற்றையும் செய்துவிடமுடியாது. ஒருவரால் செய்ய முடிந்ததை பலரால் செய்ய முடியாது போகலாம். எனவே ஒவ்வொருவரின் திறமையும் நாம் அங்கீகரிக்க வேண்டும் என்கிறார் அவ்வையார்.





சிறந்த கல்வி ஞானம் உள்ளவர்கள் என்கின்றோம். அந்த ஞானம் மனதை ஒன்றின் பால் உறுதிபெற நிறுத்திப் பழகிய பழக்கத்தால் அமைந்ததாகும். அந்த மனப்பழக்கம் பலருக்கு ஏற்பட வழி செய்தால் அனைவரும் ஞானம் உள்ளவர்கள் ஆவார்கள். அதைத்தான் ‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்‘ என கூறுகிறார் ஔவையார். அவ்வையாரின் இப்படிப்பட்ட பல்வேறு பாடல்களும், அதற்கான விளக்கங்களும் நிரம்பிய நூல் தான் புலியூர்க் கேசிகன் எழுதிய அவ்வையார் தனிப்பாடல்கள் என்னும் இந்த நூல். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். **– சமரன்**

**நூலாசிரியர் : புலியூர்க் கேசிகன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16,ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14**
**பக்கங்கள் : 190 விலை : ரூ.140**

## நூல் நயம்

# தேடலும் தெளிதலும்

கடவுள்கள், கோயில்கள், புனித நூல்கள், தேசியம், தேசப்பற்று போன்ற யாவும் உலக ஒருமைக்கு எதிரானவை.இவற்றிலிருந்து மனித இனம் முற்றிலுமாக விடுபட வேண்டும். என்று துணிந்து கூறியவர் ஜே.கே. என்று நம்மால் அறியப்படுகிற ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அவரது கொள்கைகளில் தேடலும் தெளிதலுமே இரா. சத்தியமூர்த்தி எழுதிய இந்நூல். தன்னை அறிதலே இன்பம். ஒளியோ, உருவோ, பிறப்போ, இறப்போ, சுவையோ, மணமோ இல்லாத என்றும் உள்ள ஒன்றே ‘‘தான் ‘‘, ‘‘நான்’’ என்ற அகங்காரத்தில் இருந்து வேறுபட்டது. சாவற்றது. ‘‘தன்னை அறிய தனக்கொரு கேடில்லை ‘‘ என்பது திருமந்திரம். இந்த உண்மை அல்லது சத்தியத்தை தூய மனதால் மட்டுமே அடைய முடியும்.




‘‘பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம் கருமமே கட்டளைக் கல் ‘‘ என்ற வள்ளுவத்தின் சத்திய ஒளி நம்முள் கேட்கும். எல்லா வேற்றுமைக்கும் காரணமாக விளங்கும் ‘நான்’ என்ற அகந்தையை நீக்குவதே ஞானத்தின் தொடக்கம் என்றார் கௌதம சித்தார்த்தர். நான் என்ற உணர்வு வந்ததும் ஜகமாயை நானான்கு விதமாக பல்கிப் பெருகிவிடும் இந்த ‘நான்’ என்ற நினைப்பின்றி வாழ்தலே விடுதலையாகும். ‘நான்’ என்ற உணர்ச்சி உண்மையில் உள்ளதா? ஏனெனில் இன்றைய பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் நான் என்ற தன்முனைப்பு ஆகும்

பசிக்கு உணவு, தாகத்திற்கு தண்ணீர், வாழ்க்கையின் அவசிய தேவைகளை பூர்த்தி செய்ய உழைத்தல். இதற்குமேல் ஆசைப்படுவதை தவிர்த்தல். ஒரு அழகிய வண்ணத்துப்பூச்சி மலரின் மனத்தையும், வடிவமைப்பையும் சேதப்படுத்தாது தேனை மட்டும் உறிஞ்சிக் கொள்வது போல் இந்த உலகத்தை சிதைத்து விடாமல் நமக்கு வேண்டிய தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்ளும் வாழ்வே சீரிய வாழ்வு. ஆனால் இயற்கையை சிதைக்கும் வாழ்வைதான் மனிதன் மேற்கொண்டிருக்கிறான். வெறும் கொள்கையும்,கோட்பாடுகளும் ஒரு சமுதாயத்தின் அவலங்களை மாற்றி விடாது என்பதை இயற்கை நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. இந்தியா போன்ற நாடுகளில் சமத்துவ சமுதாயத்தை கட்டமைக்க முடியாமல் போனதற்கு காரணம் சாதிய வேர்களில் இருக்கும் மதத்தின் அழுத்தமே. அதனால்தான் பெரியார் அம்பேத்கர் போன்றவர்கள் பொதுமை சிந்தனை மேலோங்க சாதிய, மத வேறுபாடுகளை எதிர்த்தனர். சிந்தனை எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டது. எனவே மனிதனின் சிந்தனையில் தேடல் இருக்க வேண்டும் அப்போதுதான் தெளிதலும் கிடைக்கும் என்பதை ‘‘தேடலும் தெளிதலும்‘‘ நூல் நமக்கு விளக்குகிறது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். **– இன்சுவை பாரதி**

தொகுப்பாசிரியர் : இரா.சத்தியமூர்த்தி
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 136 விலை: ரூ.135**


வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014


செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்




# உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் 18வது மாநாடு

## அமர்ஜித் கவுர் துணைத் தலைவராக தேர்வு

உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் 18வது மாநாடு இத்தாலி நாட்டின் தலைநகரமான ரோம் நகரில் மே 6 முதல் 8 வரை நடைபெற்றது. பொதுச் செயலாளராகச் சிறப்புடன் செயல்பட்டு வந்த ஜியார்ஜ் மாவ்ரிகோஸ் கௌரவத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். தலைவராக தென் ஆப்பிரிக்காவைச் சார்ந்த ஸ்வாண்டில் மிக்கேல் மக்வயிபா மற்றும் பொதுச் செயலாளராக சைப்ரசைச் சார்ந்த பாம்பிஸ் கிரிட்ஸ்டிஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்திய பிரதிநிதிகளில் இருந்து உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் துணைத் தலைவர்களாக அமர்ஜித் கவுர் (ஏஐடியுசி), ஹேமலதா (சிஐடியு) ஆகியோரும் துணைப் பொதுச் செயலாளர்களாக சி.ஸ்ரீகுமார் (ஏஐடியுசி), ஸ்வதேஷ் தேப்ராய் (சிஐடிய) ஆகியோரும் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு குழுவின் தலைவராக சி.எச்.வெங்கடாசலம் (ஏஐபிஇஏ) ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.




### உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க

# ஸ்தாபன ரீதியான வர்க்கப் போராட்ட பாதையே தீர்வு

## கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி மே தின அறிக்கை

மேதினி போற்றும் மே தினத்தில் கிரீஸ் நாட்டு தலைநகரமான ஏதென்ஸ் நகரில், அந்நாட்டு நாடாளுமன்றத்திற்கு வெளியே, ஏகாதிபத்தியப் போர் மற்றும் விண்ணை முட்டும் விலையேற்றத்தை எதிர்த்து, கொள்கை உறுதிப்பாடுமிக்க கிரீஸ் நாட்டு உழைக்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு முழக்கமிட்டனர். அந்நாட்டில் உள்ள 70க்கும் மேற்பட்ட நகரங்களில் மே தினம் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

உழைக்கும் வர்க்கத்துக்கான உரிமை களைப் பெற்றிட, சுரண்டும் வர்க் கக் கூட்டத்தாருக்கு எதிராக சமரச மற்ற முறையில் வீரச் சமர் புரிந்து தம் இன் னுயிரைத் தியாகம் செய்த செயல் வீரர்களுக்கும், உழைக்கும் வர்க்கத்தின் மகத்தான வர்க்க போராட்டத்திற்கும் வீரவணக்கம் செலுத்தும் வண்ணம் நாட்டின் அனைத்து நகரங்களிலும் எழுச்சிமிகு பேரணிகள் நடைபெற்றன.

இந்த ஆண்டு மே தினத்தையொட்டி கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மே தினம் வர்க்கப் போராட்டப் பாதையை உயர்த்திப் பிடிக்கிறது; வர்க் கப் போராட்டமே வரலாற்றுச் சக்கரத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்கிறது. அதுவே மக்களுக்கான வரலாற்றின் சரியான பாதையாகும். சமூக செல் வத்தை உற்பத்தி செய்து, சமுதாய வளர்ச்சிப் போக்கின் சிற்பியாகத் திகழும் உழைக்கும் வர்க்கத்தின் சிறப்பைப் போற்றும் நாளாக மட்டுமின்றி, வறுமை, சுரண்டல், நெருக்கடிகள் மற்றும் தற்போதைய போர் சூழலில் சோசலிச – கம்யூனிச சமுதாயத்தைப் படைப்பதற்கான பாதைக்கு ஒளியேற்றும் போராட்ட நாளாகவும் மேதினம் திகழ்கிறது. இந்த மே தினம் ஒரு தீவிர மான மக்கள் போராட்டத்திற்கான தொடக்கப் புள்ளியாக உருவெடுக்க வேண்டும் என்று கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி பிரகடனப்படுத்தியுள்ளது. தொழி லாளர் விரோத சட்டங்கள் ஒழிக் கப்படவேண்டும். தொழிற்சங்க நடவடிக் கைகள் மற்றும் வேலைநிறுத்த உரி மையை குற்றச் செயல்களாக வகைப் படுத்தும் செயல்முறைகளை ரத்து செய் திட வேண்டும்.

ஏகாதிபத்தியப் போர்கள் மற்றும் அத்தகைய போரில் கிரீஸ் நாட்டின் பங்கேற்பு ஆகியவற்றுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று கட்சி வலியுறுத்துகிறது. திருடர்களின் முகாம்களில் ஏதேனும் ஒன்றை மக்கள் தேர்ந்தெடுத்து விடக்கூடாது. நேட்டோ மற்றும் அமெரிக்க ராணுவத் தளங்கள் கிரீஸ் நாட்டிலிருந்து அகற் றப்படவேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ வின் அழிவுகர போர் திட்டங்களுக்கு உகந்த தளமாக கிரீஸ் நாடு இயங்கி வருவதை நிறுத்திட வேண் டும். உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு கொடுங்கோன்மைக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் மக்களிடையே நிலவும் ஒற்றுமை உணர்வை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

இன்றைய சூழலில், உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க, ஸ்தாபன ரீதியிலான போராட்டப் பாதை யின் மூலமாக முன்னேறிச் செல்ல முடியும். உழைக்கும் மக்கள் கண் ணியத்துடன் வாழ்ந்திட, உற்பத்தி செய்த பெரும் செல்வக் குவியல் மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்களை அவர்களும் அனுபவித்திட, ஸ்தாபன ரீதியான வர்க்கப் போராட்ட பாதையே அவர்களின் போராட்ட ஆற் றலை முன்னெடுத்துச் செல்லும். இந்தப் பாதைதான், ஒருசிலரின் லாபத்திற்காக உழைக்கும் மக்கள் மீண்டும் மீண்டும் இரத்தம் சிந்துவதை தடுக்கக்கூடிய பாதையாகும். இந்தப் பாதைதான், மனி தனை மனிதன் சுரண்டும் முறைக்கு முற் றாக முடிவுரை எழுதவல்ல பாதையாகும்.

தற்போதுள்ள சுரண்டல் முறையை தூக்கி எறிந்துவிட்டு, ஒரு மேம்பட்ட சமூக அமைப்பை உருவாக்கவல்லது சோசலிசம் – கம்யூனிஸ சித்தாந்தம் ஆகும். அத்தகையதொரு சமுதாய அமைப்பில் உற்பத்தி சக்திகள் சமூக உடைமையாக திகழும்; மக்களின் தேவைகளை நிறைவு செய்திட விஞ் ஞானபூர்வ திட்டமிடுதல் மேற் கொள்ளப்படும்; அதிகாரம் வாய்ந்த நிறுவனங்கள் அனைத்திலும் தொழி லாளர்களின் பங்கேற்பும், கட்டுப் படுத்துதலும் உறுதி செய்யப்பட்டு, மனித குலத்தின் அமைதி, முன்னேற்றம் மற்றும் வளமான வாழ்வுக்கு வித்திடப்படும்.

இவ்வாறு கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அதிபரைத் தேர்வு செய்யாமல் இழுத்தடிப்பு: ஈராக் நாடாளுமன்ற சபாநாயகர் மீது கம்யூனிஸ்ட் கட்சி வழக்கு

ஈராக் நாட்டில் கடந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற்றது. ஆனால், தற்போது வரையிலும், அரசியலமைப்புச் சட்டம் விதித்துள்ள காலக்கெடுவிற்குள் புதிய அரசாங்கம் அமைக்கப்படாமல், புதிய அதிபரும் தேர்ந்தெடுக்கப்படாமல் பல மாதங்களாக அரசியல் நெருக்கடி தொடர்ந்து நீடித்து வருகிறது.

ஈராக் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதல் அமர்வு கூட்டப்பெற்றநாளில் இருந்து 30 நாட்களுக்குள் புதிய அதிபரை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், அவ்வாறு புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது அந்நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 72ஐ மீறுவதாகும். புதிய அரசாங்கம் அமைக்கப்படாததால் 2022ம் ஆண்டுக்கான பட்ஜெட் ஒப்புதலும் கிடப்பில் போடப் பட்டுள்ளது. இதன் காரணமாக ஈராக் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் நிலைகுலைந்து, குடி மக்களின் வாழ்க்கை பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் அபாயமும் சூழ்ந்துள்ளது. எனவே, ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஈராக் தேசிய கட்சியும் இடம்பெற்றுள்ள ஈராக் ஜனநாயக இயக்கத்தின் சார்பாக அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் அரசியலமைப்பு சட்டத்தை மீறியதற்காக நாடாளுமன்ற சபாநாயகர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசியல் இயக்கத்தை உத்தரவாதப்படுத்தும், முறைப்படுத்தும் அரசியலமைப்பின் சரத்துக்களைத் தொடர்ந்து அத்துமீறுவது, அரசின் ஜனநாயக கட்டமைப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்று தெளிவாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே ஆளும் வர்க்க குழுக்கள் தங்களின் அரசியல் நோக்கங்களுக்காக அரசியலமைப்பு சட்டத்தின் சரத்துக்களை மிகவும் சூழ்ச்சிகரமாக புறந்தள்ளி வருகின்றன. ஆதிக்க சக்திகள் மற்றும் அவற்றின் குழுக்கள் அரசியலமைப்பு சட்டத்தின் சரத்துக்கள் மற்றும் வழிமுறைகளுக்குப் பதிலாக அவர்கள் உருவாக்கிய ‘மரபுகளை’ முன்னிலைப்படுத்த முயலுகிறார்கள். இதுபோன்ற முயற்சிகளை முறியடிக்க வேண்டியது ஜனநாயக மற்றும் அரசியல் அமைப்பு ரீதியிலான செயல்முறை என்று ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது. சட்டப் போராட்டத்தின் மூலமாக நமது இலக்குகளை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை வெற்றியடைய வெகுமக்களின் பேராதரவு மற்றும் எழுச்சிதான் அடிப்படையானது என்று ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி தெளிவுபடுத்துகிறது.

ஈராக் அரசியலமைப்பு மற்றும் இதர சட்டங்கள் மீறப்படுவது குறித்து, கண்காணிப்பதற்கான ஒரு சிறப்பு அமைப்பு இல்லை என்ற நிலையை முறைப்படுத்துவதற்கான ஈராக் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியாகவும் இந்த நடவடிக்கை உற்று நோக்கப்படுகிறது.



# நாட்டை பிளவுபடாமல் தடுக்க ஒரு விரிவான, நிலையான பொதுத் தளம் இருக்க வேண்டும்

## தி.மு.க. மாணவர் அணி மாநாட்டில் பி.சந்தோஷ்குமார் எம்.பி. உரை

**திமுக மாணவரணி சார்பில் கல்வி, சமூக நீதி, கூட்டாட்சித் தத்துவம் குறித்த தேசிய மாநாடு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இதில் பல்வேறு கல்வியாளர்கள், மாணவர் அமைப்பு பிரதிநிதிகள், அமைச்சர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். மாநாட்டின் இறுதிநாள் நிகழ்விற்கு திமுக மாணவரணி செயலாளர் எழிலரசன் எம்எல்ஏ தலைமை வகித்தார்.**

சிறப்பு விருந்தினராக திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏ, கேரளா அரசின் தொழில் மற்றும் சட்டத்துறை அமைச்சர் பி.ராஜீவ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்தோஷ்குமார், ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்ட அமைச்சர் சோம்நாத் பாரதி, சமூக செயற்பாட்டாளர் கண்ணன் கோபிநாதன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி கன்னையா குமார், ஹிஸ்டரி பத்திரிக்கையாளர் சீமா சிஷ்டி, வங்காள தேசியவாதி கார்கா சாட்டர்ஜி, பெரியாரிஸ்ட் திலீப் மண்டல் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

**இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்தோஷ்குமார் பேசியதாவது:**

இந்த நாட்டின் கூட்டாட்சி விழுமியங்களை நிலைநிறுத்திய கட்சிகளில் திமுகவும் ஒன்று.

இந்தியா காலனிகளின் ஒன்றியம் அல்ல, மாநிலங்களின் ஒன்றியம் என்பதை திமுக எப்போதும் மத்திய அரசுக்கு நினைவூட்டுகிறது. திமுகவின் மாணவர் மற்றும் இளைஞர் அணியும் அதே பாதையில் செயல்படுறது என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆர்எஸ்எஸ் அமைப்புக்கு இந்திய அரசியல் சாசனத்தில் நம்பிக்கை இல்லை, மத்திய அரசு வகுத்துள்ள கொள்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கு முன் நாம் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை விஷயம் என்னவென்றால், இவையாவும், நாக்பூரில் உள்ள ஆர்எஸ்எஸ் தலைமையகத்தில் தயாரிக்கப்பட்ட வரைவுகள் என்பதாகும். மத்திய அரசின் கைப்பாவை அமைச்சர்கள் அதை லோக்சபாவிலும், ராஜ்யசபாவிலும் அறிமுகப்படுத்துகிறார்கள், அதற்கு மேல் எதுவும் இல்லை. எனவே ஆர்எஸ்எஸ் என்றால் யார்? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆர்எஸ்எஸ் இந்திய அரசியலமைப்பிற்கு ஆதரவாக இல்லை, நமது அரசியலமைப்பு 1949 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, மேலும் ஆர்எஸ்எஸ்ஸின் செயல்பாடு இந்த அரசியலமைப்பை நேரடியாக எதிர்ப்பது என்பது தான். இது இந்திய சுதந்திர இயக்கத்தில் நம்பிக்கை இல்லாத, இந்தியாவின் பாதையில் நம்பிக்கை இல்லாத, இந்த நாட்டின் தற்போதைய எல்லையில் கூட நம்பிக்கை இல்லாத ஒரு அமைப்பு. இப்போது அந்த அமைப்பு, நாங்கள் தான் உலகின் முன்மாதிரியான பாசிச அமைப்பு என்பதைக் காட்டும் பொருட்டு, அதன் 100 வது ஆண்டை நிறைவு செய்யப் போகிறது.

இது நாம் எதிர்கொள்ளும் கடுமையான ஆபத்துகளில் ஒன்றாகும், மேலும் அவர்கள் எதை அதிகம் மதிக்கிறார்கள்? கோல்வால்கர் எழுதிய புத்தகங்களை அவர்கள் மதிக்கிறார்கள். ஆனால் அது மனித குலத்திற்கு அச்சுறுத்தலாகவும், மதச்சார்பின்மைக்கும் நவீன இந்தியாவிற்கும் மிகவும் அச்சுறுத்தலாகவும் உள்ளன.

இந்த புத்தகங்களை நீங்கள் படித்தால், உதாரணமாக, இந்த நாட்டின் கூட்டாட்சி அமைப்பு எங்களுக்கு வேண்டாம் என்று அத்தியாயம் கூறுகிறது. மேலும் இந்த நாட்டின் கூட்டாட்சித்தன்மையும், மொழிவாரி மாநிலங்களும் இந்து தேசியம் என்ற அவர்களின் கருத்தாக்கத்துடன் ஒத்துப் போகாததால், ஆர்எஸ்எஸ் ஒற்றையாட்சி அரசு குறித்துப் பேசுகிறது. எனவே, ஆர்.எஸ்.எஸ். எப்போதும் கூட்டாட்சிக்கு எதிராகவும், இந்த நாட்டின் அனைத்து உன்னதமான காரணங்களுக்கு எதிராகவும் உள்ளது என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

புதிய கல்விக் கொள்கை போன்ற பிரச்சனைகளுக்கு எதிரான போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், எங்கள் கட்சியின் மாணவர் பிரிவான அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் எப்போதும் உங்களுக்கு ஆதரவளிப்பது உங்களுக்குத் தெரியும்.

இந்தி திணிப்பை எதிர்ப்பதில் தி.மு.க மற்றும் அதன் மாணவர் அமைப்பினரின் கருத்தைத்தான் நாங்களும் பிரதிபலிக்கிறோம், நீட் தேர்வில் கூட இதே கருத்தைத்தான் நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். சமூக நீதி விஷயத்தில் நாங்கள் அதே கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறோம். மண்டல் கமிஷன் அறிக்கையை ஆதரிக்கும் இந்த நாட்டின் அரசியல் கட்சிகளில் சிபிஐயும் ஒன்று என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

நாம் நிறைய மாற்றங்களைச் சந்திக்க வேண்டிய காலகட்டம் இது, மண்டல் கமிஷன் அறிக்கையை வி.பி.சிங் அரசு அறிமுகப்படுத்தியது, மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்துவதற்கும் ஐயத்திற்கு இடமின்றி ஆதரித்த முதல் கட்சி சிபிஐ. மண்டல் கமிஷன் அறிக்கை மற்றும் இந்தியாவில் சமூக நீதியை உறுதி செய்வதற்கான வழிகளில் ஒன்றான இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கு இன்றும் அதே நிலைப்பாட்டை எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லாமல் நாங்கள் கடைப்பிடிக்கிறோம்.

**புதிய கல்விக் கொள்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏன் எதிர்க்கிறது?**

ஐந்து காரணங்கள் உள்ளன, முதலாவதாக, இது திறன் மேம்பாட்டுக் கல்வியைக் குறிக்கிறது, வெளித்தோற்றத்தில் இது ஒரு நல்ல யோசனை, திறன்களை வளர்ப்பது ஒரு மோசமான விஷயம் அல்ல. தமிழகத்தின் தலைசிறந்த மனிதரான பெரியார் குலக் கல்வியை எதிர்த்தார் என்பது உங்களுக்குத் தெரியும், தேசிய அளவில் குலக்கல்வியை திணிக்க மத்திய அரசு முயற்சிக்கிறது. கல்வி என்பது அறிவைப் புகட்டுவது, தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்துவதுதான், ஆனால், மத்திய அரசின் நோக்கம் அதுவல்ல.

இரண்டாவதாக, உயர்கல்வி ஆணையம் தொடங்கப்பட வேண்டும் என்பதுதான், ஆனால் அது சுதந்திரமாக செயல்பட முடியாது.

தன்னாட்சிக் கல்லூரிகள், புதிய சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கி ஒவ்வொரு துறையிலும் கல்வியை வணிகமயமாக்குவதை இந்தக் கொள்கை ஊக்குவிக்கிறது. கடந்த முறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்கு 3.1% மட்டுமே ஒதுக்கப்பட்டது. அதை 6% ஆக உயர்த்த வேண்டும் என்று கொள்கை கூறுகிறது. ஆனால் மத்திய அரசுக்கு அதில் எந்த உறுதியும் இல்லை. மூன்றாவதாக அவர்கள் ஏற்கனவே உள்ள கட்டமைப்பை அகற்ற விரும்புகிறார்கள். இந்தியாவில் சுமார் 800 பல்கலைக்கழகங்கள் உள்ளன, அதை அவர்கள் துண்டு துண்டாக சிதைக்க முயற்சிக்கிறார்கள். தற்போதுள்ள அமைப்பை தகர்த்தெறிந்து அனைத்து இடங்களிலும் தன்னாட்சிக் கல்லூரிகளை ஊக்குவிக்க பாஜக விரும்புகிறது.

நான்காவதாக உயர்கல்வி ஆணையத்தில் மாநிலங்களின் பங்கை வரையறுக்காமல், மேலும் கல்வியில் மாநிலங்களின் சுயாட்சியை குறைக்க இந்தக் கொள்கை முயல்கிறது. கல்வியில் மாநிலங்களுக்கு தான் முன்னுரிமை தரவேண்டும். நீட் தேர்வால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அவரது பெற்றோர்களின் வேதனையை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம், அவர்களுடன் நாங்கள் இருக்கிறோம். நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற மாநிலங்களுக்கு முழு உரிமை உண்டு, இந்த நாட்டில் எல்லா இடங்களிலும் கோச்சிங் சென்டர்கள் காளான்களாக வளர்ந்து வருகின்றன. இந்த மையங்கள் குறிப்பிட்ட சில மாணவர்களுக்கு மட்டுமே உதவுகின்றன. இது ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களை விலக்குகிறது.

இறுதியாக, இந்தி நமது தேசிய மொழி அல்ல, ஆனால் மத்திய அரசு வேண்டுமென்றே இந்தியைத் திணிக்கத் திட்டமிட்டுள்ளது, 52% மக்கள் இந்தி பேசுகிறார்கள், இது உண்மையல்ல. போஜ் புரி ஒரு அற்புதமான இந்திய மொழி, இது 5 கோடி பேசும் மக்களை கொண்டுள்ளது, அவர்கள் அதை இந்தியின் கீழ் சேர்க்கிறார்கள். இந்தி என்ற குடையின் கீழ் இப்படி பல மொழிகள் சேர்க்கப்படுகின்றன.

தேர்தல்கள் சமயத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் நம்மில் பெரும்பாலோர் ஒரே கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறோம். மேலும் கல்விக் கொள்கைகளை மாற்ற நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இந்த நாட்டில் அதிகரித்து வரும் பிளவுகளை தேர்தல்களால் மாற்ற முடியாது. எல்லா இடங்களிலும் சங்பரிவாரம் ஒரு பயத்தை உருவாக்குகிறது. அதன் மூலம் அரசியல் ஆதாயம் அடைய நினைக்கிறார்கள். எங்களுக்கு ஒரு பொதுவான தளம் தேவை.

தேர்தலை விட்டுவிடுங்கள், அவை முக்கியமானவை, ஆனால் நாட்டை மேலும் பிளவுபடாமல் தடுக்க ஒரு விரிவான, நிலையான பொதுத் தளம் இருக்க வேண்டும். இதில் நாம் அனைவரும் சிறப்பான பங்கு வகிக்கிறோம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உங்களுடன் நிற்கும்.












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 14.05.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## தொழிற்சங்க இயக்கம் தொழிலாளர்களை

# அரசியல்படுத்த வேண்டும்

### கே.சுப்பராயன் எம்.பி. பேச்சு



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் அவர்களின் மனைவி பத்மாவதி கோவையில் இயற்கை எய்தினார். அவரது பட திறப்பு மற்றும் புகழஞ்சலி கூட்டம் கோவை ஜீவா இல்லத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்டு பத்மா படத்தை திறந்து வைத்து உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரும், திருப்பூர் மக்களவைத் தொகுதியின் உறுப்பினருமான கே.சுப்பராயன் பேசும்போது தொழிற்சங்க இயக்கம் தொழிலாளர்களை அரசியல்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

தொழிற்சங்க இயக்க பணி என்பது ஒரு தொழில் அல்ல. அரசியலற்ற முறையில் சிதறிக் கிடக்கிற தொழிலாளர்களை ஒன்று திரட்டி அவர்களை அரசியல்படுத்தும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு 40 தொழிலாளர் நல சட்டங்களில் இருபத்தி ஒன்பது சட்டங்களை ரத்து செய்துவிட்டு 15 சட்டங்களை நான்கு சட்டங்களாக மாற்றி அமைத்துள்ளது.

இது முழுக்க முழுக்க தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரானதாகவும் காப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாகவும் உள்ளது. இந்த மோடி சர்க்காரின் நடவடிக்கைகள் நம்முடைய குடும்பத்தில் செயல்பாடுகளில் கூட தலையிடுகிறது. எனவே, தொழிலாளர்களுக்கு அரசியலைக் கற்றுக் கொடுத்து அவர்களை மோடி சர்க்காரின் மக்கள் விரோத ஜனநாயக விரோத செயல்பாடுகளுக்கு எதிராக போராட கூர் தீட்ட வேண்டும். தோழர் என்.செல்வராஜ் அவர்களின் மனைவி பத்மாவதியை இவர்களது திருமணத்திற்கு முன்பே நான் நன்கறிவேன்.

பத்மாவதியின் சகோதரர் நமது கட்சியின் உறுப்பினர். தோழர் செல்வராஜ் மிகச்சிறப்பாக தொழிலாளர்களை சங்க ரீதியாக திரட்டுவதில் ஆற்றல் மிக்கவர் அதேபோல அவர்களைப் போராட வைப்பதிலும், போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதிலும் சிறந்த ஆற்றல் உடையவர். ஆர் பாலகிருஷ்ணன் தொழிற்சங்க போராட்டத்தில் தூக்கு தண்டனை வரை போய் மீண்டு வந்தவர். பத்மா மறைந்துவிட்ட பின்னர் தோழர் செல்வராஜ் மீதி காலத்தை தொழிலாளி வர்க்கத்திற்கு மேலும் மேலும் தொண்டு செய்வதன் மூலம் தனது துயரத்திலிருந்து விடுபடவேண்டும் என்றும் சுப்பராயன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. யின் பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம், செயற்குழு உறுப்பினர் நா. பெரியசாமி, எச்.எம்.எஸ். சங்கத்தின் தலைவர் டி.எஸ். ராஜாமணி, எச்.எம்.எஸ்.கட்டிட தொழிலாளர் சங்கம் செயலாளர் மனோகரன், தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில பொது செயலாளர் கே. இரவி, துணைப்பொதுச்செயலாளர் என். செல்வராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், மாவட்ட பொருளாளர் யூ.கே.சுப்பிரமணியன், சி. தங்கவேல், கட்டிட தொழிலாளர் சங்க மாநில நிர்வாகிகள் சென்னை துரைசாமி, சேலம் முனுசாமி, ஈரோடு சின்னசாமி, திருச்சி சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# பி.சி.ஏ. நிறுவனத்தில் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கிடுக

### முதல்வரிடம் இரா.முத்தரசன் கோரிக்கை

திருவள்ளூரில் இயங்கும் பி.சி.ஏ. நிறுவனத்தில் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில், தமிழ்நாடு முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசீலிப்பதாக கூறினார். இச்சந்திப்பின்போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், ஏஐடியூசி மாநில துணைப் பொதுச் செயலாளர் கே.இரவி, சிபிஐ திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளர் வி.சரவணன் உடன் இருந்தனர்.



# மே தின கொடியேற்று விழா

மே தின கொடியேற்று விழா தமிழகம் முழுவதும் சிறப்பாக நடைபெற்றது.

**வேலூர்:** வேலூர் மாவட்டம், முத்தம்பட்டி 3 ரோட்டில் மே தின கொடியேற்று நிகழ்ச்சி மாவட்ட குழு உறுப்பினர் எம்.ஜி.தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஏ.சி.சாமிகண்ணு, சுந்தரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேதின கொடியினை மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர் அண்ணாமலை நன்றி கூறினார்.

**விருதுநகர் :** விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மேதின பேரணி பொதுக் கூட்டம் நடைபெற்றது. தேசிய குழு உறுப்பினர் ஜி.பழனிச்சாமி எக்ஸ்எம்எல்ஏ, தி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி., எஸ்.பழனிக்குமார், கோவிந்தன், பொன்னுபாண்டியன் எக்ஸ்.எம்.எல்.ஏ. உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இராஜபாளையத்தில் ஏஐடியுசி, சிஐடியு சார்பில் மேதின பேரணி நடைபெற்றது. சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்எம்பி, சிபிஎம் பாலபாரதி எக்ஸ் எம்எல்ஏ, சிபிஐ வி.இரவி, விஜயன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். சாத்தூரில் எஸ்.பழனிக்குமார், சாமிநாதன், ஜான்ராஜா, எஸ்.எஸ்.முத்து, ஏ.எஸ்..சண்முகையா உள்பட பலரும், சிவகாசியில் ஏஐடியுசி மாவட்டத்தலைவர் சமுத்திரம், வட்ட செயலாளர் ஜீவா உள்ளிட்டோரும்,

விருதுநகரில் பாலமுருகன், சக்கணன், முத்துக்குமார், முருகேசன் உள்ளிட்டோரும், திருவில்லிபுத்தூரில் பலவேசம், மூர்த்தி, செல்வம் உள்ளிட்டோரும், அருப்புக்கோட்டையில் செந்தில்குமார், முனியசாமி, கரியமால் உள்ளிட்டோரும், ஆலங்குளத்தில் நடராஜன், பிரணவமனி உள்ளிட்டோரும், திருச்சுழியில் செல்வம், பெரியண்ணன், தங்கரா, குருசாமி உள்ளிட்டோரும், ஆர்.ஆர்.நகரில் பாலமுருகன், சுப்புராஜ் உள்ளிட்டோரும், சேத்தூரில் கணேசமூர்த்தி, ராஜா, அய்யணன், வரதராஜ் உள்ளிட்டோரும், சத்திரப்ட்டியில் இராமச்சந்திரன், மோகன், சுந்தர்ராஜன் உள்ளிட்டோரும் மாவட்டம் முழுவதும் மே தின கொடியேற்றுவிழா, பேரணி, பொதுக்கூட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்:** திருவாரூர் நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், ஏஐடியுசி தொழிற்சங்கமும் இணைந்து மாவட்டக்கட்சி அலுவலகத்தில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பி.எஸ்.மாசிலமணி கொடியேற்றினார். திருவாரூர் நகரின் கொடிக்கால்பாளையத்தில் 7வது வார்டு செயலர் முகமது ஆசிக் கொடியேற்றினார்.

கொடிக்கால்பாளையம் கடைத்தெருவில் முகமது இசாக் கொடியேற்றினார். மேலத்தெருவில் செல்வமணி கட்சி கொடிஏற்றினார். திருவாரூர் நகரின் கிடாரங்கொண்டான் சேரன் நகரில் மாரியப்பன் நகர செயலர் கொடி ஏற்றினார். கிடாரங்கொண்டான் பகுதியில் ராஜேந்திரன் நினைவு கொடிக்கம்பத்தில் கட்சிக்கொடியை வீ.தர்மதாஸ் ஏற்றிவைத்தார். கிடாரங்கொண்டான் மார்க்கெட் பகுதியில் இளம்பரிதி கொடியேற்றி வைத்தார். விளமல் பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஏஐடியுசி மாவட்டத்தலைவர் ஆர்.செல்வம் கொடியேற்றினார். நுகர்பொருள் வாணிபக்கழகம் மேலாளர் அலுவலகத்தில் கா.பாலதண்டாயுதம் ஏஐடியுசி கொடியை ஏற்றினார். நவீன ஆரிசி ஆலை முன்பு நகர துணைச் செயலாளர் எஸ்.செல்வம் கொடியேற்றினார். கப்பி தொழிலாளர்கள் சங்கத்தின் ஏஐடியுசி கொடியை கே.மகாலிங்கம் கொடிஏற்றி வைத்தார். அஞ்சல் அலுவலகத்தில் அகில இந்திய புறநிலை ஊழியர் சங்க கொடியினை பி.எஸ்.மாசிலாமணி ஏற்றிவைத்தார். சாலையோரத்தெரு வியாபாரிகள் சங்க கொடியை எம்.ஏ.மாரியப்பன் ஏற்றி வைத்தார்.




**மன்னார்குடி:** மன்னார்குடியில் சிஐடியு, ஏஐடியூசி சார்பில் நடத்திய மேதினக்கூட்டத்தில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித், சி.பி.எம்.சட்டமன்றக்குழுத் தலைவர் நாகை மாலி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

**வட சென்னை:** வடசென்னையில் திருவொற்றியூர் தொகுதிக் குழு சார்பாக, எல்லையம்மன் கோவில் மணலி நெடுஞ்சாலை சந்திப்பில் மூத்த தோழர் ஜீவானந்தம் மே தினக் கொடியை ஏற்றிவைத்தார்.

**பல்லாவரம்:** காஞ்சிபுரம் – செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ஆலந்தூர் தொகுதிக்கு உட்பட்ட நாகல்கேணி, பல்லாவரம் பேருந்து நிலையம் க.பல்லாவரம் ஆகிய 4 இடங்களில், தொகுதி செயலாளர் ஏழுமலை, ஜனசக்தி இதழாளர் இசைக்கும்மணி, மாதர் சங்கத்தின் தரணி அம்மாள், பல்லாவரம் கிளைச் செயலாளர் ரவி ,ஆலந்தூர் தொகுதி செயலாளர் முனுசாமி ஆகியோர் மேதினக் கொடியை ஏற்றி வைத்தனர். மாவட்டக்குழு உறுப்பினர் ஜா.பூபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் பெருமன்ற தலைவர் பிரவீண் குமார், செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட பலரும் பங்கேற்று முழக்க மிட்டனர்.

**காஞ்சிபுரம்:** தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் பொழிச்சலூர் கிளை சார்பில் மே தின கொடியேற்றுதல், கட்டுமான தொழிலாளர்களுக்கு சங்க அடையாள அட்டை வழங்கல் மற்றும் சங்கத்தின் 19ம் ஆண்டு விழா பேருந்து முனையம் அருகில் நடைபெற்றது.

கிளை சங்க தலைவர் பொன்.நாகப்பன் தலைமையில், கிளை செயலாளர் ஜி.செல்வராஜ் அனைவரையும் வரவேற்க, மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் எம்.ஜஹாங்கீர் கொடியேற்றிய பின் மேதின சிறப்புரையாற்றினார். கட்டட சங்க மாவட்ட செயலாளர் பி.ரவிச்சந்திரன் சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கினார். கட்டட சங்க மாவட்ட துணை தலைவர் பம்மல் ராஜேந்திரன், பழங்குடி மக்கள் சங்க மாவட்ட தலைவர் முனுசாமி வாழ்த்துரை வழங்கினார்கள். துணை தலைவர்கள் எம். மணி, அமுதா, உதவி செயலாளர்கள் குப்பு, ஜி.தாமோதரன் முன்னிலை வகித்தனர். பி.ஆறுமுகம் நன்றி கூறினார்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு தலைமை தபால் நிலையம் அருகிலிருந்து ஏஐடியுசி, சிஐடியு இணைந்து பேரணியாக புறப்பட்டு பழைய பேருந்துநிலையம் வந்தடைந்தனர்.

அங்கு நடைபெற்ற பொது கூட்டத்திற்கு ஏஐடியுசி மாவட்ட தலைவர் எம்.சங்கையா தலைமை தாங்கினார். சிஐடியு மாவட்ட தலைவர் கே.சேஷாத்திரி வரவேற்புரையாற்றினார். சிபிஐ மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், சிஐடியு மாநில துணை பொதுசெயலாளர் வி.குமார், ஏஐடியுசி மாவட்ட பொதுசெயலாளர் எம்.ஜஹாங்கீர், மோட்டார் வாகன மாவட்ட செயலாளர் வி.நாராயணன், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழு கன்வீனர் வி.கலைச்செல்வி ஆகியோர் மேதின சிறப்புரையாற்றினர்.

மின்வாரிய ஊழியர் சங்க மாநில பொருளாளர் என். அருள்தாஸ், கூட்டுறவு சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் வி.ஆதிமூலம், கட்டட சங்க மாவட்ட செயலாளர் பி.ரவிச்சந்திரன், கண்டோன்மென்ட் சங்க செயலாளர் பி.பாலகிருஷ்ணன், விர்கோ தொழிற்சங்க செயலாளர் வி.குமரவேல், செக் பாயிண்ட் எஸ். வாதிராசன், ஊரி செயலாளர் வி.ராமு மற்றும் ஏஐடியுசி, சிஐடியு தொழிற்சங்க தோழர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம் >>

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.